Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 மாசி 06 புதன்கிழமை (18.02.2015) பக்கங்கள் 20 ஓசை – 141

– ஐ.நா.அறிக்கை ஒத்திவைப்பு –

## கவலையும் மகிழ்ச்சியும் } இல்லை



(லண்டன்)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் போர்க குற்ற விசாரணை அறிக்கையை வெளியிடுவது, 6 மாத காலத்துக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது கவலையையோ அல்லது மகிழ்ச்சியையோ அளிக்கவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித் துள்ளார். இதுதொடர்பாக பி.பி.சி. தமிழோசைக் குக் கருத்துத் தெரிவித்துள்ள அவர்,

இலங்கையின் புதிய அரசு இந்த விடயத் தில் ஒரு நம்பகத்தன்மை வாய்ந்த விசாரணை நடத்துவதாக உறுதி யளித்து, விசாரணை அறிக்கையை வெளியிடுவதை ஒத்திவைக்கக் கோரியிருந்தது. விசாரணை அறிக்கை ஒத்திவைப்பு என்பது, இந்த இடைப்பட்ட காலத்தில் மேலும் புதிய விடயங்களை விசார ணைக் குழுவின் முன்வைக்கவும் வழிவகுக்கலாம். எனவே இந்தக் காலகட்டத்தில் ஐ.நா. மனித உரிமைக் கவுன்சிலுடன் ஒத்துழைப்பது அவசியம் என்றும் அவர் கூறினார்.

## காத்திரமான விடயங்களுடன் தாமதமான அறிக்கை வெளிவரும்

### என்கிறார் சுமந்திரன்



(யாழ்ப்பாணம்)

மார்ச் மாதம் வெளிவரவி ருந்த ஜெனிவா மனித உரிமை மீறல் அறிக்கை தாமதமாக வெளி யாவது வருத்தத்தை அளித்தா லும் அது வெளியாகும் போது இன்னும் காத்திரமான முறையி லும் மேலும் பல விடயங்களை உள்ளடக்கியதாக வெளியிடப் படும் என தாம் நம்புவதாக கூட் டமைப்பின் நாடாளுமன்ற உறுப் பினர் சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந் திப்பில் இதனை அவர் தெரி வித்தார்.

சர்வதேச விசாரணை இடம் பெறும் அதேசமயம் ஐ.நா.வின் கண்காணிப்பில் உள்ளக விசா ரணையும் சமாந்தரமாக இடம் பெறவேண்டும் என்பதில் நாம் உறுதியாகவே இருக்கிறோம்.

தற்போது மார்ச் மாதத்தில்

(19) ஆம் பக்கம் பார்க்க

—விசாரணை அறிக்கை ஒத்திவைப்பு—

# கூட்டமைப்பே பொறுப்பு




## குற்றம் சாட்டுகிறார் கஜேந்திரகுமார்

(யாழ்ப்பாணம்)

மனித உரிமை மீறல் விசாரணை அறிக்கை ஒத்தி வைக்கப்பட்டமையானது தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைமைக்குத் தெரியாமல் நடந்திருக்க முடியாது. இத்தீர்மானம் தொடர்பில் அவர்கள் கவலை கொண் டாடினால் அது ஒரு கபடநாடகம் தமிழ் மக்களிடம் இருந்து தப்பிக்கொள்வதற்காக நடாத்துகின்ற நாடகம், எனவே விசாரணை அறிக்கை ஒத்திவைப்பிற்கு அவர் களே பொறுப்பேற்கவேண்டும். எந்தவிதமான நிபந்த னையும் இன்றி ஆட்சிமாற்றத்துக்கு ஆதரவு அளித்தது தமிழ் மக்களுக்கு செய்த பெரும் துரோகம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றம் சுமத்தியுள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ வாறு குற்றம் சுமத்தினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் கொள்கைரீதியாக முடிவு எடுப்பவர்கள் சம

(19) ஆம் பக்கம் பார்க்க

## தேசிய அரசாங்கத்தில் இணையத்தயார்

### கூட்டமைப்பு அறிவிப்பு

(கொழும்பு)

தேசிய அரசாங்கத்தில் இணைந்து கொள்ளத்தயாரென தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சீனாவின் சின்குவா செய்திச்சேவைக்கு பேட்டியளித்த கூட்டமைப்பின் ஊட கப்பேச்சாளர் சுரேஷ்பிரே மச்சந்திரன் தெரிவித்துள் ளதாவது,

எதிர்வரும் ஏப்ரல்மாதம் நடைபெறவுள்ள பொதுத்தேர் தலுக்குப்பின்னர் அமைக்கப்பட வுள்ள தேசிய அரசாங்கத்தில் இணைந்து கொள்ளுமாறு அர சாங்கம் அழைத்தால் அது

(19) ஆம் பக்கம் பார்க்க

## இளைஞன் உயிரிழப்பு

யாழ்.பண்டத்தரிப்பு சந்தியில் தனியார் பேருந்து மோதியதில் சைக்கிளில் பயணித்த இளை ஞர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 8.15 இற்கு இடம்பெற்றுள்ளது.

(19) ஆம் பக்கம் பார்க்க

## கிழக்கு அமைச்சரவையில் பங்கேற்கிறது கூட்டமைப்பு

கிழக்கு மாகாண சபையில் இரண்டு அமைச்சுப் பதவிகளையும், உதவி தவிசாளர் பதவியையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான இணக்கப்பாடு காணப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர் பி.அரியநேந்திரன் தெரிவித்தார்.

எந்த அமைச்சுகளை கையேற்பது என்பது தொடர்பான அறிவித் தலை எதிர்வரும் 24ஆம் திகதி வெளியிடவுள்ளதாக அவர் குறிப் பிட்டார்.

## வீட்டுச் சுவர் வீழ்ந்து குழந்தை நசுங்கிப் பலி

யாழ்.சுன்னாகம், கந்தரோடை விக்கிராலை நலன்புரி முகாமி லுள்ள வீடொன்றின் சுவர் இடிந்து விழுந்ததில் இரண்டு வயது பெண் குழந்தை நசுங்கிப் பலியானது. இந்த பரிதாபச் சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றது. இதில் ரமேஸ் பிரியங்கா(வயது -2) என்ற குழந்தையே உயிரிழந்துள்ளது. வீட்டுக்கு அருகில் விளையாடிக் கொண்டிருந்த சிறுமி மீது சுவர் இடிந்து விழுந்தது என்றும், சிறுமியின் சடலம் தெல்லிப்பளை ஆதார வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மைத்திரிபால சிறிசேன
தமிழ்மக்கள் பெருமளவில்
அழிவுக்குள்ளான
யுத்தத்தின் இறுதிக்
காலத்தில் மகிந்தவின்
சிம்மாசனத்தில் இருந்து
யுத்தம் நடத்தியவரே....

– வட மாகாண சபையின்
இனவழிப்புத் தீர்மானத்தில்

தமிழரசுக் கட்சி
அகிம்சைப் போரை
தொடங்காத
49 வது நாள்



# போஷாக்கை வலுப்படுத்த மாணவர்களுக்கு உணவு

உயரப்புலம் மெ.மி. வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் போஷாக்கு மட்டத்தை வலுப்படுத்தும் முகமாக அம் மாணவர்களின் குடும்பங்களுக்கு வடமாகாண விவசாய அமைச்சர் உணவுப் பொருட்களை வழங்கியுள்ளார்.

கடந்த 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சுமார் 3 இலட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களை இவ்வித்தியாலய மாணவர்களின் 116 குடும்பங்களுக்கு அவர் பகிர்ந்தளித்தார்.

அத்துடன் இம் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களையும் வழங்குவதற்கு அவர் முன்வந்துள்ளார்.

உயரப்புலம் மெ.மி. வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களுடன் அவர் நேரில் கலந்துரையாடியதன் பின்னர் இவ்வுதவிகளை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளார். (137)

# படகுகள், வலைகள் தீ வைப்பு; இரண்டு சந்தேக நபர்கள் கைது

(இளவாலை)

இளவாலை கரைதுறைமுகப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகுகள், வலைகள், வாடிகளுக்கு தீ வைத்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் இருவரைத் தாம் கைது செய்துள்ளதாக இளவாலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு படகுகளுக்கு தீ வைக்கப்பட்டதில் இரண்டு படகுகளும் மற்றும் இயந்திரங்கள், வலைகள் உட்பட வாடியும் எரிந்து நாசமாகின.

இதுகுறித்து இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் திங்கட்கிழமை மதியம் மாதகல் பகுதியைச் சேர்ந்த இருவர் சம்பவம் நடந்த இடத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியுள்ளனர்.

ஏற்கனவே அந்த இடத்தில் மோப்ப நாய் சகிதம் பொலிஸார் தேடுதல் நடத்திய சமயம் அங்கிருந்து தடயப்பொருள் ஒன்று கைப்பற்றப்பட்டிருந்தது என்றும், சந்தேக நபர்களது நடமாட்டத்தை அவதானித்த பொதுமக்கள் வழங்கிய தகவலையடுத்து, சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் எனவும், மோப்ப நாய் அவர்களை அடையாளப்படுத்தியது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | புதன்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஆலய தரிசனம் (பக்திப் பாடல்கள்) |
| Am 07.00 | காலைக் கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | கொஞ்சம் கலாட்டா |
| Am 09.55 | காலை செய்திகள் |
| Am 10.00 | ஆரோகனம் |
| Am 10.30 | சிரிக்க சிரிக்க |
| Am 11.30 | அதிர்வுகள் |
| PM 12.30 | Hello DD |
| PM 01.00 | மதிய செய்திகள் |
| PM 01.30 | திரைப்படம் |
| PM 03.55 | மாலை செய்திகள் |
| PM 04.00 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர்வுகள் |
| PM 08.00 | பிரதான செய்திகள் |
| PM 08.30 | Hello DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

# வடமாகாண சபை உறுப்பினர் கனகசுந்தர சுவாமி காலமானார்



(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முல்லைத்தீவு மாவட்ட வடமாகாண சபை உறுப்பினர் வீரவாகு கனகசுந்தர சுவாமி (வயது-67) நேற்று மாலை உயிரிழந்துள்ளார்.

புற்று நோயினால் நீண்டகாலமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார். வவுனியா தனியார் வைத்தியசாலையில் இருந்து யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையிலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

இவர், முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு கிராமங்களில் கிராம அலுவலராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற பின்னர் கடந்த 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இடம்பெற்ற வடமாகாண சபைக்கான முதலாவது தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு வடமாகாண சபைக்கு தெரிவு செய்யப்பட்டார்.

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(ஆவரங்கால்)

ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வித்தியாலய முதல்வர் க.சத்தியவரதன் தலைமையில் வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் பிரதம விருந்தினராகவும், கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி அ.சு. சற்குணராஜா சிறப்பு விருந்தினராகவும், லண்டனைச் சேர்ந்த க.சத்தியவரதன் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

எனவே, இந்நிகழ்விற்கு வருகை தந்து வீர, வீராங்கனைகளுக்கு உற்சாகமளிக்குமாறு பாடசாலைச் சமூகத்தினர் வேண்டி நிற்கின்றனர். (85)

# மது அருந்திய இளைஞர்கள் யாழ்ப்பாணத்தில் கைது

பொது இடத்தில் மது அருந்திய 11 இளைஞர்கள் சட்டவிரோத தடுப்பு பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் கோட்டைக்குப் பின்புறமாகவுள்ள கடற்கரையோர பொழுதுபோக்கு மையத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இந்த இளைஞர்கள் மது அருந்தியுள்ளனர். இதனையடுத்து அவர்களைக் கைது செய்த பொலிஸார் கடும் எச்சரிக்கை செய்த பின்னர் பொலிஸ் பிணையில் விடுவித்தனர்.

அத்துடன் நாளை வியாழக்கிழமை நீதிமன்றில் ஆஜராகவும் உத்தரவிட்டனர். (25)

# சட்டவிரோத மது விற்பனை; நபருக்கு சமூக சேவைக்கு பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருநகர் அடம்பன் வீதிப் பகுதியில் அரச சாராயத்தை சட்ட விரோதமாக விற்பனை செய்த ஒருவருக்கு நீதிமன்றம் தண்டம் விதித்துள்ளது.

குறித்த நபரைக் கைது செய்த பொலிஸார் அவரை யாழ்.நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தியவேளை அவருக்கு ஒரு இலட்சம் ரூபா தண்டம் விதித்ததுடன், 300 மணி நேரம் சமூகசேவை செய்யுமாறு நீதவான் இவருக்கு உத்தரவிட்டுள்ளார். (25)


## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1136

திகதி 16.02.2015

வெற்றி எண்கள்: 08 10 41 44 — ஆங்கில எழுத்து: B

ஜக்பொட் பரிசு ரூ. 1,33,84,780/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 1,33,84,780/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7 | 50,000/= | ரூ. 3,50,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 254 | 1,000/= | ரூ. 2,54,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 452 | 1,000/= | ரூ. 4,52,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11572 | 60/= | ரூ. 6,94,320/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால். | 6005 | 40/= | ரூ. 2,40,200/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 150890 | 20/= | ரூ. 30,17,800/= |
| ஆங்கில எழுத்து | 21884 | 20/= | ரூ. 4,37,680/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 6,446,000/=

எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா. 13,680,100/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2015.02.19 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3817)


# வழிகாட்டல் செயலமர்வு

யாழ்.பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தினால் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றுகின்ற மாணவர்களுக்கான இலவச வழிகாட்டல் ஆலோசனையுடன் கூடிய செயலமர்வு இன்று முதல் ஒருவாரம் பிற்பகல் 4.00 மணி முதல் 5.30 மணி வரை நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வு யாழ்.முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதுடன், மாணவர்களைத் தவறாது இச் செயலமர்வில் பங்குபற்றிப் பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.



பருத்தித்துறை கொட்டடி சித்தி விநாயகர் ஆலய வருடாந்த தேர் உற்சவம் நேற்று வெகு சிறப்பாக இடம்பெற்றது. இதில் விநாயகப் பெருமான் தேரில் எழுந்தருளி வருவதைக் காணலாம். (18)

## குடிநீரைப் பெற்றுக் கொள்வதில் சிரமம்

# புதுக்குடியிருப்பு மக்கள் விசனம் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு சிவ நகர் பகுதியில் உள்ள அறுபதுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடிநீரைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு சிவநகர் பகுதியில் தற்போது 428 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.


இதில் அறுபது குடும்பங்கள் தமக்கான குடிநீரைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன.

அதாவது செம்மண் குன்றுப் பகுதியை அண்மித்த பகுதியில் உள்ள கிணறுகள் உவராகியுள்ளமையால் இப்பகுதி மக்கள் தமக்கான குடிநீரை வேறு இடங்களுக்குச் சென்று பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளதுடன் செபஸ்தியார் கோவிலடிப் பகுதியில் ஒரு பகுதியினரும் தமக்கான குடிநீரை வேறு இடங்களிலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இப் பகுதிகளுக்கு மீள்குடியேற்றத்திற்குப் பின்னர் புதுக்குடியிருப்புப் பிரதேசசபையினால் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வந்த போதும் அது தற்போது நிறுத்தப்பட்டுள்ளது என்றும் இப்பகுதியில் குடிநீர் தட்டுப்பாட்டை எதிர்கொள்ளும் குடும்பங்கள் தெரிவித்துள்ளன.

(63)

# புனரமைப்பற்ற நிலையில் பொன்விழா மண்டபம்



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பொன்விழா மண்டபத்தினைப் புனரமைப்பதற்கு அறுபது இலட்சம் ரூபா நிதி தேவைப்படுவதாக பாடசாலை நிர்வாகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. போரினால் பெருமளவு அழிவுகளை எதிர்கொண்டுள்ள இம்மண்டபம் 2005 ஆம் ஆண்டு கல்லூரியின் பழைய மாணவர்களினால் அமைக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பில் பெரும் போர் இடம்பெற்று புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பொன்விழா மண்டபம் பெரும் சேதங்களை அடைந்த நிலையில் கல்லூரியின் கட்டடங்கள் புனரமைக்கப்பட்டநிலையில் பொன்விழா மண்டபத்தின் சிறு பகுதி புனரமைப்பு வேலைகள் நடைபெற்றுள்ள நிலையில் பொன்விழா மண்டபத்தினை முழுமையாகப் புனரமைப்பதற்கு இன்னமும் அறுபது இலட்சம் ரூபா நிதி தேவைப்படுவதாக பாடசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

(160)

## போக்குவரத்து தரிப்பிடம் இல்லை கதிரிப்பாய் மக்கள் அவலம்

(அச்சுவேலி)

அச்சுவேலி சந்நிதி வீதி கதிரிப்பாய் சந்தியில் பேருந்துத் தரிப்பிடம் இன்மையால் பேருந்துகளில் பயணம் மேற்கொள்வோர் பல்வேறு இன்னல்களைச் சந்திப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதான போக்குவரத்து வீதியாகக் காணப்படும் இந்த வீதிப் பகுதியில் இருந்து பாடசாலை மாணவர்கள் முதல் அலுவலகங்களுக்குச் செல்வோர் மற்றும் ஏனைய தேவைகளின் பொருட்டு செல்வோர் எனப்பலரும் பேருந்து வரும் வரை கால்கடுக்க நிற்பதுடன் மழை, வெய்யில் போன்றவற்றுக்கு மத்தியில் நின்றே பயணம் மேற்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

பயணிகளின் போக்குவரத்து செயற்பாட்டுக்கு மிக அவசியமாகவுள்ள பேருந்துத் தரிப்பிடத்தை அமைத்து பயணிகளின் அசௌகரியங்களை போக்க சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

(85)

# கற்பக விநாயகர் ஆலயத்தின் சைவசமய அறிவுப் பரீட்சை முடிவுகள்

**(நேற்றைய தொடர்ச்சி)**

(யாழ்ப்பாணம்)

வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக் கழகம் பாடசாலை மாணவர்களிடையே நடாத்திய சைவ சமய அறிவுப் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

**தரம் - 10**

ஜெ.மயூரிக்கா (யா/வேம்படி மகளிர் கல்லூரி) 82 புள்ளி, A பெறுபேறு, க.தனுசன் (அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை) 80 புள்ளி, A பெறுபேறு, க.கோகுலன் (யா/இணுவில் மத்திய கல்லூரி), 78 புள்ளி, B பெறுபேறு, க.துளசிகா (யா/கரம்பொன் சிறியபுஸ்ப மகளிர் மகா வித்தியாலயம்), 78 புள்ளி, B பெறுபேறு.

**தரம் - 11**

ம.நவநிலா (யா/காரைநகர் கிழவன்காடுகலா மன்றம்), 80 புள்ளி, A பெறுபேறு, க.அபிராமி (யா/காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி), 78 புள்ளி, B பெறுபேறு, வி.இளவேணி (யா/நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி), 74 புள்ளி, B பெறுபேறு.

**கோலம் போடுதல் போட்டி, மத்திய பிரிவு**

கு.லோஜிகா (யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை), ஸ்ரீ.கவிதா (யா/கோண்டாவில் கைலாசநாதவேதசிவாகம அறநெறிப் பாடசாலை), வ.சுவஸ்திகா (யா/வேம்படி மகளிர் கல்லூரி).

**மேற்பிரிவு**

இ.கிசாந் (யா/இந்துக் கல்லூரி), ர.பிரியதர்சா (யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை), வ.கஜானன் (யா/இந்துக் கல்லூரி).

**மாலை கட்டுதல் போட்டி, மத்திய பிரிவு**

கை.கிருபாகிரி (யா/கோண்டாவில் நெட்டிலிப்பாய் ஸ்ரீகணேசா அறநெறிப்பாடசாலை), ஜெ.ஜெனுசன், ம.மிதுஷா, த.விவேக் (யா/மிருசுவில் அ.த.க.பாடசாலை).

**மேற்பிரிவு**

ச.கஸ்தூரிகா (யா/வேம்படி மகளிர் கல்லூரி), தே.றோமிலா (யாழ்/காரைநகர் ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம்), க.சரணியா (யா/கோண்டவில் கைலாசநாதவேதசிவாகம அறநெறிப்பாடசாலை).

**தோரணம் பின்னுதல் போட்டி, மத்திய பிரிவு**

ச.துவானத் (யாழ்.கோண்டாவில் கைலாசநாதவேதசிவாகம அறநெறிப்பாடசாலை), ச.சிவகரன் (யா/மிருசுவில் அ.த.க.பாடசாலை), ஆ.ஜிவிறாஜ் (யா/பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க. பாடசாலை).

**மேற்பிரிவு**

சி.கஜந்தன் (யாழ்/கோப்பாய் மகா வித்தியாலயம்), ஸ்ரீ.வினுசிகா (யா/அரியாலை ஸ்ரீ துரவடிப் பிள்ளையார் தேவஸ்தான அறநெறிப்பாடசாலை), இ.கிருஷ்ணராஜ் (யா/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி).

(10) **(தொடரும்)**

## கழிவு அகற்றலில் தடங்கல் சுகாதாரம் பேண கோரிக்கை

மாநகரசபையினால் அகற்றப்படும் திண்மக் கழிவுகள் இதுவரை காலமும் கல்லுண்டாய் பகுதியில் வெளியேற்றப்பட்டு வந்தது. தற்போது அப்பிரதேசத்தில் கழிவு வெளியேற்றுவதில் தடை ஏற்பட்டுள்ளதால் மாநகரசபை கழிவகற்றல் நடவடிக்கையைத் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கும் வரை மாநகரசபை எல்லைக்குட்பட்ட குடியிருப்பாளர்கள் மற்றும் அரசு, அரச சார்பற்ற நிறுவனத்தினர் அனைவரும் ஏனைய குடியிருப்பாளர்களுக்கு இடையூறு இல்லாத வகையிலும் நோய்த் தொற்றுக்குள்ளாகாத வகையிலும் வீதிகளை அசுத்தப்படுத்தாது அத்திண்மக்கழிவுகளைப் பேணி சுகாதாரமான சூழலைப் பேண ஒத்துழைப்புத் தந்துதவுமாறு யாழ்மாநகரசபை ஆணையாளர் அறிவித்துள்ளார்.



# கேட்டீர்களா சங்கதியை...

மகிந்த ராஜபக்ஸ ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவதற்கு தேர்தல் பிரசார நிதி வழங்கிய பான் கீ மூனை இலங்கையின் வெளி நாட்டமைச்சர் சந்தித்தார். அவ்வேளையில் ஐ.நாவின் மனித உரிமை ஆணையகத்தால் தயாரிக்கப்பட்ட அறிக்கை அவரிடம் கையளிக்கப்பட்டதா? என இன்னசிட்டி பிரஸ் கேள்வியெழுப்பியுள்ளது.

அவர்கள் இருவரும் சந்தித்துக்கொண்ட வேளையில் மேசையில் காணப்படும் ஆவணம் அறிக்கையா? என இன்னசிட்டி பிரஸ் சந்தேகம் தெரிவித்துள்ளது. இருவரும் சந்தித்துக்கொண்ட போது கைத்தொலை பேசியில் இரகசியமாக எடுக்கப்பட்ட காணொளியொன்றை இன்னசிட்டி பிரஸ் தனது யூ ரியூப் தளத்தில் வெளியிட்டுள்ளது.

இறுதிக்கட்ட இனவழிப்பில் சரணடைவு நாடகத்தை நடத்திய முக்கிய போர்க்குற்றவாளியான பாலித கோகண வெளிநாட்டமைச்சர் மங்கள சமரவீரவின் பின்னால் காணப்படுகிறார். தவிர இக் காணொளியில் ராஜபக்ஷவின் மற்றொரு ஊதுகுழலான பிரசாத் காரியவசமும் காணப்படுகிறார்.

கொலையாளிகளின் இச்சந்திப்பு நியூயோர்க் ஐ.நா அலுவலகத் தில் நடந்து முடிந்த கையோடு அறிக்கை விடுத்த மங்கள சமரவீர, போர்க்குற்ற அறிக்கையைக் காலம் தாழ்த்துமாறு வேண்டுகோள் விடுத்தார்.

திரை மறைவில் நடைபெற்ற நாடகத்தை வெளியுலகிற்கு எப்படியெல்லாம் மொழிபெயர்க்கிறார்கள்?

ராஜபக்ஸவின் தேர்தல் நிதியாக பல மில்லியன்கள் பணத்தை வழங்கிய பான் கீ மூன் இலங்கை சென்ற காலத்தில், மங்கள சமரவீரவும் மகிந்த ராஜபக்சவின் தேர்தல் வெற்றிக்காக உழைத்துக் கொண்டிருந்தார்.

மகிந்த ராஜபக்ஸவிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையில் மங்கள சமரவீர பிரதான பாத்திரம் வகித்தார்.

மகிந்த ராஜபக்ஸவிற்கு 11 வருடங்களாக பான் கீ மூனின் தொடர்பிருப்பதைப் போன்றே மங்கள சமரவீரவும் தொடர்பிலிருந்தார்.

அமெரிக்காவின் இரண்டு அடியாட்களான பான் கீ மூனும், மங்கள சமரவீரவும் ஒரு தேசிய இனத்தின் அவலங்களை ஐ.நா அலுவலகத்தில் அழிக்கும் காட்சி" என "இனியொரு" என்ற இணையத்தளம் எழுதியிருக்கிறது.

**அப்படியென்றால்?**

புதிய அரசு கற்கண்டும் பொங்கலும் கரும்பும் தரும் என்று சொன்னதெல்லாம் என்னவாச்சு?

புதிய அரசாங்கத்துக்கு வலு உற்சாகமாக தமிழ் மக்களில் பெரும்பாலானவர்கள் வாக்களித்தார்களே! அதற்கு என்ன அர்த்தம்?

நிபந்தனையில்லாமல் தமிழ் மக்களை "புதிய அரசுக்கு - புதிய ஆட்சிக்கு, புதிய மாற்றத்துக்கு வாக்களியுங்கள்" என்று தமிழ்க் கூட்டமைப்புச் சொன்னதே, இப்பொழுது இதற்கெல்லாம் என்ன சொல்லப்போகிறது? என்ன செய்யப்போகிறது?

புலம்பெயர் தமிழர்கள் இங்கே - நாட்டிலுள்ள தமிழ்ச் சனங்களுக்கு ரிமோட் கொன்ரோலில் கட்டளையிட்டு, "மைத்திரி தலைமையிலான ரணில் ஆட்சிக்கு ஆதரவளியுங்கள். அந்த ஆதரவு அமெரிக்காவைக் குளிர்விக்கும். அமெரிக்கா குளிர்ந்தால் அனைத்தும் நடக்கும். அப்பொழுது தமிழ் மக்களுக்கு இனிப்புக் கிடைக்கும்" என்றார்களே.

இப்பொழுது என்ன சொல்லப்போகிறார்கள்?

பாவற்காயில் பூசிய இனிப்பு மெல்ல மெல்லக் குறைந்து பழையபடி எல்லாம் கசப்பாகத் தொடங்கியிருக்கிறது என்பதை ஒவ்வொரு சம்பவங்களும் எடுத்துச் சொல்கின்றனவோ...!

இதனால்தான் வடக்கு முதலமைச்சர் விக்கினேஸ்வரனும் சுரேஸ் பிரேமச்சந்திரனும் "புதிய அரசாங்கத்தை நம்ப முடியாது" என்று சலித்துக்கொள்கிறார்கள் போலும்.

ஆனால், இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஒரு பெரிய கெட்டிக்காரர்.

சில மாதங்களுக்கு முன் முன்னைய "மகிந்த அரசு மங்கள சமரவீரவுக்கு இழைத்த அநீதி மிகக் கொடுமையானது" என்றெல்லாம் அழுது வடித்து எழுதிய பத்திரிகைகள் இனி "மங்கள தமிழின எதிர்ப்பாளர். போர்க்குற்றங் களை மறைக்கும் தந்திரசாலி" என்றெல்லாம் எழுதப்போகின்றன, குற்றம்சாட்டப்போகின்றன.

நடந்ததும் நடந்து கொண்டிருப்பதும் ஆட்சி மாற்றமா அல்லது காட்சி மாற்றமா?

ம. அய்யம்பிள்ளை

எப்போதும் அச்சத்தில் இருப்பதை விட ஆபத்தை ஒருமுறை சந்திப்பதே மேல்.
- டெஸ்கார்டஸ்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## பழிபோட ஒரு எதிரி வேண்டும்!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனக்கு வாகான ஒரு பொது எதிரி இருந்துகொண்டிருக்காவிட்டால் எப்படித் தடுமாறிப் போகும் என்பதை இப்போது எல்லோரும் கண்டிருப்பர்.

மகிந்த அரசே தொடர்ந்தும் இருந்திருந்தால் கூட்டமைப்பினருக்கு தேர்தல்களை வீரவசனங்களோடும் பகைமுழக்கங்களோடும் எதிர்கொள்ளச் சிரமமிருந்திருக்காது.

தங்களது அரசையே மத்தியில் கொண்டுவந்திருப்பதாக வாயடிக்கப்போய் இப்போது தேர்தல் நெருங்கும்போது என்ன சொல்வது என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாற்றங்களை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன் மைத்திரியைக் கொண்டுவந்து, அவரது அரசின் தேசிய நிறைவேற்றுச் சபையில் பேசி தீர்வைக் கொண்டு வருவோம் என்று அடித்துக் கூறியவர்கள், இப்போது நிறைவேற்றுச் சபையில் அந்த விடயத்தை எடுக்காமலே இருப்பதற்காக, தே.நி.சபைக் கூட்டத்தைப் புறக்கணிக்கிறார்கள்.

மைத்திரி அரசுடனும் பேசிச் சரிவராது என்று, வரப்போகும் தேர்தலுக்காக இப்போதே காட்ட நினைக்கிறார்கள். அதனால் தான், தாங்கள் கொண்டுவந்ததாகச் சொல்லிக்கொண்ட அரசின் தேசிய நிறைவேற்றுச் சபையில் தாங்கள் இருப்பதை – அங்கு எதையும் பேச விரும்பாததை கமுக்கமாக வைத்துக்கொண்டு, மைத்திரிக்கு 13வது திருத்தத்தை முன்தள்ளச் சொல்லி புதுடில்லியைக் கேட்டுக் கொள்கிறார்கள்.

அதாவது, மைத்திரியிடம் பேசியும் தீர்வை கொண்டுவரக்கூடிய நம்பிக்கை தங்களிடம் இல்லை என்பதை இந்தியாவுக்குச் சொல்வதுபோல, தமிழ்மக்களுக்குத் தங்கள் தேர்தல்கால செய்தியை மெல்லக் கசியவிடுகிறார்கள் – "இந்த அரசிடமிருந்தும் நாங்கள் தீர்வை எடுக்கப்போவதில்லை" என்ற செய்திதான் அது!

13வது திருத்தத்தை தீர்வின் அடிப்படையாகக் கூட கொள்ள முடியாது என்று ஒருபுறம் இப்போதும் சொல்லிக் கொண்டிருப்பவர்கள், "அங்கு வரும் மைத்திரியிடம் 13வது திருத்தத்தைக் கொஞ்சம் முன்தள்ளி விடுங்கள்" என்று புதுடில்லிக்குச் சொல்கிறார்களாம்!

13வது திருத்தத்திலிருந்து பேச்சை ஆரம்பிப்பதற்குத்தான் இந்தியாவும் சர்வதேசமும் இலங்கை அரசும் கூட பலகாலமாகத் தயாராக இருக்கிறதே.... தயாரில்லாதது இவர்களல்லவா! என்ன நாடகம் பாருங்கள்!

அடுத்த நாடகம் முதலமைச்சர் விக்னேஸ்வரன் மூலம் நடத்தப்பட்டது. பொதுத்தேர்தலை தாங்கள் கொண்டுவந்த நட்பு அரசுடன் சேர்ந்துநின்று எதிர்கொள்ள முடியாதென்பதால், நிறைவேற்றப்பட்டதே மாகாண சபையில் அவர் கொண்டுவந்த இனவழிப்புத் தீர்மானம்.

மகிந்த மட்டுமல்ல, மைத்திரியும் போர்க்குற்றவாளி, பொன்சேகாவும் குற்றவாளி, இலங்கை அரசுகள் எல்லாமே குற்ற அரசுகள் தாம் அதனால் இனவழிப்புக் குற்றவாளிகள் மீது விசாரணை வேண்டும் என்று தெளிவாகத் தீர்மானத்தை நிறைவேற்றி விட்டு, ஜனாதிபதி மைத்திரியிடம் போய்க் கைகுலுக்கியபடி, "அது உங்களுக்கு எதிரானது இல்லை" என்று புன்முறுவல் காட்டுகிறார்.

அப்போ அந்தத் தீர்மானமே தேர்தலுக்கான நாடகம் அல்லாமல் வேறென்னவாம்! இலங்கை அரசுகள் எல்லாவற்றையுமே பழிசொல்லித் தீர்மானத்தைக் கொண்டுவந்துவிட்டு, அமைச்சர் கரு ஜயசூரியவிடம் போய்நின்று, "மதநம்பிக்கையுள்ள அமைச்சர் நமக்கு நல்லது செய்வார்" என்று சுருதிமாற்றி ஏன் பாராட்டுப் பத்திரம் வாசிக்க வேண்டும்?

அதுமட்டுமல்ல, "இந்த அரசு எங்களுடைய அரசு; இனிமேல் இணக்க அரசியலே எங்கள் பாதை" என்று ஏன் தாஜா பண்ண வேண்டும்? "பொதுத்தேர்தல் முடியட்டும், அதன்பிறகு நாங்கள் உங்களிடம் சிரித்தபடி வருவோம்" என்ற முன்னறிவிப்பா அது?

ஆக, த.தே.கூ. தேர்தலை எதிர்கொள்ள எதிரி அரசு இருப்பதுதான் வாலாயம். இந்தமுறை அதை அவசரமாக உருவாக்க வேண்டியதில் சில தடுமாற்றங்கள் வெளிப்பட்டுவிட்டது. - *ஆசிரியர்*

# அமைச்சு பதவிகளை நினைப்போமானால் உண்மைகள் இல்லாது போய்விடும்

## –முன்னாள் அமைச்சர் அதாவுல்லா

(கொழும்பு)

அரசியலில் ஒவ்வொரு முறையும் அமைச்சுப் பதவிகளை மாத்திரம் பெறுவது என்று நாங்கள் நினைத்துக் கொண்டால் எங்களுக்குள் உண்மைகள் இல்லாமல் போய்விடும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

இவ்வாறு தேசிய காங்கிரஸின் தலைவரும் முன்னாள் உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா தெரிவித்தார்.

மக்களாகிய உங்களது உணர்வுகளோடு நானும் சேர்ந்து மிக இலகுவாக அமைச்சுப் பதவியினைப் பெற்றிருக்க முடியும். இதற்காக நான் உங்களை பாவித்திருக்கவும் முடியும்.

ஆனால் தேசிய அரசியலில் நாங்கள் உங்களுக்காக சேர்த்து வைத்திருக்கின்ற அந்த நற்பெயர் இருக்கிறதே. தேசிய காங்கிரஸுக்கும், அக்கரைப்பற்று மண்ணுக்கும் அது என்றும் போதும் என்னும் விடயத்தைத்தான் நான் கூறிக் கொள்கின்றேன்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்கள் பற்றி இலங்கையில் மட்டுமல்லாது சர்வதேசத்திலும் பேசப்பட்டு வருகின்றது.விசித்திரமான, வித்தியாசமானதொரு அரசியல் கலாசாரத்தை நாம் இன்று கண்டுள்ளோம். யார் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்பதனை மக்களால் புரிந்து கொள்ள முடியாதளவுக்கு நிலைமைகள் உள்ளன என்றார்.

# வடக்கு - கிழக்கு முதலமைச்சர்கள் விரைவில் சந்திக்க திட்டம்

(கொழும்பு)

வடமாகாண முதலமைச்சர் மற்றும் கிழக்கு மாகாண முதலமைச்சர் விரைவில் சந்திக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சராக பொறுப்பேற்றுள்ள ஹாபீஸ் நஸீர் அஹமட் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.அவர் மேலும் கூறுகையில்,

தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையில் நீண்டகால உறவு காணப்படுகின்றது. அதனை மேலும் வலுப்படுத்துவது அவசியமாகும். அத்துடன் வடக்கிலும் கிழக்கிலும் சிறுபான்மை இனத்தை சேர்ந்தவர்களே முதலமைச்சர்களாகக் காணப்படுகின்றனர். இரண்டு சமூகத்திற்கும் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. இவை தொடர்பில் ஒற்றுமைப்பாட்டுடன் தீர்வைப் பெற்றுக் கொள்வதே அவசியமானது.

ஆகவே அவை தொடர்பாகவும் நல்லெண்ணத்தின் அடிப்படையிலும் வடக்கு முதல்வரை விரைவில் சந்திக்கவுள்ளேன் என்றார்.

# ஐக்கியத்திற்கான தேடலை சிவராத்திரி உருவாக்கும்

## – ஜனாதிபதி நம்பிக்கை

(கொழும்பு)

இலங்கையிலுள்ள ஏனைய சமூகங்களுடன் ஐக்கியத்துடனும் நட்புறவுடனும் வாழும் நீண்ட பாரம்பரியத்தைக் கொண்ட இலங்கைவாழ் இந்துக்கள், சிவராத்திரி பண்டிகையின் ஆன்மீக உணர்வுடன் நல்லிணக்கம் மற்றும் புரிந்துணர்வினூடாக ஐக்கியத்திற்கான அவர்களது தேடலில் மேலும் பலத்தைப் பெற்றுக்கொள்வர்.

இவ்வாறு மகா சிவராத்திரி தினத்தினை முன்னிட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அனைத்து மக்களுக்கும் விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது மகா சிவராத்திரி விழாக் கொண்டாட்டத்தில் உலகெங்கிலுமுள்ள இந்துக்களுடன் இணைந்துகொள்ளும் இலங்கை வாழ் இந்துக்களுக்கு இந்த வாழ்த்துச் செய்தியை அனுப்பி வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இவ்விழா, இப்பிரபஞ்சத்தின் மூல உருவாக்கத்தையும், இரட்சிப்பையும் குறிக்கும் வகையில் சிவபெருமான் சிவ தாண்டவம் அல்லது அண்ட நடனமாடியதை நினைவுகூர அனுஷ்டிக்கப்படுவதாக நம்பப்படுவதால் விசேட முக்கியத்துவத்தைப் பெறுகிறது.

இப்பண்டிகையுடன் தொடர்புடைய பல்வேறு கிரியைகளில் விரதம் அனுஷ்டித்தல், கோயிலில் இரவில் விழித்திருத்தல், தானம் வழங்குதல், விளக்கேற்றல், சிவபெருமானைப் புகழ்ந்து தேவாரம் பாடுதல், போன்றவையும் அடங்குகின்றன.

இப்பண்டிகையின் முக்கிய அம்சமான விளக்கேற்றும் நிகழ்வு, அறிவு மற்றும் புரிந்துணர்வின் ஒளியில் அறியாமை இருளை அகற்றி ஞானத்தைத்தேடும் மானிட சமூகத்தின் உறுதியான முயற்சிகளை அடையாளப்படுத்துகிறது.

மேலும் இது சமூகத்தில் உள்ள எல்லா வேறுபாடுகளையும் கடந்து மக்கள் மத்தியில் ஐக்கியத்திற்கும் மகிழ்ச்சிக்குமான தேடலைக் குறித்து நிற்கிறது.

இந்த மகாசிவராத்திரி தினத்தில் வளமானதொரு எதிர்காலத்திற்கான தமது எதிர்பார்ப்புகள் நிறைவேற இலங்கைவாழ் இந்துக்களுக்கு எனது நல்லாசிகள் என தெரிவித்துள்ளார்.

# எந்தப்பிரச்சினையையும் பேசித்தீர்க்க முடியும்

## வடமாகாண ஆளுநர் நம்பிக்கை

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் கடந்த காலங்களில் பாரிய அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது. ஆனால் இன்னும் பல பிரச்சினைகள் உள்ளன. எந்தவிடயங்களையும் கலந்துரையாடல் மூலமே பேசித் தீர்க்க முடியும். என வடமாகாண ஆளுநர் பளிஹக்கார தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் யாழ் பொதுநூலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் கடந்த காலங்களில் பாரிய அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது.

ஆனால் இன்னும் பல பிரச்சினைகள் மற்றும் தேவைகள் உள்ளன. எனினும் இடம்பெற்ற அபிவிருத்திகளை குறைவாகவோ அல்லது நிறைவாகவோ எண்ணக்கூடாது. எமக்கு இருக்கின்ற பிரச்சினைகளை ஆக்கபூர்வமாக பேசுவதனூடாக வெற்றிபெற முடியும்.

அரசு எண்ணுவது போலவே சுமூகமான கலந்துரையாடல்கள் மூலம் தீர்வை எட்ட முடியும் என்றே நானும் நம்புகின்றேன். கலந்துரையாடல்கள் இன்றி பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது.

வடக்கு மாகாணத்தில் உள்ள முதலமைச்சர், அமைச்சர்கள், உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என அனைவருக்கும் எனது அலுவலக கதவுகள் எப்போதும் திறந்திருக்கும்.

அத்துடன் நானும் ஒரு அரச ஊழியன் தான். மக்களுடைய வரிப்பணத்தில் சம்பளம் பெற்று வருகின்றோம். எனவே அந்த மக்களுடைய பிரச்சினைகள், தேவைகள் தொடர்பில் நாம் முழுமையான கவனம் செலுத்த வேண்டும்.

மேலும் வடக்கு முதலமைச்சர் எதிர்காலத்தில் செய்ய வேண்டிய விடயங்கள் குறித்து தெரிவித்துள்ளார். அவற்றைச் செய்வதற்கு நானும் ஒத்துழைப்பு வழங்குகின்றேன் என அவர் தெரிவித்தார்.



**எல்லா நேரமும் கற்றலுக்கான துடிப்புடன் இயங்கும் குழந்தையின் சின்னஞ்சிறு மூளை, தனது சுற்றத்தின் ஒவ்வோர் அசைவில் இருந்தும் ஒவ்வோர் ஒலியில் இருந்தும் கற்கிறது. இலை உதிர்வதும், செடி துளிர்ப்பதும், இசை ஒலிப்பதும், பறவை பறப்பதும் குழந்தைக்குக் கல்விதான். இவற்றில் இருந்து வேரோடு பிடுங்கி வகுப்பறைக்குள் நடுவதால், அறிவு அதிவேக வளர்ச்சி அடையும் என எண்ணுவது மூடநம்பிக்கை.**

# அப்படி என்னதான் இருக்கிறது பின்லாந்து கல்வி முறையில்?

உலக அளவில் "கல்வியின் மெக்கா" என அழைக்கப்படுவது பின்லாந்து. அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் பொருளாதாரத்தில் எவ்வளவு மேம்பட்ட நிலையில் இருந்தாலும், அனைத்து பிரச்னைகளையும் தீர்ப்பதற்கான டொலர் என்ற மந்திரித்த தாயத்தை வைத்திருந்தாலும், அவர்களால் கல்வியில் பின்லாந்துடன் போட்டிபோட முடியவில்லை.

"பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான அமைப்பு" (OCED-organisation for economic co-operation and development) என்பது வளர்ச்சியடைந்த நாடுகளின் கூட்டமைப்பு. இதன் சார்பில், தங்கள் நாட்டு மாணவர்களின் கல்வித் திறன் குறித்த ஆய்வு அவ்வப்போது நடைபெறும். இதற்கு PISA-Programme for international students assessment என்று பெயர்.

மற்ற நாடுகள் விருப்பப்பட்டால், இதில் சேர்ந்துகொள்ளலாம். இந்த ஆய்வில் உலகின் மற்ற நாடுகள் பின்வரிசையில் இருக்க.... பின்லாந்து எப்போதும் முன்வரிசையிலேயே இடம் பிடிக்கிறது. அப்படி என்னதான் இருக்கிறது பின்லாந்து கல்விமுறையில்?

பின்லாந்தில் ஏழு வயதில்தான் ஒரு குழந்தை பள்ளிக்கூடம் செல்லத் தொடங்குகிறது. ஒன்றரை வயதில் ப்ளே ஸ்கூல், இரண்டரை வயதில் ப்ரீ-கே.ஜி., மூன்று வயதில் எல்.கே.ஜி., நான்கு வயதில் யு.கே.ஜி என்ற சித்திரவதைகள் அங்கே இல்லை.

கருவறையில் இருந்து வெளியில் வந்ததுமே குடுகுடுவென ஓடிச்சென்று பள்ளிக்கூடத்தில் போய் அமர்ந்து கொள்ளும் எந்த அவசரமும் அவர்களுக்கு இல்லை. எல்லா நேரமும் கற்றலுக்கான துடிப்புடன் இயங்கும் குழந்தையின் சின்னஞ்சிறு மூளை, தனது சுற்றத்தின் ஒவ்வோர் அசைவில் இருந்தும் ஒவ்வோர் ஒலியில் இருந்தும் கற்கிறது. இலை உதிர்வதும், செடி துளிர்ப்பதும், இசை ஒலிப்பதும், பறவை பறப்பதும் குழந்தைக்குக் கல்விதான். இவற்றில் இருந்து வேரோடு பிடுங்கி வகுப்பறைக்குள் நடுவதால், அறிவு அதிவேக வளர்ச்சி அடையும் என எண்ணுவது மூடநம்பிக்கை.

ஏழு வயதில் பள்ளிக்குச் செல்லும் பின்லாந்து குழந்தை, அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு கிட்டத்தட்ட ஆண்டின் பாதி நாட்கள்தான் பள்ளிக்கூடம் செல்கிறது. மீதி நாட்கள் விடுமுறை. ஒவ்வொரு நாளும் பாடசாலை இயங்கும் நேரமும் குறைவுதான். அந்த

**சே.க. அருண்குமார்**

**பின்லாந்தில் ஏழு வயதில்தான் ஒரு குழந்தை பள்ளிக்கூடம் செல்லத் தொடங்குகிறது. 13 வயது வரை முதலாம் பிள்ளை இரண்டாம் பிள்ளை என்ற தரம் பிரிக்கும் கலாசாரம் கிடையாது; முன்னேற்ற ரிப்போர்ட் கொடுத்து பெற்றோரிடம் கையெழுத்து வாங்கி வரச் சொல்லும் வன்முறை கிடையாது.**

நேரத்திலும்கூட, படிப்புக்குக் கொடுக்கப்படும் அதே முக்கியத்துவம் இசை, ஓவியம், விளையாட்டு, மற்றும் ஆய கலைகள் (64) க்கும் முக்கியத்துவம் உண்டு. ஒவ்வொரு பள்ளியிலும் ஓர் ஓய்வறை இருக்கும். படிக்கப் பிடிக்கவில்லை அல்லது சோர்வாக இருக்கிறது என்றால், மாணவர்கள் அங்கு சென்று ஓய்வு எடுக்கலாம்.

முக்கியமாக, 13 வயது வரை முதலாம் பிள்ளை இரண்டாம் பிள்ளை என்ற தரம் பிரிக்கும் கலாசாரம் கிடையாது; முன்னேற்ற ரிப்போர்ட் கொடுத்து பெற்றோரிடம் கையெழுத்து வாங்கி வரச் சொல்லும் வன்முறை கிடையாது. தங்கள் பிள்ளையின் கற்றல் திறன் குறித்து தெரிந்துகொள்ள வேண்டும் என பெற்றோர்கள் விரும்பினால், தனிப்பட்ட முறையில் விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளலாம்.

1. கற்றலில் போட்டி கிடையாது என்பதால், பரீட்சைகளில் அதிக புள்ளிகள் எடுக்கும் மன உளைச்சல்கள் மாணவர்களுக்கு இல்லை.

2. சக மாணவர்களைப் போட்டியாளர்களாகக் கருதும் மனப்பாங்கும் இல்லை.

3. இவர்களுக்கு வீட்டுப்பாடம் தரப்படுவது இல்லை.

4. மாணவர்களுக்கு எந்தப் பாடம் பிடிக்கிறதோ அதில் இருந்து அவர்களே வீட்டுப்பாடம் செய்து வரலாம்.

5. ஒவ்வொரு பாடசாலையிலும் ஒரு மருத்துவர் இருப்பார். அவர், மாணவர்களின் உடல்நிலையை தனிப்பட்ட முறையில் கவனித்து ஆலோசனைகள் வழங்குவார்.

6. ஒரு பாடசாலையில் அதிகபட்சமாக 600 மாணவர்கள் இருக்கலாம் அதற்கு மேல்அதிக எண்ணிக்கை கூடவே கூடாது.

7. முக்கியமாக பின்லாந்தில் தனியார் பள்ளிக்கூடமே கிடையாது. அங்கு கல்வி என்பது முழுக்க முழுக்க அரசின் வசம். கோடீசுவரராக இருந்தாலும், நடுத்தர வர்க்கத்தினராக இருந்தாலும், ஏழையாக இருந்தாலும்.... அனைவரின் குழந்தைகளும் ஒரே பள்ளிக்கூடத்தில்தான் படிக்க வேண்டும். அனைவருக்கும் சம தரமுள்ள கல்வி அங்கு உத்தரவாதப்படுத்தப்பட்டு உள்ளது. அதனால்தான் பின்லாந்தில் 99 சதவிகிதம் குழந்தைகள் ஆரம்பக் கல்வியைப் பெற்றுவிடுகின்றனர்.

8. அதில் 94 சதவிகிதம் பேர் உயர்கல்விக்குச் செல்கின்றனர். "ரியூஷன்" என்ற அருவருப்பான கலாசாரம், அந்த நாட்டுக்கு அறிமுகமே இல்லை.

9. பரீட்சைகளை அடிப்படையாகக் கொள்ளாத இந்தக் கல்வி முறையில் பயின்றுவரும் மாணவர்கள்தான், உலகளாவிய அளவில் நடைபெறும் பல்வேறு பரீட்சைகளில் முதல் இடங்களைப் பிடிக்கின்றனர். இது எப்படி என்பது கல்வியாளர்களுக்கே புரியாத புதிர். அந்தப் புதிருக்கான விடையை, ஐ.நா சபையின் ஆய்வு முடிவு அவிழ்த்தது.

உலகிலேயே மகிழ்ச்சியாக இருக்கும் குழந்தைகள் பற்றிய தரவரிசை ஆய்வு ஒன்றை, ஐக்கிய நாடுகள் சபை ஒவ்வோர் ஆண்டும் வெளியிடுகிறது. இதில் பின்லாந்து எப்போதும் முன்னணியில் இருக்கிறது. மகிழ்ச்சியின் நறுமணத்தில் திளைக்கும் குழந்தைகள், அறிவை ஆர்வத்துடன் சுவைப்பதில் புதிர் எதுவும் இல்லை.

பின்லாந்து கல்விமுறையின் இத்தகைய சிறப்புகள் குறித்து அறிந்து வருவதற்காக, உலகமெங்கும் உள்ள கல்வியாளர்களும், பிரதிநிதிகளும் அந்த நாட்டை நோக்கிக் குவிகின்றனர். உலகின் 56 நாடுகளில் இருந்து 15,000 பிரதிநிதிகள் ஒவ்வோர் ஆண்டும் பின்லாந்து செல்கின்றனர். நாட்டின் அந்நியச் செலாவணியில் கணிசமான சதவிகிதம் கல்விச் சுற்றுலாவின் மூலமே வருகிறது.

ஆனால், இப்படி தங்களை நோக்கி வீசப்படும் புகழ்மாலைகளை பின்லாந்தின் கல்வியாளர்களும் அமைச்சர்களும் ஓடோடி வந்து ஏந்திக்கொள்வது இல்லை. "பின்லாந்து கல்விமுறைதான் உலகிலேயே சிறந்தது எனச் சொல்ல முடியாது. ஆய்வில் எல்லா நாடுகளும் பங்கேற்காத நிலையில் இப்படி ஒரு முடிவை வந்தடைய முடியாது. எங்களைவிட சிறந்த கல்விமுறையும் இருக்க முடியும்" என்கிறார்கள். இல்லாத நாற்காலியைத் தேடி எடுத்து ஏறி அமர்ந்து, தனக்குத்தானே முடிசூட்டிக்கொள்ளும் தற்பெருமையாளர்கள் நிறைந்த உலகத்தில் இந்த மனநிலை அதிசயமானதுதான்.

கல்வியில் இருந்து நாம் பெறவேண்டிய சாராம்சம் இதுதான். இத்தகைய சிறந்த கல்விமுறையை உருவாக்கியதிலும், பராமரிப்பதிலும் பின்லாந்தின் ஆசிரியர்களுக்கு முக்கிய பங்கு உண்டு.

சொல்லப்போனால் பின்லாந்து ஆசிரியர்கள்தான் இதற்கு முழுமுதல் காரணம். பின்லாந்தில் ஆசிரியர் பணி என்பது, மிகுந்த சமூக கௌரவம் உடையது. அரசின் கொள்கை வகுக்கும் முடிவுகளில், திட்டங்களின் செயலாக்கத்தில் ஆசிரியர்களுக்கு முக்கிய பங்கு உண்டு. மூன்றில் ஒரு பின்லாந்து குழந்தைக்கு, ஆசிரியர் ஆவதுதான் தன் வாழ்நாள் லட்சியம். அதே நேரம் அங்கு ஆசிரியர் ஆவது அத்தனை சுலபம் அல்ல!

உயர்தர வகுப்பில் சிறந்து விளங்கும் மாணவர்களில் இருந்து ஆசிரியர் பயிற்சிக்கு மாணவர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். ஐந்து ஆண்டுகள் உண்டு, பயிற்சிக் கல்லூரிகளில் சேர்ந்து கடும் பயிற்சி எடுக்க வேண்டும். பிறகு, ஆறு மாத காலம் ராணுவப் பயிற்சி. ஒரு வருடத்துக்கு வெவ்வேறு பாடசாலைகளில் நேரடியாக வகுப்பறையில் ஆசிரியர் பயிற்சி. குழந்தை உரிமைப் பயிலரங்கங்களில் பங்கேற்பது, நாட்டின் சட்ட திட்டங்கள் குறித்த தெளிவுக்காக தேசிய அமைப்புகளிடம் இருந்து சான்றிதழ், தீயணைப்பு, தற்காப்புப் பயிற்சி, முதலுதவி செய்வதற்கான மருத்துவச் சான்று.... என ஆசிரியர் பயிற்சிக்கு சுமார் ஏழு வருடங்களைச் செலவிட வேண்டும்.

இப்படி ஆசிரியர்களை உருவாக்கும் விதத்தில் பின்லாந்து மேற்கொள்ளும் சமரசம் இல்லாத முயற்சிகள்தான், அங்கு கல்வியில் மாபெரும் மறுமலர்ச்சியை உருவாக்கி இருக்கிறது!

பாடம் படிப்போம், பின்லாந்து கல்விப் போராளிகளிடமிருந்து....

# இராணுவ கட்டமைப்பில் பாரிய மாற்றங்கள்

## நேற்று முன்தினம் முதல் அமுல்



இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தயா ரட்நாயக்கவின் வழிகாட்டலில் இலங்கை இராணுவத்தில் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த மாற்றங்கள் நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ஜயனாத் ஜயவீர தெரிவித்துள்ளார்.

தற்போதைய இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் தயா ரத்நாயக்கவின் பணிப்பில் சேவை அவசியம் கருதி இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்படி இராணுவ சுயாதீனப படையின் அதிகாரியாகச் செயற்பட்ட மேஜர் ஜெனரல் லலித் தலுகல இராணுவ தலைமையக அபிவிருத்தி பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தலைமையகத்தின் கட்டளை அதிகாரியாக இருந்த லால் பெரேரா கிழக்கு மாகாண தலைமையகத்துக்கு மாற்றப்பட்டுள்ளார்

மேஜர் ஜெனரல் சுமேத பெரேரா தலைமையகத்தின் கட்டளையதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேஜர் ஜெனரல் சன்ன பிகுணதிலக்க இலங்கை இராணுவத்தின் சுயாதீனப்படையின் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேஜர் ஜெனரல் மனோ பெரேரா தலைமையக மத்திய கட்டளைஅதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்

வன்னி கட்டளைஅதிகாரியாக இருந்த பொனிபொஸ் பெரேரா தலைமையக அதிகாரி அலுவலகத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்

தற்போது இராணுவ தலைமையகத்தில் பணியாற்றும் மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த யாழ்பாண கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்

மேஜர் ஜெனரல் ஜே வலகம கிழக்கின் தலைமையக கட்டளை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்

யாழ்ப்பாண தலைமையக அதிகாரியாக இருந்த மேஜர் ஜெனரல் ஜெகத் அல்விஸ், இராணுவ தலைமையகத்துக்கு மாற்றப்பட்டுள்ளார்

வன்னிக்கான கட்டளைத் தளபதியாக அமல் கருணாசேகர நியமிக்கப்பட்டுள்ளார்

இலங்கையின் இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் ஜகத ரபுக்பொத்த நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 23ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் அவர் இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# விமல் வீரவன்சவின் மனைவியை கைது செய்ய உத்தரவு



முன்னாள் வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்சவின் மனைவி ஷசி வீரவன்சவை கைது செய்யுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க உத்தரவிட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு அமைச்சர் அமரதுங்க நேற்று முன்தினம் இந்த உத்தரவினை பிறப்பித்துள்ளார்.

முன்னாள் அமைச்சரின் மனைவிக்கு எதிராக மோசடி குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

கடவுச் சீட்டுக்களில் பிறந்த திகதி உள்ளிட்ட தகவல்களை மாற்றியமைத்து பெற்றுக்கொண்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

சாதாரண கடவுச் சீட்டு மற்றும் ராஜதந்திர கடவுச்சீட்டுக்களில் பெயர், பிறந்த திகதி உள்ளிட்ட தகவல்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான விசாரணைகள் முடிவடைந்துள்ள நிலையில் பெரும்பாலும் ஷசி வீரவன்சவை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்வார்கள் என உயர் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.


# முன்னாள் பாதுகாப்பு செயலாளருக்கு விசேட சலுகைகள் இல்லை


## அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவிப்பு

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்சவுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படமாட்டாது என்று அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத ஆயுதங்கள் மற்றும் தனியார் பாதுகாப்பு நிறுவனங்கள் தொடர்பில் விசாரணை செய்ய கோத்தாபய ராஜபக்சவின் வீட்டுக்கு சென்ற குற்றப் புலனாய்வு பொலிஸார் அவரின் வாக்குமூலங்களை பெற்றனர்.

இதனை விசேட சலுகையாக கருதி ரவி கருணாநாயக்கவிடம் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு பதிலளித்த ரவி கருணாநாயக்க, அவர் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் தேவையான சாட்சியங்கள் இருப்பின் சாதாரண நடைமுறையின் படி கோத்தபாய ராஜபக்ச, குற்றப்புலனாய்வுத்துறை அலுவலகத்





துக்கு அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுவார்.

கோத்தாபய முக்கியஸ்தராக கருதப்படமாட்டார்.

சட்டத்துக்கு முன்னால் அனைவரும் சமமாகவே கருதப்படுவர் என்றார்.

இதேவேளை தமது சொத்துக்களை வெளிப்படுத்துமாறு கோத்தாபய ராஜபக்சவுக்கு தாம் விடுத்த சவாலுக்கு இன்னும் பதில் வழங்கப்படவில்லை என்றும் கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

# தரக்குறைவான டீசலை திருப்பி அனுப்ப நடவடிக்கை

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட 30,000 மெற்றிக் தொன் தரக்குறைவான டீசல் மீண்டும் திருப்பி அனுப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக மின்வலு மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

சிங்கப்பூர் நிறுவனம் ஒன்றிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட டீசல் தொகையே நேற்று முன்தினம் திருப்பி அனுப்பப்பட்டதாக அவர் சுட்டிக காட்டியுள்ளார்.

சுத்திகரிப்பின் போது குறித்த டீசல் தரக்குறைவானதென இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகளால் உறுதி செய்யப்பட்டதாக பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

# பெண்களை ஏமாற்றி துஷ்பிரயோகம்; இவரைக் கண்டால் அறிவிக்கவும்



இணையத்தளங்களின் ஊடாக பெண்களை ஏமாற்றி துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் நபர் ஒருவர் தேடப்பட்டுவருகின்றார். இவரைக் கண்டவர்கள் உடனடியாக பொலிஸுக்கு அறிவிக்குமாறு பொதுமக்களிடம் பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்துள்ள முறைப்பாடுகள் தொடர்பிலேயே இந்த சந்தேகநபரை கைது செய்வதற்கு தேடிவருவதாக தெரிவித்துள்ள பொலிஸார், அதற்காக மக்களின் ஒத்துழைப்பையும் கோரியுள்ளனர். திஸாநாயக்க முதியன்செலாகே சுஜித் நிலந்த என்ற இந்த சந்தேகநபர் வதிவிடத்திலிருந்து தப்பியோடியிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலக்கம்161/12, பன்சலவத்தை, களுகல்பிட்டிய,ஸ்பிரிங்வெலி வீதி, பதுளை என்ற முகவரியிலேயே இவர் வசித்துள்ளார்.

சந்தேகநபர் தொடர்பில் தகவல்கள் கிடைத்தால் 011-2422176 அல்லது 011-2326979 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு அறிவிக்குமாறும் பொலிஸ் திணைக்களம் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

## - வெலேசுதாவின் போதைப் பொருள் கடத்தல் இரகசியம் -

# கியர்பெட்டிகள் இல்லாத 26 உழவியந்திரங்கள் மீட்பு



சர்வதேச போதைப்பொருள் வர்த்தகரான வெலே சுதா என்றழைக்கப்படும் சமந்த குமாரவினால் களனி, சிங்காரமுல்லை பிரதேசத்தில் நடாத்தப்பட்டு வந்த போதைப்பொருள் களஞ்சிய சாலை நேற்றுமுன்தினம் சோதனையிடப்பட்டதில், அங்கிருந்து கியர பெட்டிகளற்ற 26 டிரெக்டர் ரக வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த டிரெக்டர் வண்டிகளிலுள்ள கியர் பெட்டிகளை அகற்றி, அவ்விடங்களில் வைத்தே போதைப்பொருள் கடத்தப்பட்டிருக்கலாம் என தாம் சந்தேகிப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன தெரிவித்தார்.

அத்துடன், இவ்வாறு கைப்பற்றப்பட்ட டிரெக்டர் வண்டிகளில் தலா 20 கிலோகிராம் போதைப் பொருட்கள் மறைக்கப்பட்டு கடத்தப்பட்டிருக்கலாம் என்றும் இந்த வண்டிகளில் வைத்து மேற கொள்ளப்பட்ட போதைப்பொருள் வர்த்தகத்துக்கும் வெலே சுதாவுக்கும் தொடர்பு உள்ளதா என்பது குறித்து விசாரணை நடாத்தி வருவதாகவும் பொலிஸ பேச்சாளர் கூறினார்.

மில்லேட் மெசிப.்.ர்கயூஷன் ரக டிரெக்டர்களான இவை, பாகிஸ்தானில் தயாரிக்கப்பட்டவையாகும். கியர் பெட்டிகள் இருக்க வேண்டிய இடங்களில் மறைக்கப்பட்டே பாகிஸ்தானிலிருந்து இந்த வண்டிகள் ஊடாக இலங்கைக்கு போதைப்பொருள் கடத்தப்பட்டிருக்கலாம்.

இலக்கம். 875, பியகம - களனி வீதி, சிங்காரமுல்லை என்ற விலாசத்திலேயே மேற்படி களஞ்சியசாலை நடாத்தப்பட்டு வந்தது பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினரே இந்த களஞ்சியசாலையை சோதனையிட்டு வாகனங்களை கைப்பற்றினர்.

இந்தக் களஞ்சியசாலையானது, மாதத்துக்கு 1 இலட்சத்து 85 ஆயிரம் ரூபா அடிப்படையில் பிரித்தானியாவைச் சேர்ந்த ஜெரோம் டக்ளஸ் என்பவரால் வாடகைக்கு பெறப்பட்டுள்ளது. இருப்பினும் அதில், இக்ரம் மற்றும் இம்ரான் என்ற பெயர்களைக் கொண்ட பாகிஸ்தானியர்கள் இருவரே சேவையில் ஈடுபட்டு வந்துள்ளனர் என்று விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்த டிரெக்டர் வண்டிகள் துறைமுகத்திலிருந்து எவ்வாறு கொண்டுவரப்பட்டன, அவற்றின் மூலம் எவ்வாறு போதைப் பொருட்கள் கடத்தப்பட்டுள்ளன என்பது தொடர்பில் விசாரணை நடாத்தி வருவதாக பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினார்.

# இலங்கையில் ஒற்றுமையை கட்டியெழுப்ப வேண்டும்

## ரணில் அழைப்பு

வெறுப்புணர்வுகளை களைந்து செயற்படவேண்டும் இலங்கையில் ஒற்றுமையை கட்டியெழுப்ப வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.


மகா சிவராத்திரியை முன்னிட்டு வெளியிட்ட செய்தியிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

இருளில் இருந்து வெளிச்சத்துக்கு வருவதற்கான நிலையையே சிவராத்திரி உணர்த்துகிறது.

நாட்டில் இன்று சகோதரத்துவத்துடனான அரசியல் கலாசாரம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. அத்துடன் அனைத்து சமூகத்தினரும் இணைந்து வாழும் சூழல் ஏற்பட்டுள்ளது என்றும் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். எனவே இதன்போது வெறுப்புணர்வை தவிர்க்க திடசங்கற்பம் பூண வேண்டும் என்றார்.

# வடக்கில் கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்தியே முன்னிலை பெற்றுள்ளது

## சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு



(கிளிநொச்சி)

வடக்குமாகாணத்தில் ஐந்து மாவட்டங்கள் இருக்கின்ற நிலையில் கிளிநொச்சி மாவட்டம் மட்டும் கடந்த ஐந்து வருடங்களில் பெருந்தொகையான நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுள்ளது. இதனை நாம் மிகக்கடுமையாக உழைத்தே கிடைக்கச் செய்துள்ளோம் என நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக்குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார் கிளி.சிவபாதகலையக மாணவர்களுக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலணிகள் மற்றும் புத்தகப்பைகளை வழங்கி வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

எமது தமிழினம் கல்வியால் மேம்படவேண்டும் என்பது எமது முக்கியமான கொள்கை அதனடிப்படையில் நாம் பாடசாலைகளின் அபிவிருத்தியில் அதிக கரிசனையுடன் செயற்பட்டு வருகின்றோம் அதிலும் கிராமப்புற மாணவர்களும் கல்வியில் மேம்படவேண்டும் என்பது எமது முக்கியநோக்கு அதற்கமைவாக நாம் கிராமப்புறப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றோம். அதுமட்டுமன்றி ஒரு மாணவனின் கல்விக்கு குடும்பத்தினரால் உதவ முடியாத நிலை காணப்படும் சந்தர்ப்பங்களில் அந்த மாணவன் கல்வியைத் தொடருவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுப்பதையும் எமது கடமையாகக் கருதி செயற்பட்டு வருகின்றோம். தென்னிலங்கை மாணவர்கள் பெற்றிருக்கின்ற கல்வி சார்ந்த அனைத்து வாய்ப்புக்களையும் வசதிகளையும் எமது மாணவர்களும் பெறவேண்டும் என்பதற்காக நாம் மிகக்கடுமையாக உழைத்தோம். அதில் கணிசமான வெற்றியையும் பெற்றிருக்கின்றோம் எனவும் மேலும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் வித்தியாலய அதிபர் திருமதி விஜயநாதன் பாடசாலை அபிவிருத்திச்சங்கச் செயலாளர் மோகனதாசன் பொன்னகர் வடக்கு மாதர் கிராம அபிவிருத் திச்சங்கத்தலைவி சறோஜாதேவி அதன் செயலாளர் புவனேஸ்வரி ஆகியோரும் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# நூல் வெளியீட்டு நிகழ்வு

வள்ளுவர்புரம் யோ.புரட்சி எழுதிய "ஆஷா நாயும் அவளும்" என்ற சிறுகதை நூல் மு.ப வியாழக்கிழமை, முல்லைத்தீவு, விசுவமடு இளங்கோபுரம் பாடசாலைக்கு எதிரில் உள்ள காட்டில், மு.ப. 10 மணிக்கு வெளியிடப்படவுள்ளது.

லண்டன் மற்றும் இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகத்தினால் வெளியிடப்படும் இந்த நூலுக்கு லண்டன் வாழ் எழுத்தாளர் வவுனியூர் உதயணன் வாழ்த்துரை வழங்கியிருக்கிறார். இந்த நூலுக்கும் எழுத்தாளரின் தாயார் செல்லமுத்து அவர்கள் தன் கையெழுத்திலேயே ஆசியுரை வழங்கியுள்ளார்.

♦ ♦ ♦ ♦ ♦ ♦

வவுனியா தமிழ்ச் சங்கம் வெளியிடும், வன்னியூர் செந்தூரனின் "கற்சிலைமடு நாகம்மாள் ஆலய சரித்திரம்" எனும் வரலாற்று ஆய்வு நூல் வெளியீடு, எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கற்சிலைமடு அருள் மிகு நாகம்மாள் ஆலய மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வவுனியா தமிழ்ச் சங்கத்தின் ஸ்தாபகரும் செயலாளருமாகிய தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் இடம் பெறும் இவ்விழாவில் ஆசியுரையினை ஆலய அர்ச்சகர், சிவத்திரு.கந்தையா சிவராசாவும் வாழ்த்துரையினை வைத்தியர் நா.வன்னியசிங்கமும் நிகழ்த்துவர்.


தலைமையுரையினைத் தொடர்ந்து வெளியீட்டுரையினை முல்லைத்தீவு மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சமாசத்தின் பொது முகாமையாளர், சி.வேதவனம் ஆற்றுவார். நூலின் முதல், சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட, விமர்சன உரையினை கற்சிலைமடு மகா வித்தியாலய அதிபர், சி.நாகேந்திரராஜாவும் ஏற்புரையினை நூலாசிரியரும் நிகழ்த்துவர்.

# மண்ணெண்ணை கொள்வனவு

(வரணி)

வரணிப்பிரதேசத்தில் கடந்த காலம் போலல்லாது இந்த ஆண்டு விவசாய செய்கை கூடுதலாக நடைபெறுகிறது. தற்போது மண்ணெண்ணை விலைகுறைக்கப்பட்ட நிலையில் விவசாயிகள் தமது விவசாய நிலங்களை உழுது பண்படுத்தி வருகின்றனர்.

தற்போது பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிளைகளில் மண்ணெண்ணை, மா, சீனி, மீன்ரின் போன்ற சில அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (150)



# சொல்லாத சேதி

எஸ். அனசூயா

## வரவுசெலவுத்திட்டம் - கசீனோக்கள் - கொழும்பு துறைமுக நகரம்




இந்த ஆண்டின் ஆரம்பத்தில் மாற்றத்தை முன்னிறுத்திய புதிய ஆட்சி தோன்றியமை குறித்து ஒட்டுமொத்த இலங்கையர்களுமே மகிழ்ச்சி வெளியிட்டிருந்தனர். குறிப்பாக, புதிய அரசாங்கம் முன்வைத்த வரவுசெலவுத்திட்டம் இந்த மகிழ்ச்சியை இன்னும் அதிகரிக்கவே செய்திருந்தது.

எரிபொருள்களின் விலைக் குறைப்பு, அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு சம்பள அதிகரிப்பு, 13 அத்தியாவசிய பொருள்களின் விலைகள் குறைப்பு என்ற அறிவிப்புக்கள், இலங்கையர் அனைவரையும், எந்தக் கட்சி அரசியல் பேதங்களுக்குமப்பால் மகிழ்ச்சியில் ஆழ்த்தவே செய்திருந்தது.

ஆனால், இந்த மகிழ்ச்சி நீடிக்குமா என்ற சந்தேகத்தை, கொழும்பு ஆங்கில ஊடகங்களில் வெளியாகும் பல்வேறு பொருளாதார செய்திகளும், ஆய்வுகளும் ஏற்படுத்தத் தொடங்கியுள்ளன. பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் புதிய அரசாங்கம் வெளியிட்டுள்ள பல்வேறு அதிரடி அறிவிப்புக்களும், நீண்டகால அடிப்படையில் இலங்கைப் பொருளாதாரத்தைப் பாதிப்படையவே செய்யும் என்று இப்போது மெல்ல மெல்ல விமர்சனங்கள் எழத் தொடங்கியுள்ளன.

இந்த வரவுசெலவுத்திட்டம் பணவீழ்ச்சியை அதிகரிக்கச் செய்யும் என்று moodys எனப்படும் ஆய்வு நிறுவனம் எச்சரித்திருப்பதாக கொழும்பு ஆங்கிலப் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியிருந்தன.

15 சதவீதமேயான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு 47 சதவீத சம்பள அதிகரிப்பு வழங்கியிருப்பது அவர்களது கொள்வனவு திறனை அதிகரிக்கும் என்றாலும், மறுவளமாக அது பணவீக்க நிலைமையைத் தோற்றுவிக்கும் என்று அந்த நிறுவனம் எச்சரித்துள்ளது.





அதுமட்டுமன்றி, அரசாங்கம் எதிர்பார்ப்பதுபோன்று கசீனோக்கள் உள்ளிட்ட பெரிய வியாபாரங்கள் மீதான அதீத வரிப்பணத்தை அறவிடக்கூடிய சாத்தியப்பாடுகளையும் கேள்விக்குட்படுத்தியுள்ள அந்த நிறுவனம், இது வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறையை அதிகரிக்கச் செய்யும் என்றும், இதனால், முதலீடுகள் குறைவடைய வாய்ப்புண்டு என்றும் கூறியுள்ளது.

இதனிடையே, கசீனோக்களுக்கு எதிரான அரசாங்கத்தின் நிலைப்பாடு காரணமாக, பல கசீனோ முதலீடுகளும் திரும்பிப் போகவிருப்பதாக அறிவிப்புக்களும் வெளியாகியுள்ளன. அவுஸ்ரேலியாவின் ஜேம்ஸ் பாக்கர் இலங்கையில் அமைக்கவிருந்த கசீனோக்களுடன் கூடிய பெரியளவிலான உல்லாச விடுதித் திட்டத்தை, புதிய அரசாங்கத்தின் வரவுசெலவுத்திட்ட அறிவிப்புக்களையடுத்து அவர் கைவிடத் தீர்மானித்துவிட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஜோன் கீல்ஸ் நிறுவனம் தற்போது கொழும்பில் நிர்மாணித்துவரும் அடுக்குமாடி விடுதிகளில் கசீனோக்களை கைவிடவிருப்பதாக அறிவித்துள்ளது.

இவ்வாறு, வரி வருமானத்துக்கு கசீனோக்களை நம்பும் வரவு செலவுத் திட்டமும், கசீனோக்களுக்கு எதிரான அரசின் நிலைப்பாடும், பொருளாதார ரீதியாக நிதிநெருக்கடிக்கே வழிவகுக்கும் என்று பொருளியல் நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதனிடையே, இலங்கையின் மிகப்பெரிய முதலீட்டுத் திட்டம் என்று கருதப்படுகின்ற சீன அரசாங்கத்தின் முதலீட்டுடனான கொழும்பு துறைமுக நகர திட்டத்தை தொடர்வதில் புதிய அரசாங்கம் காட்டிவரும் தயக்கம் இலங்கை பொருளாதாரத்தில் மேலும் பாதிப்புக்களை ஏற்படுத்தலாம் என்று கொழும்பு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. முன்னைய அரசாங்கத்தின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டத்தை தொடரப்போவதில்லை என்று மாற்றத்தை வலியுறுத்திய தேர்தல் பிரசாரங்களின்போதே இன்றைய அரசாங்கத் தரப்பினர் தெரிவித்திருந்தனர். ஆட்சிக்கு வந்த பின்னரும், சூழலியல் பாதிப்புக்களை ஏற்படுத்தலாம் என்று தெரிவித்து திட்டம் மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்படுவதாக அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது.




இப்போது இந்தத் திட்டம் தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால தரப்பில் ஒரு கருத்தும், அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன ஒரு கருத்தும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் கபீர் ஹாசீம் ஆகியோர் ஒவ்வொரு கருத்தும் வெளியிட்டு வருவதால், திட்டத்தின் எதிர்காலம் குறித்த பலத்த சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

மேலைத்தேச அரசாங்கங்களின் அழுத்தமும் சீன முதலீட்டுத் திட்டத்தை தொடர்வதில் புதிய அரசாங்கம் தயக்கம் காட்டக் காரணம் என்றும் ஒரு தரப்பில் தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில், இந்தத் திட்டம் கைவிடப்படுமானால், அதன்மூலம் இலங்கைக்கு கிடைக்கக்கூடியதாக இருக்கும் பல்வேறு பொருளாதார நன்மைகள் கிடைக்காமல் போய்விடலாம் என்று பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டி வருகின்றனர்.

# போராடி வென்றது நியூசிலாந்து



(டுனிடின்)

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் ஸ்கொட்லாந்து அணிக்கெதிரான லீக் போட்டியில் நியூசிலாந்துஅணி மூன்று விக்கெட்டுக்களால் திணறல் வெற்றி பெற்றது.

11ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் அவுஸ்ரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளில் நடைபெற்று வருகின்றது. இதில் ஏ பிரிவுக்கான லீக் போட்டி நேற்று நியூசிலாந்தின் டுனிடினில் நடைபெற்றது. இதில் நியூசிலாந்து மற்றும் ஸ்கொட்லாந்து அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய ஸ்கொட்லாந்து அணி நியூசிலாந்து அணியின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. முதல் நான்கு விக்கெட்டுககளையும் 12 ஓட்டங்கள் எடுப்பதற்குள் பறிகொடுத்தது. இந்நிலையில் ஐந்தாவது விக்கெட்டுக்காக இணைந்த மக்கான், பெர்ரிங்டன் ஜோடி அணியை சரிவிலிருந்து மீண்டது. இந்த ஜோடி ஐந்தாவது விக்கெட்டுக்காக 97 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஏனைய வீரர்களும் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்து வெளியேறினர். நிறைவில் ஸ்கொட்லாந்து அணி 36.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 142 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதில் மக்கான் 79 பந்துகளை எதிர்கொண்டு ஏழு பவுண்டரிகள் அடங்கலாக 56, பெர்ரிங்டன் 80 பந்துகளை எதிர்கொண்டு நான்கு பவுண்டரிகள் அடங்கலாக 50, கிராஸ் 14, டேவே 11 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் டானியல் விட்டோரி, அண்டர்சன் ஆகியோர் தலா மூன்று, லோல்ட், ரிம் சௌத்தி ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இலகுவான வெற்றியிலக்கை நோக்கி ஆடிய நியூசிலாந்து அணிக்கு அதிர்ச்சி அளிக்கும் வகையில் டேவே, வோர்ட்லா ஆகியோரின் பந்து வீசு அமைந்திருந்தது. விரைவாக வெற்றியிலக்கை அடைய வேண்டும் என்ற நோக்குடன் செயற்பட்ட நியூசிலாந்து அணிக்கு விக்கெட்டுக்கள் வேகமாக சரிக்கப்பட நெருக்கடி நிலை ஏற்பட்டது. ஒருவாறு நெருக்கடியை சமாளித்து செயற்பட்ட நியூசிலாந்து அணி மூன்று விக்கெட்டுக்களால் திணறல் வெற்றிபெற்றது. இறுதியில் நியூசிலாந்து அணி 24.5 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் வில்லியம்ஸன் 45 பந்துகளை எதிர்கொண்டு ஆறு பவுண்டரிகள் அடங்கலாக 38, எலைற் 31 பந்துகளை எதிர்கொண்டு ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக 29, அண்டர்சன் 12, குப்ரில் 17, மக்கலம் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் வோர்ட்ல், டேவே ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக போல்ட் தெரிவு செய்யப்பட்டார்.

**ஒரே பார்வையில் போட்டி முடிவு**

| | | | |
|---|---|---|---|
| **ஸ்கொட்லாந்து 142/10 (36.2)** | | | |
| மக்கான் | 56 (79) | அண்டர்சன் | 3/18 |
| பெர்ரிங்டன் | 50 (80) | டானியல் விட்ரோரி | 3/24 |
| கிராஸ் | 14 (18) | போல்ட் | 2/21 |
| டேவே | 11 (19) | ரிம் சௌத்தி | 2/35 |
| **நியூசிலாந்து 146/07 (24.5)** | | | |
| வில்லியம்ஸன் | 38 (45) | டேவே | 3/40 |
| எலைற் | 29 (31) | வோர்ட்ல் | 3/57 |
| குப்ரில் | 17 (14) | | |
| மலக்கலம் | 15 (12) | | |

**மூன்று விக்கெட்டுக்களால் நியூசிலாந்து வெற்றி. ஆட்டநாயகன் : போல்ட்**

## களத்திற்கு வெளியில்...

பெரிய போட்டிகளில் விளையாடும்போது சிறந்த அணியையே களமிறக்க வேண்டும். துரதிஷ்டவசமாக இந்த சிறிய விடயத்தை பாகிஸ்தான் எப்போதும் மனதில் வைத்திருப்பதில்லை. மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இந்தியா - பாகிஸ்தான் போட்டி, துடுப்பாட்டத்திற்கு சொர்க்கமாகத் திகழும் அடிலெய்டில் இந்தியாவுக்கு எளிதான ஆட்டமாக அமைந்துவிட்டது. இதெல்லாம் சாதாரணம், இதைவிட முக்கியமான விடயம் மனக்குழப்பத்துடன் கூடிய அணித்தேர்வு. இது பல இலட்சம் பாகிஸ்தான் இரசிகர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி விட்டது.

**மியான்டாட் (பாகிஸ்தான்).**

அயர்லாந்து அணிக்கு எதிரான போட்டியில் நாங்கள் தோல்வியைத் தழுவியது மிகவும் கடினமான விடயம். 300 ஓட்டங்கள் என்பது போதுமான ஓட்ட எண்ணிக்கையாகும். ஆனால் அன்றைய தினம் அது போதுமானதாக அமையவில்லை. கடைசிக் கட்டத்தில் லெண்டின் சிமன்ஸ், டரன் சமியின் ஆட்டம் நல்ல உத்வேகத்தை அளித்தது. பவர் பிளே மற்றும் கடைசிக் கட்டத்தில் நாங்கள் சிறப்பாக பந்து வீச முயற்சிக்க வேண்டும். களத்தடுப்பிலும் நாங்கள் இன்னும் நன்றாகச் செயற்பட்டு இருக்க வேண்டும். நடுவரிசை ஓவர்களில் நாங்கள் நிறைய ஓட்டங்களை விட்டுக்கொடுத்து விட்டோம்.

**ஜோசன் ஹோல்டர் (மே.தீவுகள் கப்டன்)**

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான போட்டியில் நாங்கள் பெற்றுக் கொண்ட வெற்றி ஒரு சிறப்பானதாகும். இந்த வெற்றியின் மூலம் எங்கள் அணியின் நம்பிக்கை மேலும் அதிகரிக்கும். போல் ஸ்டிர்லிங், எட்ஜாய்ஸ் ஆகியோர் சிறப்பாக ஆடினார்கள். நியல் ஓபிரையன் ஆட்டத்தை வெற்றிகரமாக முடித்தார். வரும் ஆட்டங்களில் வெற்றி பெற்று அயர்லாந்து அணி விலகல் சுற்றுக்கு முன்னேறும் என்று நம்புகிறேன். நாங்கள் எங்களது திறமையை மற்றவர்களிடம் நிருபித்துக் காட்ட விரும்புறோம்.

**வில்லியம் போட்டர் பீல்ட் (அயர்லாந்து அணிக் கப்டன்)**

தென்னாபிரிக்க அணியில் ஸ்ரெய்ன் மிகச்சிறந்த பந்துவீச்சாளர். அவர் நம்பமுடியாத அளவுக்கு சில சமயங்களில் சிறப்பாக வீசக்கூடியவர். அவரை எப்படி விளையாட வேண்டும் என்பதை ஒவ்வொரு துடுப்பாட்ட வீரர்களும் முன்கூட்டியே தீர்மானிக்கவியலாது. அந்தக் கணத்தில்தான் முடிவெடுக்க முடியும், மேலும் ஸ்ரெய்னுக்கு மதிப்பளிப்பது அவசியம். ஆரம்பத்தில் கவனத்துடன் இருக்க வேண்டும், அதே நேரத்தில் வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். களத்தடுப்பில் அவர்கள் மிகவும் துல்லியமாகச் செயற்படக்கூடியவர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களை எடுக்கும் போது கவனமுடன் செயற்படவேண்டும். எனவே பாகிஸ்தான் அணியை விட தென்னாபிரிக்க அணி பலமானது. அதற்கமைய டோனி அனைவரையும் சிறப்பாக வழி நடாத்துவார் என எதிர்பார்க்கின்றேன்.

**சச்சின் (இந்தியா)**

பாகிஸ்தான் வீரர்கள் தோல்வியினால் மனம் தளர்ந்து விட வேண்டாம். ஆட்டத்திறனை துல்லியமாக ஆய்வு செய்தால், இந்திய அணிக்கெதிரான தோல்வி ஒரு மறைமுக ஆசீர்வாதமே. நான் போட்டியைப் பார்த்தவரை நிறைய திறன்கள் வெளிப்பட்டன, ஆனால் உத்தி ரீதியாக முன்னேற்றம் தேவை. பந்துவீச்சைப் பொறுத்தவரை மொகமட் இர்பான், வஹாப் ரியாஸ், யாசிர் ஷா ஆகியோர் நன்றாக வீசுகின்றனர். துடுப்பாட்ட வீரர்கள் ஒரு நல்ல இலக்கை நிர்ணயித்தால் இந்த பந்து வீச்சாளர்கள் நிச்சயம் வெற்றிக்கு இட்டுச் செல்வார்கள். யுனிஸ்கான் அடுத்த போட்டிகளிலும் ஆடுவது அவசியம்.

**இம்ரான்கான் (பாகிஸ்தான்)**

## உலக கிண்ணத் தொடரில் அரங்கேறிய அதிர்ச்சித் தோல்விகள்

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் கணக்கில் கொள்ளப்படாத அணிகள், வலுவான அணிகளுக்கு அதிர்ச்சி வைத்தியம் அளிக்கும் செயல் சமீபகாலங்களில் அதிகரித்து வருகிறது. இந்த வகையில் குட்டி அணியான அயர்லாந்து நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் 2 முறை சம்பியனான மே.தீவுகள் அணிக்கு ஆப்பு வைத்தது. உலக கோப்பை போட்டியில் இதுவரை அரங்கேறிய அதிர்ச்சித் தோல்விகள் வருமாறு:-

♦ 1979ஆம் ஆண்டு லீக் ஆட்டத்தில் அனுபவம் இல்லாத இலங்கை அணியிடம் 47 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா வீழ்ந்தது.

♦ 1983ஆம் ஆண்டில் லீக் ஆட்டத்தில் சிம்பாப்வே அணி 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்ரேலியாவுக்கு அதிர்ச்சி அளித்தது.

♦ 1992ஆம் ஆண்டு லீக் ஆட்டத்தில் சிம்பாப்வே அணியிடம் 9 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணி தோல்வியைத் தழுவியது.

♦ 1996ஆம் ஆண்டு லீக் ஆட்டத்தில் டெஸ்ட் அந்தஸ்து பெறாத கென்ய அணி 73 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மே.தீவுகளை விரட்டியடித்தது.

♦ 1999ஆம் ஆண்டு லீக் ஆட்டங்களில் சிம்பாப்வே அணி 3 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியாவையும், 48 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்காவையும் வீழ்த்தி அதிர்ச்சி அளித்தது. அதே போட்டித்தொடரில் பங்களாதேஷ் அணி 62 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தானை பந்தாடியது.

♦ 2003ஆம் ஆண்டு லீக் ஆட்டத்தில் கென்யா அணி 53 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கையை பதம் பார்த்தது.

♦ 2007ஆம் ஆண்டு லீக் ஆட்டங்களில் பங்களாதேஷ் அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியாவையும், அயர்லாந்து அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தானையும் கலங்கடித்தன. சூப்பர்-8 சுற்றில் பங்களாதேஷ் அணி 67 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்காவை வீழ்த்தி மலைக்க வைத்தது.

♦ 2011ஆம் ஆண்டு லீக் ஆட்டங்களில் அயர்லாந்து அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்தையும், பங்களாதேஷ் அணி 2 விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்தையும் வீழ்த்தி பரபரப்பை ஏற்படுத்தின.

## பணக்கார பயலே

அவுஸ்ரேலிய அணியில் தனது இடத்தைத் தக்கவைக்கப் போராடி வரும் வட்சன், அவுஸ்ரேலிய கிரிக்கெட் வீரர்களில் அதிகம் பணம் ஈட்டுபவராக உள்ளார், 2014ஆம் ஆண்டுக்கான பி.ஆர்.டபிள்யூ.வின் முதல் 50 பணக்கார அவுஸ்ரேலிய விளையாட்டு வீரர்களின் பட்டியலில் வட்சன் 8ஆவது இடத்திலுள்ளார். இந்தப் பட்டியலில் ஜோன்சன் 10ஆவது இடத்திலும், கப்டன் மைக்கல் கிளார்க் 11ஆவது இடத்திலும், வோர்னர் 12ஆவது இடத்திலுமுள்ளனர். வட்சன் கடந்த ஆண்டு ஈட்டிய தொகை 4.5 மில்லியன் டொலர்கள். ஜோன்சன் 4.1 மில்லியன் டொலர்களையும், மைக்கல் கிளார்க் 4 மில்லியன் டொலர்களையும் ஈட்டியுள்ளனர். இந்தப் பட்டியலில் அவுஸ்ரேலிய கூடைப்பந்து வீரர் ஆண்ட்ரூ போகட் 16.2 மில்லியன் டொலர்களுடன் முதலிடம் வகிக்கிறார்.

ICC CRICKET WORLD CUP 2015

## இன்றைய ஆட்டம்

**பங்களாதேஷ் எதிர் ஆப்கானிஸ்தான்**

இடம்: கான்பெரா
நேரம்: காலை 9.30 (இலங்கை நேரம்)


## நாளைய ஆட்டம்


**சிம்பாப்வே எதிர் ஐக்கிய அரபு இராஜ்சியம்**

இடம்: நெல்சன்
நேரம்: அதிகாலை 3.30(இலங்கை நேரம்)


# பாடசாலை மட்ட இல்ல மெய்வல்லுநர்

அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயம்










கிளிநொச்சி பாரதி வித்தியாலயம்





சுண்டுக்குழி மகளிர் கல்லூரி (20)



கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்

விளையாட்டு செய்திகள்





வவுனியா பூவரசங்குளம் மகாவித்தியாலயம்

# வடக்கு முதலமைச்சரின் கைகுலுக்கல் சமாளிப்பும் ஜனாதிபதி பொறுத்துக்கொண்ட நையாண்டியும்!

- எஸ்.எம்.எம்.பஷீர் கட்டுரையிலிருந்து.

இன்று ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தின் பின்னர் இன சக ஜீவிதத்துக்காக வழங்கப்பட்ட மக்கள் ஆணையை முன்னெடுப்பதாக இலங்கை அரசு செயற்படும் பொழுது, அதிலும் குறிப்பாக தமிழ் தரப்புக்கு வழங்கப்பட்ட உள்நாட்டு நம்பத்தகு யுத்தக் குற்ற விசாரணைகள், வடக்கு கிழக்கில் உள்ள வாழ்வாதார காரணிகளை மீளக் கட்டி அமைத்தல், பாதுகாப்பு வலயத்துக்காக சுவீகரிக்கப்பட்ட காணிகளை மீள ஒப்படைத்தல் என்ற பல்வேறு அம்சங்களில் நம்பிக்கை தரும் விதத்தில் செயற்படவிருப்பதாக சமிக்ஞைகளை வெளிப்படுத்திய நேரத்தில் இந்த தீர்மானம் இலங்கை அரசுக்கு "அலேர்ஜியை" ஏற்படுத்தி உள்ளது.

அரச மாற்றத்துக்கு அடிகோலிய அரசியல் பிரமுகர் என்ற வகையிலும் அரசின் பேச்சாளர் என்ற வகையிலும் ராஜித செனிவிரத்ன இலங்கையில் நடந்தது இனப்படுகொலை ஆகாது என்றும் முரண்பாட்டு வழிமுறைகளைத் தேர்வது முன்னோக்கிய நகர்வுகளுக்கு முட்டுக் கட்டையாக அமையும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தன்னை சந்திக்க வந்திருந்த ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினரிடம் இத்தீர்மானம் குறித்து ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன கவலை வெளியிட்டிருக்கிறார். வடக்கு மாகாணசபை தனது அதிகாரத்தை மீறி சென்றுவிட்டதாக, குறிப்பாக இனப்படுகொலை என்ற குற்றச்சாட்டு குறித்து தனது கிலேசத்தை ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மறு புறத்தில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்ட கையோடு விக்னேஸ்வரன் மற்றும் சில மாகாணசபை உறுப்பினர்களுடன் இலங்கை ஜனாதிபதியை சந்தித்து பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். அந்த சந்திப்பின் பின்னர் விக்னேஸ்வரன் தனிப்பட்ட முறையில் ஜனாதிபதியை சந்தித்து சமாதானம் சொல்லியதாக சில தகவல்கள் ஊடகங்களில் வெளியாகி உள்ளன.



இனப்படுகொலை தீர்மானம் கொண்டுவர காரணமாகவிருந்த சூழ்நிலைகளையும், அத்தீர்மானம் அவருக்கு (மைத்ரிக்கு) எதிராக கொண்டு வரப்படவில்லை, தமிழ் மக்களின் உணர்வுகளின் வெளிப்பாடே அத்தீர்மானம் என்று முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் மைத்ரிபால சிறிசேன யுத்தத்தின் இறுதிக் காலத்தில் மகிந்தவின் சிம்மாசனத்தில் இருந்து யுத்தம் நடத்தினார் என்று தீர்மானத்தில் குற்றம் சாட்டிவிட்டு மைத்ரியிடம் "இது உங்களுக்கு எதிரானதல்ல" என்றும் எம்மிருவருக்கும் எதிரியான மகிந்தவுக்கு எதிரானது என்றும் சொல்லி மற்றொரு சிங்கள ஜனாதிபதி சிறிசேனவை விக்னேஸ்வரன் கை குலுக்கி "சமாளித்திருக்கிறார்".

வடக்கு முதல்வர் விக்னேஸ்வரன் இவ்வாறு ஜனாதிபதி சிறிசேனவை தனிப்பட்ட முறையில் சந்தித்து தங்களின் தீர்மானம் தனிப்பட்ட வகையில் உங்களுக்கு எதிரானதல்ல என்று கூறி கைலாகு கொடுக்கவும் ஒரு அசட்டுத் துணிச்சல் விக்னேஸ்வரனுக்கு இருந்திருக்கிறது. அதே வேளை அந்த நையாண்டியை சிறிசேனா எப்படி பொறுத்துக் கொண்டார். இப்போதைக்கு அவருக்கும் வேறு வழி இல்லை போலும்!.

வட மாகாண சபையின் இனவழிப்புத் தீர்மானத்தில் தமிழர்களுக்கு எதிரான உச்ச தாக்குதல்களின் போது ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன மே 2009 இல் பிரதி பாதுகாப்பு உதவி அமைச்சராக செயற்பட்டுள்ளார் என்றும் நீதிக்கும், பொறுப்புக் கூறலுக்கும் அவரின் வகிபாகத்தைக் கோடிட்டு காட்டி உள்ளனர்.

அது மாத்திரமல்ல மைத்ரீயாலோ அல்லது அவருக்கு பின்னால் அவரைப் பதவி வழி தொடர்பவர்களாலோ உள்நாட்டு பொறிமுறை மூலம் நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை தமிழ் மக்களுக்கு இல்லை என்பதாக தீர்மானம் சுட்டிக் காட்டுகிறது. அந்த வகையில் இந்த தீர்மானம் பிரச்சினைக்கு தீர்வுகாணும் தீர்மானமல்ல (Resolution) என்பதையும், பிரச்சினைகளை மேலும் தீவிரப்படுத்தும் தீர்மானம் என்பதையும் அனுமானிக்க முடியும்.

மேலும் இந்த தீர்மானம் சரத் பொன்சேகா பற்றியும் கோடிட்டுக் காட்டி உள்ளதுடன், அவர் "கனடா போஸ்ட்" எனப்படும் பத்திரிக்கைக்கு வழங்கிய பேட்டியில் இலங்கை சிங்கள மக்களுக்குரிய நாடு என்று குறிப்பிட்டதையும், அவர் இறுதி யுத்த காலத்தில் இராணுவ தலைமைக் கட்டளை அதிகாரியாக இருந்ததையும் இபொழுது சிறிசேனாவின் பாதுகாப்பு ஆலோசகராக இருப்பதையும் சுட்டிக் காட்டி உள்ளது.

இங்கு முரண் நகையாக இப்படியான "இனவழிப்பு" குற்றவாளியை, தங்களின் தமிழனத்தை "அழித்தவருக்கு" தமிழ் தேசியக் கூட்டமைப்பு, அவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட பொழுது ஆதரவு அளித்தது என்பதை என்னவென்று சொல்வது என்பது அரசியல் பரத்தமை தவிர வேறில்லை!!.

இத்தீர்மானத்தின் நம்பகத்தன்மையை நலிவுறச் செய்யும் இந்த நபுஞ்சக அரசியல் சர்வதேச அரங்கில் அரங்கேறுமா?

# மரணத்தின் பெருவயிறு!





அந்தணர்கள் அனுதினமும் செய்யும் வழிபாட்டில் யமவந்தனம் என்று ஒரு பகுதி உண்டு. தினமும் மாலை வேளையில் சூரியன் மறையும் முன் செய்யும் வழிபாட்டில் ஓர் அந்தணன் சாவைத் தொழுது நிற்கிறான்.

அதில் மரணத்தைப் பற்றி - அதாவது யமனைப் பற்றி ஓர் அழகான வரி வருகிறது.

வ்ருகோதராய சித்ராய சித்ரகுப்தாய வை நம

வ்ருகோதரன் என்றால் பெரிய வயிறு உடையவன் என்று பொருள். மரணம் ஒரு கட்டத்தில் எல்லா உயிர்களையும் உண்டு விடுகிறது. மரணத்தின் வயிறு பெரிது என்று சொல்வதில் ஒரு கவித்துவமான அழகு இருக்கிறது.

அடுத்து மரணத்தை அழகானவன் என்று வர்ணிக்கிறது. நிறைவான வாழ்க்கை வாழ்ந்தவர்களுக்கு மரணம் அழகான நண்பன்.

சித்ரகுப்தன் என்றால் நம் பாவ புண்ணியங்களைக் கணக்கு வைத்துக்கொள்பவன் என்று தப்பர்த்தம் செய்து கொண்டு விட்டோம். அதனால் சித்ரகுப்தனை ஒரு நகைச்சுவைப் பாத்திரமாக நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

யமனுக்கு வடமொழியில் சித்ரகுப்தன் என்று பெயர். குப்த என்றால் ரகசியம். சித்ர என்றால் அழகான மரணம். ஓர் அழகான ரகசியம். அதற்குரிய காலம் வரும்போது அதைத் தெரிந்து கொள்ளலாம். இப்போது வாழ்க்கையைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம்.

ஒரு நாட்டின் மன்னன் ஒரு பெரிய ஜென் துறவியை வணங்கித் தனக்கு ஆசி வழங்குமாறு கூறினான். அந்தத் துறவி இப்படி ஆசி கூறினார்:

"உன் தந்தையார் இறப்பார்.
நீ இறப்பாய்.
உன் மகன் இறப்பான்.
உன் மகனின் மகன் இறப்பான்."

துறவியின் இந்த ஆசியைக் கேட்டதும் மன்னருக்குக் கடுங்கோபம் வந்துவிட்டது. "இப்படியா ஒருவனை வாழ்த்துவது?" என்று பொங்கி எழுந்து விட்டான்.

"இல்லை மன்னா. இதுதான் உச்சகட்ட மகிழ்ச்சி. யாருமே நிரந்தரமாக வாழ முடியாது. முதலில் நிறைவாக வாழ்ந்துவிட்ட உன் தந்தை இறக்க வேண்டும். அதன்பின் நீயும் நிறைவாக வாழ்ந்து இறக்க வேண்டும். இப்படி வரிசைக் கிரமத்தில் மரணம் நிகழுவதுதான் பெரிய வரம். இந்த வரிசை கொஞ்சம் மாறினால் அதனால் நடக்கும் விபரீதங்களைச் சிந்தித்துப் பார். உன் தந்தை உயிருடன் இருக்கும்போது நீ மாண்டால் அந்தப் புத்தர சோகத்தை அவரால் தாங்கிக் கொள்ள முடியுமா?"

துறவியின் விளக்கம் மன்னனைச் சாந்தமடையச் செய்தது. நிறைவாக வாழ்ந்து விட்டவனுக்கு ஆசை இருக்காது. ஆசையில்லாத மனிதனை மரணத்தால் பயமுறுத்த முடியாது. தன் வாழ்க்கையில் விரும்பியதையெல்லாம் செய்து முடித்தவனை "க்ருதக்ருத்யன்" என்று மகாபாரதம் சொல்கிறது. அப்படிப்பட்டவனுக்கு மரணம் ஓர் இனிய நண்பன் என்றும் சொல்கிறது.

**('தீர்த்தக் கரையினிலே' நூலில் ரெங்கசாமி).**

# கமெராக்கள்

புகைப்படக் கண்காட்சி என்றால் தெரியும். ஆனால், அந்தப் புகைப்படங்களை எடுத்த கமெராக்களுக்கும் நிரந்தரமாக ஒரு கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது என்பது பலருக்கும் புதிதானது. தமிழ் நாடு ஊட்டியில் உள்ள ஒரு தனியார் கேளிக்கைப் பூங்காவில்தான் இந்த கமெரா கண்காட்சிக் கூடம் அமைக்கப்பட்டுள்ளது.

1880ஆம் ஆண்டிலிருந்து 2015ஆம் ஆண்டின் நவீன கமெரா வரை சுமார் 2,500இற்கும் மேற்பட்ட கமெராக்கள் இங்கு காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளன. இதில் சிலவற்றின் வரலாறு ருசிகரமானவை.

இக்காட்சிக் கூடத்தில் இரண்டாவது உலகப்போரின் போது போர் முனையில் பயன்படுத் தப்பட்ட ஜப்பான் நாட்டில் உருவாக்கப்பட்ட இயந்திரத் துப்பாக்கி வடிவிலான மூவி கமெரா வைக்கப்பட்டுள்ளது. இது வேறு எங்கும் காண முடியாததாகும்.


கமெராக்கள் பயன்பாட்டுக்கு வந்தபோதே, உளவு பார்ப்பதற்கான ஸ்பை கமெராக்களும் உருவாக்கப்பட்டு விட்டன. ஜேம்ஸ்பொண்ட் திரைப்படங்களில் நாம் பார்த்துள்ள பிஸ்டல் வடிவிலான கமெரா, சிகரெட் லைட்டர், கைக்கடிகாரம் போன்றவற்றில் இணைக்கப்பட்டுள்ள கமெராக்களும் இங்குள்ளன.



அதேபோன்று, லண்டன் தயாரிப்பான ஒரே கிளிக்கில் முத்திரை அளவிலான 15 படங்களை எடுக்கும் றோயல் மெயில் ஸ்டாம்ப் கமெரா, அமெரிக்க தயாரிப்பான பெட் ரோமாக்ஸ் விளக்கு வடிவிலான புறொஜக்டருடன் கூடிய கமெரா, திரைப்படம் எடுப்பதைப் போல ஒவ்வொரு சுற்றுக் கும் ஒவ்வொரு விதமான பாவனைகளுடன் கூடிய படம் எடுப்பதோடு, அதை கமெரா அமைந்துள்ள மொபைல் இருட்டறையிலேயே பரிசோதித்து பிரிண்ட் போடும்

# ஒரு தென்ஆபிரிக்க எழுத்தாளரின் கதை

- மருதன் -



டேமன் கல்கட் (Damon Galgut) என்னும் தென் ஆபிரிக்க எழுத்தாளர் எழுதிய In a Strange Room என்னும் நாவல் 2010ம் ஆண்டுக்கான புக்கர் பரிசுக்குப் பரிந்துரைக்கப் பட்டது. நாவல், சிறுகதைகள், நாடகம் என்று அவருடைய பல புத்தகங்கள் பரவலான கவனத்தைப் பெற்றவை.

ஆறு வயதானபோது அவருக்குப் புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. கடுமையாகப் பாதிக்கப்பட்டு பல ஆண்டுகளை மருத்துவமனையில் கழித்திருக்கிறார். அப்போது அவருக்கு பல கதைகள் படித்துக் காட்டப்பட்டிருக்கின்றன. கேட்கக் கேட்க ஆர்வம் அதிகரித்திருக்கிறது. நோயும் வலியும் மறந்துவிட புதிய கற்பனை உலகுக்குள் நுழைந்திருக்கிறார்.

இன்றுவரை அவர் எழுதிக்கொண்டிருப்பதற்குக் காரணம் தொடக்ககால மருத்துவனை வாழ்க்கையும், புற்றுநோயும், தீராத அந்த வலியும்தான் என்று கூறும் கல்கட், தான் ஓர் ஓரினச்சேர்க்கையாளர் என்பதை அவர் வெளிப்படையாகவே சொல்லி வந்திருக்கிறார்.

"பேசுவது சங்கடமாகவே இருக்கிறது. தனிமையில் அமர்ந்து எழுதுவதுதான் சுகமானது. ஒரு எழுத்தாளர் இப்படி இருப்பதுதானே இயல்பானதும்கூட? வாசிப்பின்மீது ஆர்வம் மட்டுமல்ல, நம்பிக்கையும் எனக்குண்டு. நாவல் வாசிப்பது உங்களை மேம்படுத்தும். புத்தகம் படிக்கும் ஒருவருக்கும் புத்தகம் படிக்காத ஒருவருக்கும் இடையிலான வேறுபாட்டை நீங்கள் சுலபமாகக் கண்டறிந்துவிடலாம். வாசிக்கும் பழக்கம் ஒருவருடைய குணாதிசயங்களை மாற்றியமைக்கிறது, அல்லது தீர்மானிக்கிறது என்று நினைக்கிறேன்."

நாவல் மட்டும்தானா? அரசியலோ வரலாறோ வாசித்தால் ஒருவர் மாறமாட்டாரா? என்ற கேள்விக்கு, "புதினத்தின் தாக்கமும் புதினமல்லாத எழுத்து வகையின் தாக்கமும் ஒன்றல்ல. கற்பனையின் ஆற்றல் தனித்தன்மை கொண்டது. அது உங்களை விரிவுபடுத்தும். உங்களை யோசிக்க வைக்கும். உங்கள் பண்புகளை மாற்றும் தன்மை அதற்கு உண்டு. ஒருவகையில் உங்களை அது பிசைந்து உருவாக்குகிறது என்றுகூடச் சொல்லலாம். வரலாறோ அரசியலோ இத்தகைய பாதிப்புகளை ஏற்படுத்தும் என்று எனக்குத் தோன்றவில்லை."

ஓர் உதாரணத்தையும் சொல்கிறார். "நெல்சன் மண்டேலாவுக்கும் ஜோர்ஜ் புஷ்ஷுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை நீங்கள் யோசித்துப் பார்க்கலாம். மண்டேலாவுக்கு படிக்கும் வழக்கம் இருந்தது. ஜோர்ஜ் புஷ் ஏதேனும் படித்திருக்கிறாரா என்ன?"

ஆட்சியில் அமர்வதற்கு முன்னால் மண்டேலா சாதித்ததையும் பொறுப்பேற்ற பிறகு அவரால் ஏன் குறிப்பிடத்தக்க மாற்றங்களைச் செய்யமுடியாமல் போனது என்பது பற்றியும் குறிப்பிடுகிறார். "தென் ஆபிரிக்க இளைஞர்கள் இன்று மண்டேலாவைக் கடவுளாகக் காண்பதில்லை. அவருடைய குறைபாடுகளைக் குறிப்பிட்டுப் பேசுகிறார்கள், அவர் இன்னமும் நிறைய செய்திருக்கவேண்டும் என்று அவர்கள் நினைக்கிறார்கள்."

# பிரபல பாடகி ஆசிரியை ஆனார்!



தமிழ் படங்களில், 200க்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியவர் பிரபல பின்னணி பாடகி ஜென்சி அன்ரனி. கடந்த, 1978 முதல், 82ம் ஆண்டு வரை, தமிழ் ரசிகர்களை மகிழ்வித்த இனிமையான குரலுக்கு சொந்தக்காரரான இவர், தற்போது, பள்ளி ஆசிரியையாக பணியாற்றி வருகிறார். இளையராஜா இசையில், 65 பாடல்களை பாடியுள்ள ஜென்சி, தன்னுடைய முதல் பாடலுக்கு, 750 ரூபாய் வாங்கியதையும், தான் முதன் முதலாக பாடிய பாடலுக்கு ஏ.ஆர்.ரஹ்மான் கீபோர்ட் வாசித்தார் என்றும் கூறி பெருமைப்படுகிறார்.

பாடகர் ஜேசுதாஸ், சபரிமலை தரிசனத்துக்கு சென்றிருந்த போது, அங்கிருந்த இளையராஜாவிடம், "கொச்சியில் நன்றாக பாடக்கூடிய பெண் ஒருவர் இருக்கிறார்..." என்று கூறி இருக்கிறார். அவரது அறிமுகத்திற்கு பின், இளையராஜா இசையில் பாட ஆரம்பித்தார் ஜென்சி. ஆனாலும், நிரந்தர வருமானம் வேண்டியே ஆசிரியை பணியில் சேர்ந்ததாக கூறும் இவர், இப்போது எர்ணாகுளம் மட்டாஞ்சேரியில் உள்ள பாடசாலையில் ஆசிரியையாக பணியாற்றுகிறார்.

# ாக்கள் கண்காட்சி!




வசதியு டன் கூடிய லண்டன் தயாரிப்பான போஸெளகிராப் கமெரா உள்ளிட்டவை வேறு எங்குமே காண முடியாதவைகளாகும்.

நீல் ஆம்ஸ்ட்ரோங் நிலவுக்குச் சென்றபோது தன்னுடன் எடுத்துச் சென்ற ஸ்வீடன் தயாரிப்பான ஆசின் பிளேட், ஜெர்மனியின் விலை உயர்ந்த கமெராவான லைக்கா, தங்க முலாம் பூசப்பட்டு உருவாக்கப்பட்ட நிக்கான் உள்ளிட்டவற்றோடு தற்போதைய நவீன கமெராக்கள் வரை இங்குள்ளன. இவை அனைத்தும் பயன்படுத்தப்படும் நிலையிலுள்ளன என்பதுதான் இதன் சிறப்பம்சம்.


இந்த கமெராக்களோடு அமெரிக்காவின் தயாரிப்பான 35 எம்.எம். மூவி கமெராவான மிச்சல் திரைப்படக் கமெராவும் இங்குள்ளன.

இவை மர்மயோகி, நாடோடி மன்னன் போன்ற திரைப்படங்களைப் படமாக்கியவையாகும். இவற்றின் பழமை மாறாமல் பாதுகாக்க தனியாக ஒரு குழு அமைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இக்கூடத்தில் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ள இத்தகைய கமெராக்களுடன், உலகின் மிகப்பெரிய கமெராவான 17 அடி நீளமுள்ள மாமூத் கமெராவின் மாதிரி அமைக்கப்பட்டுள்ளது. இயங்கும் நிலையிலுள்ள இந்தக் கமெராவிலிருந்து புகைப்படம் எடுத்து தருமளவிற்கு வசதி உள்ளது. இதுபோன்ற அம்சங்கள் இங்கு வரும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை விட வெளிநாட்டு சுற்று லாப் பயணிகளை அதிக அளவில் கவர்ந்து வருகிறது. 1901 ஆம் ஆண்டில் சிகாகோவில் புதிதாக உருவாக்கப்பட்டிருந்த ஒரு ரயிலின் முழு நீளத்தையும் படமாக்குவதற்காக உருவாக்கப்பட்டதுதான் மாமூத் கமெரா என்பது குறிப்பிடத்தக்கது.

ஊட்டியில் அமைக்கப்பட்டுள்ள இந்த வின்டேஜ் கமெரா மியூசியம் பார்ப்பவர்களுக்கு பிரமிப்பை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல், ஓர் அரிய கண்டுபிடிப்பின் வளர்ச்சி, அதன் செயற்பாடு உள்ளிட்டவற்றையும் அறிந்து கொள்ளும் வகையில் ஒரு தகவல் நிலையமாகவும் செயற்பட்டு வருகிறது.

# இனியெண்டாலும் பெடியளை படிக்க விட்டால் என்ன...?



வெளிவாயன் வேலாயுதன் சொல்லுவது....

டயஸ்போறா எண்டது எவ்வளவு பெரிய சக்தி எண்டது இப்பதான் விளங்குது பாருங்கோ! வாக்களிக்கிற சனத்தை விட புலம் பெயர்ந்து சென்று அங்கை அமைப்புக்களாய் இருக்கிறவையின்ரை பலந்தான் அதிகம். அவை சொல்லுறதுக்கு ஏற்ற மாதிரி ஆடுற வேலையைத்தான் இப்ப எங்கடை தமிழரசுகளும், அமைப்புகளும் செய்து வருகினை.

எல்லாத்துக்கும் காரணம் அவையின்ரை பணந்தான். பிணமே வாய் திறக்கிற பணத்துக்கு பணமே கதியெண்டிருக்கிறவை விடுவினையே?

இப்ப டயஸ்போறாவுக்குள்ள பெரிய பிரச்சினை இலங்கையிலை இயல்பு நிலை திரும்புறதுதான். ஒரு பக்கம் குடியுரிமை வழங்கப்படாதவை திருப்பி அனுப்பப்படப் போகினை எண்ட பிரச்சினை. மறுபக்கம் இப்பிடியான நிர்க்கதிப் பேர்வழிகளைக் குறைந்த சம்பளத்தில் வேலைக்கு வைத்திருக்கிறவர்கள், இவர்களுக்காக பணத்தைப் பெற்றுக் கொண்டு வாதாடுகிற சட்டத்தரணிகள், இவர்களுக்கான மோட்கேச் வீட்டு வசதிகளை ஏற்படுத்தித் தருபவர்கள், இவர்களுக்காகவே நாட்டுப் பொருட்களை இலங்கை, இந்தியாவில் இருந்து இறக்கி வைத்திருப்பவர்கள் ஆகிய மேற்கத்திய மறத் தமிழ்ப் பெருங்குடிகள் அல்லது தனவந்தர்கள் தமது பிழைப்பிலை மண் விழுந்து விடும் எண்டு நினைக்கிற பிரச்சினை.

எனவே இனப்படுகொலை அரசு எண்டதை நிரூபிக்க வேணும். அதன் மூலம் இந்த அரசுகளிலை நம்பிக்கை வச்சு இலங்கையிலை வாழேலாது எண்டதை உறுதிப்படுத்த வேணும். இதுக்குத் தடையாய் ஆரிருந்தாலும், அது சம்பந்தன், சுமந்திரனாயிருந்தாலும் அவர்களை எதிர்க்க வேணும். அவையின்ரை கொடும்பாவியை எரிக்க வேணும் எண்டது டயஸ்போறாவின் பொலிசி பாருங்கோ.

மகிந்தவை வீட்டுக்கு அனுப்பிற நேரம் பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தவை மைத்திரி அரசாங்கம் சில நல்ல வேலையளைச் செய்யத் தொடங்குது எண்டவுடனையும், கூட்டமைப்புக்காரர் கொஞ்சிக் குலாவிறது கூடுது எண்டவுடனையும் கொஞ்சம் அலேட்டாகி விட்டினை.

ஒரு பக்கம் கூட்டமைப்புத் தலைவர்கள் கொஞ்சிக் குலாவ மறுபக்கம் இந்த டயஸ்போறாக்களின்ரை தயவிலை இருக்கிற கூட்டமைப்புப் பிரமுகர்கள் சிலர் அதுக்கு எதிராகக் குரல் கொடுக்கத் தொடங்கினதைப் பார்த்திருப்பீங்கள்.

அதே மாதிரி பல்கலைக்கழகத்து ஆசிரியர்கள் எண்டு நிக்கிற ரண்டு மூண்டு பேரும் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியைச் செய்யப் போகினையாம். அவைக்கு வசதியாய் சம்பளமும் பதவிப் பவிசும் இருக்குது. ஆனால் அப்பாவிப் பல்கலைக்கழகப் பெடியள் இவையடிக்கிற வேப்பங் குழையிலை உருவாடி உருக்குலையப் போகுதுகள்.

சமூகத்திலை நடக்கிற வாள்வெட்டு, பல்கலைக்கழகச் சூழலிலை நடக்கிற மதுப்பாவனை மற்றும் கலாசாரச் சீரழிவு விசியங்கள், குடாநாட்டை உலுக்குகிற தண்ணிப் பிரச்சினை, வன்னியிலை வேலையில்லாமல் அல்லாடுகிற முன்னாள் போராளியளின்ரை பிரச்சினை, காணி உறுதி இல்லாமல் அல்லாடுறவையின்ரை பிரச்சினை எண்டு நீண்ட பல பிரச்சினையள் காணப்படுகிற நிலையிலை தீக்கோழி மாதிரி அதுகளுக்கெல்லாம் தலையை மண்ணுக்கை புதைச்சு வச்சிருந்த ராசாக்கள் இப்ப எழும்பி ஆடினமெண்டால் அதுக்கான காரணம் தெளிவானது பாருங்கோ! ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே கண்ணா!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எண்டது தூய மறத் தமிழர் பல்கலைக்கழகம் எண்டது மலையேறிப் போச்சுது. நாங்கள் எங்கடை பெடி பெட்டையளைத் திசை திருப்பி அழிச்சுப் போட்டம். அந்த இடத்திலை சிங்கள மாணவர்கள் வந்து சேர்ந்திருக்கினை. பல்கலைக்கழகம் அரசுக்கு எதிராய் இப்பிடிக் கிளம்பிறது எண்டது அவையைக் கொஞ்சம் கஸ்டப்படுத்தும்.

எங்கடை பெடியள் இந்த உருவேத்தத்திலை சிங்கள மாணவர்களுக்கு எதிராய் பேசவும், சேட்டை விடவும் இது வழி வகுக்கும். அப்பிடி நடக்குமெண்டால் சிங்களப் பிள்ளையளின்ரை பாதுகாப்பை சீருடைத் தரப்புகள் பொறுப்பெடுக்கும். அது மட்டுமில்லை அங்காலை பேராதனையிலையும், மொறட்டுவவிலையும், ஜயவர்த்தனபுர, ஊவா வெல்லச, களனி எண்டு எல்லா இடங்களிலையும் இருக்கிற எங்கடை பெடி பெட்டையளும் சிக்கல்பட நேரிடும்.

தலைவர்களின்ரை பிள்ளையள் இங்கையில்லை. பெரிய வாத்தியார் மாரும் தங்கடை பிள்ளையளை தங்கடை வல்லமையிலை வெளிநாடுகளிலை விட்டுப் படிப்பிப்பினை. இல்லையெண்டால் ஆட்டுவிக்கிற சக்தியளும் உதவும். ஆனால் சாதாரண குடும்பத்திலை பிறந்து பல்கலைக்கழமான பெரிய பாடசாலைக்கு வந்திருக்கிற பிள்ளையளை கொஞ்சம் தலைநிமிர வைக்க வேணுமெண்டால் இந்த ஆருக்கோவான எடுபிடி வேலையளுக்கை அவையளை உட்படுத்தக் கூடாது. அதைச் செய்யிற பெரிய பொறுப்பு சமூகத் தலையளுக்கு இருக்குது. செய்வினையே?

# பெற்றோர் நாடகம் பார்ப்பதை தவிர்த்து

# பிள்ளைகளின் கல்வியில் அக்கறைகாட்டுங்கள்

## தபால் திணைக்கள யாழ்.பிராந்திய கணக்காளர் தெரிவிப்பு



(சாவகச்சேரி)

நாடகம் பார்ப்பதை தவிர்த்து பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளில் பெற்றோர் அக்கறை கட்டுவதன் மூலம் தான் உங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் ஒளிமயமாக அமையும் என தபால் திணைக்கள யாழ்.பிராந்திய கணக்காளர் திருமதி க.கலைச்செல்வன் தெரிவித்தார்.

சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி பாடசாலையின் அதிபர் இ.ரவீந்திரன் தலைமையில் கடந்த வியாழனன்று இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,


மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பாடசாலை ஒரு ஏணியாகவே இருக்கின்றது. அதற்கு உறுதுணையாக பெற்றோர்களே இருக்கவேண்டும். தற்போது கைத்தொலைபேசியின் பாவனை அதிகரித்துள்ளது. அதேபோல் நாடகங்களைத் தொலைக்காட்சியில் பார்ப்பதும் அதிகம். இவ்வாறான செயற்பாடுகளைக் குறைத்து உங்கள் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளில் அக்கறை காட்டுங்கள்.

தற்போது சிலரது வீடுகளுக்கு மாலை வேளையில் போனால் வருவோருடன் கதைக்க மாட்டார்கள், வந்தவர்கள் எப்போது போவார்கள் என எண்ணுவார்கள். ஏனென்றால் நாடகம் பார்க்க வேண்டும். இதை எல்லாம் தவிர்த்து பிள்ளைகளின் எதிர்கால நலனில் அக்கறை காட்ட வேண்டும். ஆசிரியர்களின் ஒத்துழைப்பை விட பெற்றோர்களின் ஒத்துழைப்பே மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு முக்கியமாகின்றது. ஒவ்வொரு பாடசாலையினதும் தரத்தைக் கணிப்பது அந்துப்பாடசாலை மாணவர்கள் பெறு பெறுபேற்றைக் கொண்டே இது போன்ற சிறிய பாடசாலைகளின் 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேற்றை அடிப்படையாகக் கொண்டே பாடசாலையில் தரத்தை கணிபபிட முடியும். கடந்த ஆண்டு 8 மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள். இது ஒருசாதனை இதனை தக்கவைக்க இந்த ஆண்டும் இதைவிட அதிகமான மாணவர்கள் சித்தியடைய வேண்டும். இதற்கு பெற்றோரின் ஒத்துழைப்பு மிக அவசியமானது. அதற்காக அனைவரும் மாணவர்களின் கல்வி, மற்றும்விளையாட்டு செயற்பாடுகளில் அக்கறை செலுத்தவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# மாற்றுத்திறனாளிக்கு விண்ணப்பம் வழங்கல்

வரணி வடக்கு ஜே/339 கிராம .அலுவலர் பிரிவிற்கு சமூக சேவைகள் அமைச்சு மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி வழங்கவென கிராம சேவையாளருக்கு விண்ணப்பப்படிவங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் விண்ணப்பப்படிவங்களைப் பூரணப்படுத்தி கிராம அலுவலர் சிபார்சு செய்த பின் உரிய வைத்தியரிடம் நோயின் தன்மை போன்ற விபரங்களைப் பெற்று சாவகச்சேரி பிரதேச சமூகசேவைகள் பிரிவில் ஒப்படைக்கமுடியும். மேலும் நோயாளி அரச மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருக்க வேண்டும் என விண்ணப்பப்படிவத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (150)



காவேரி கலா மன்றத்தினால் பூநகரி சித்தம்குறிச்சி கிராமத்தில் 'சமுதாயா' நாடகக்குழுவினரின் கலை நிகழ்வு அண்மையில் நடைபெற்றபோது. (90)

# துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 3 கிராமங்களில் பல்வேறு பயிற்சிகள்

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் மூன்று கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டு பல்வேறு பயிற்சிநெறிகள் இடம் பெற்று வருகின்றன.

உயிலங்குளம், தென்னியங்குளம், கோட்டை கட்டியகுளம் ஆகிய மூன்று கிராமங்களில் அக்ரெட் நிறுவனத்தின் உதவியுடன் உயிலங்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் கடந்த டிசம்பர் மாதம் தொடக்கம் இப்பயிற்சி நெறிகள் நடைபெற்று வருகின்றன. தலை மைத்துவப் பண்புகள், உளவளம், சுகாதார விழிப்புணர்வு, எயிட்ஸ், மாற்றாற்றல் திறன் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் மாணவர்களுக்கான மகிழ்வூட்டல் எனப்பல்வேறு விடயங்களை உள்ளடக்கி இப்பயிற்சிநெறிகள் இடம்பெற்றுவருகின்றன. துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் மத்தியில் பல்வேறு வகையிலான விழிப்புணர்வுகள் தேவையான நிலையிலேயே இப்பயிற்சிநெறிகள் முன்னெடுக்கப்பட்டுவருவதாக உயிலங்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஸ்ரீகாந்தன் தெரிவித்தார்.

இப்பயிற்சிப் பட்டறைகளில் துணுக்காய் பிரதேச செயலர் சி.குணபாலன் உட்படப் பலர் வளவாளர்களாக கலந்துகொண்டுள்ளதாகவும் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் தெரிவித்தார். மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மூன்று கிராமங்களில் இவ்வாறான பயிற்சிகள் பெரும் பயன்களைத் தருவதாகவும் அவர் தெரிவித்தார். (160)

ஜனரஞ்சகத் தன்மையை முதன்மைப் படுத்தி பக்கம் சாராமல் துணிச்சலுடன் தரமான அம்சங்களை அள்ளிவரும் வாரமலர்.

வாரமலர் தினமுரசு

19.02.2015

நாளைய தினமுரசு வாரமலரில்...

அரசியல் சதிராட்டம் ஆரம்பம்
ஜனாதிபதியின் இந்திய விஜயம்

கிழக்கு முதலமைச்சரின் முதன்மைச் சவால்கள்

தெளிவில்லாத புதுக்குடியிருப்பு தேர்தல்



உங்கள் முகவர்களிடம் கேட்டு வாங்கிப் படியுங்கள்!




சூடு - சுவை - சுவாரசியம் - அதுதான் தினமுரசு



அண்மையில் தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினால் விசுவமடு பகுதியில் கை, கால், கண்களை இழந்த மாற்றுத்திறனாளிகளின் பிள்ளைகள் கற்றல் உபகரணங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டபோது... (02)

# மேடை இசைக் கச்சேரிகளே

# கலைக்கு அடையாளத்தை வழங்குகின்றன

## பேராசிரியர் வேல்நம்பி தெரிவிப்பு

கலையினை நம்முள் புகுத்துவதினால் எதையும் நாம் இலகுவில் பெற்று விட முடியும். இசை என்பது சினிமாவுக்கு உரியது மட்டுமல்ல. இசை சினிமா வடிவில் வரும் போது மட்டும் இரசிக்காது கர்நாடக தமிழிசைப் பாடல்களையும் இரசிக்க வேண்டும் என யாழ் பல்கலைக்கழகத் தின் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதியும் யாழ்ப் பாணத் தமிழ்ச்சங் கத்தின் தலைவருமான பேராசிரியர் கலாநிதி தி.வேல்நம்பி தெரிவித்தார்.

திருமறைக் கலாமன்றத்தின் பொன்விழா ஆண்டினை (1965 - 2015) முன்னிட்டு நடாத்தப்பட்டு வரும் 'பொற்தூறல்' எனும் மாதாந்த நிகழ்ச்சித் தொடரின் இம்மாதத்துக்கான "மாசித்திங்கள் பொற்தூறல்" விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 5:00 மணிக்கு கலைத்தூது கலையகத தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிகையில்,

கலையினை நம்முள் புகுத்துவதினால் எதையும் நாம் இலகுவில் பெற்று விட முடியும்.இசை என்பது சினிமாவுக்கு உரியது மட்டுமல்ல. இசை சினிமா வடிவில் வரும்போது மட்டும் அதனை இரசிப்பதை விடுத்து கர்நாடக தமிழிசைப் பாடல்களையும் இரசிக்க வேண்டும். மேலும் எம் தனித்துவ அடையாளத்தைப் பாதுகாப்பதோடு நம் கலைஞர்களை அடையாளப்படுத்த வேண்டும். அத்துடன் அவர்களின் திறமைகளையும் வெளிக் கொணர வேண்டும்.

இசையோடு மனமுருகிப்பாடும போதுதான் இறைவனை அடைய முடியும். ஏழிசை கொண்ட இசையுடன் தமிழ்ப்பாடல்களைப்பாடும் போதுதான் இறையருளை அடைய முடியும். நாட்டிலுள்ள இல்லங்கள் தோறும் கலை ஒளி தோன்ற வேண்டும். அப்போது தான் குடும்பம் மகிழ்ச்சிகரமானதாக இருக்கும் என பாரதியார் தனது பாடல்களில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் கலைக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். அதில் அங்குள்ள தொலைக் காட்சிகளும் முக்கிய பங்கை வகிக கின்றன. எமது மண்ணில் கலை நிகழ்வுகளை நடாத்த வேண்டுமெனறால் இந்திய கலைஞர்களை அழைத்து வருகின்றார்கள். அதேபோல் நம் கலைஞர்களைத தான் இந்தியா அழைத்துச் சென்று அங்கு கலைநிகழ்ச்சிகளை நடாத துவதற்கும்இந்திய துணைத்தூதரகம் ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். எமது கலைஞர்களின் திறமைகளும் நாட்டுக்கு வெளியேயும் தெரிய வேண்டும் அது தான் எனது ஆசை என்றார். (63)

# கிராம சேவையாளர் அலுவலகத்துக்கு நிரந்தர இடம் அமைக்கவேண்டும்

(அச்சுவேலி)

வளலாய் கிராம சேவையாளர் அலுவலகத்திற்கு நிரந்தமான இடம் இல்லாது வெவ்வேறு இடங்களில் இயங்கி வருவதால் கிராம அலுவலரின் சேவைகளைப் பெறவரும் பொது மக்கள் பல்வேறு சிக்கல்களை தாம் எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

நீண்ட வருடங்களாக இவ்வாறு நிரந்தரமான ஓர் இடத்தில் அலுவலகத்தை அமைக்காது குறிப்பிட்ட சில காலம் ஓர் இடத்திலும், பின்னர் வேறோர் இடத்திலும் என 10இற்கும் மேற்பட்ட இடங்களில் இவ் அலுவலகம் மாறிமாறி இயங்கி வருகின்றது. இதனால் பரீட்சை எழுதும் மாணவர் முதல் வீட்டுத்திட்டப்பயனாளிகள்வரை மற்றும் ஏணைய தேவைகளுக்காக கிராம சேவையாளரை சந்திக்கவரும் பலர் அலுவலகம் அமைத்துள்ள இடத்தை தேடிச் அலைவதுடன் தூர இடங்களில் இருந்து வருவோர் தமக்கு நேரவிரயம் மற்றும் பணவிரயம் என்பன ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே இந்தப் புதிய ஆண்டிலாவது கிராம சேவகருக்கான நிரந்தர அலுவலகத்தை சம்பந்தப்பட்ட தரப்பினர் அமைத்து வழங்க வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (85)

# சிறப்புற நடைபெற்ற மகா கும்பாபிஷேகம்




வரலாற்றுச் சிறப்புமிக்க திருகோணமலை திருக்கோணேஸ்வரம் ஆலயத்தின் திருகுடமுழுக்கு விழாவான மகா கும்பாபிஷேகம் கடந்த 22 வருடங்களின் பின் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

கடந்த 11ஆம் திகதியிலிருந்து 45 நாட்கள் மண்டலாபிஷேகம் இடம்பெற்று எதிர்வரும் மார்ச்27 ஆம் திகதியன்று சங்காபிஷேகம் இடம பெறவுள்ளது. சங்காபிஷேகம் முடிவடையும் தினத்தோடு எதிர்வரும் ஏப்ரல் 3ஆம் திகதியன்று வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது..

பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இம் மகா கும்பாபிஷேக நிகழ்வில் கலந்துகொண்டார்கள்.

# ஆயுர் வேதம்



## புண் ஏற்படக் காரணங்கள்!

உடலில் தாமாகவே புண்கள் ஏற்படுவதற்கான காரணங்களை ஆயுர்வேதம் பின்வருமாறு பட்டியலிடுகின்றது:

இரத்தத்தில் காந்தலை ஏற்படுத்தக் கூடிய ஒரு சில உணவுப் பொருட்களாகிய காரம், புளி, உப்பு வகைகளை உணவில் அதிகமாகச் சேர்ப்பது,

கறுவா, சீரகம், கரம்மசாலா, எண்ணெய் வகையறாக்களால் தயாரிக்கப்படும் புலால் உணவ் அதிகமாகச் சாப்பிடுவது,

புளித்த தயிர், புளிப்பான ஊறுகாய், பழைய சோறு போன்றவற்றை அடிககடி சாப்பிடுவது,

குளிக்கும்போது தோலிலுள்ள அழுக்கைப் போக்குவதற்காக அதிக அளவில் சோப்பை உடலில் தேய்த்துக் குளிப்பதால் ஏற்படும் வறட்சி,

குளோரின் ப்ளீச்சிங் பவுடர் ஆகியவை அதிக அளவில் சேர்க்கப்படும் தண்ணீரில் குளித்தல்,

தோலில் நெய்ப்பின்றி வறண்ட நிலையில் அதிகமாக வெயிலில் சுற்றித் திரிவது,

உட்புற நெய்ப்பைத் தரும் நெய், வெண்ணெய், உளுந்து, எள்ளு, வெந்தயம் போன்றவற்றை அதிகம் உணவில் சேர்க்காதிருப்பது,

இரவு படுக்கையை வெயிலில் போட்டு காய வைக்காமல் உதறாமல் தும்பு தூசி மற்றும் அதிலுள்ள அணுக்கிருமிகளை நீக்காமல் அதன் மீதே படுத்து உறங்குவது,

லாஹிரி வஸ்துகளாகிய மதுபானம், புகைப்பிடித்தல், புகையிலை போன்றவற்றின் பயன்பாடுகள்,

சிறு சிறு விஷயங்களுக்குக் கூட பொறுமையின்றி கோபப்படுதல்,

அணிந்து கொண்டிருக்கும் ஆடைகளில் சோப்புத்துகள் நன்றாக விலகுமாறு நீரில் அலசி வெயிலில் காய வைக்காதிருத்தல்,

மற்றவரின் ஆடை அணிகலன்களை அணிதல்,

தோல் மற்றும் இரத்தத்தை சுத்தப்படுத்தும் வேப்பெண்ணெய், கடுகெண்ணெய், நல்லெண்ணெய் போன்றவற்றில் ஒன்றை உடலில் தேய்த்துக் குளிக்காதிருத்தல் முதலிய சில காரணங்களால் உடலில் புண்கள் ஏற்படக்கூடும்.

மேற்கூறிய உணவு மற்றும் செயல்களில் செய்யக்கூடிய தவறுகளால் தோல், இரத்தம், மாமிசம் மற்றும் மேதஸ் எனப்படும் உட்புற தாதுக்களிலும் நிணநீர் க்ரந்திகளில் ஏற்படக்கூடிய கிருமித்தொற்று, அவற்றில் ஏற்படக்கூடிய பிசுபிசுப்பு, கசிவு, மேற்புறத் தோலில் புண்களைத் தோற்றுவிக்கிறது.

உணவிலும் செயலிலும் காட்டக்கூடிய ஒரு கவனமின்மையே புண்கள் ஏற்படக் காரணமாகிறது. நோய் எதிர்ப்புச் சக்தியை அழித்து விடக்கூடிய உணவு மற்றும் செயற்பாடுகளே இந்த புண்கள் ஏற்படக் காரணமாகின்றன.

மேற்குறிப்பிட்ட கிருமித்தொற்று, பிசுபிசுப்பு மற்றும் கசிவு ஆகியவற்றை உட்புற தாதுக்களிலிருந்து அழித்து நீர்த்து வெளியேற்றச் செய்யும் ஒரு சில மூலிகை மருந்துகளாகிய நன்னாரி வேர்ப் பட்டை, வேப்பம்பட்டை, சரக்கொன்றைப்பட்டை, அரசம்பட்டை, ஆலம் பட்டை, அத்திப்பட்டை, இத்திப்பட்டை, கருங்காலிக்கட்டை, ஏழிலம்பாலைப்பட்டை, புங்கம்பட்டை போன்றவற்றை வகைக்கு ஐந்து கிராம் எடுத்து பெருந்தூளாக உடைத்து வைத்துக் கொண்டு அதில் அரை லீற்றர் தண்ணீர் சேர்த்து நன்றாகக் கொதிக்கவிட வேண்டும்.

125 மில்லி லீற்றராக இந்த தண்ணீர் வற்றியதும் வடிகட்டி வைத்துக் கொண்டு காலையில் சுமார், 65 மில்லி லீற்றரும், மாலையில் மீதமுள்ள 60 மில்லி லீற்றரும் வெதுவெதுப்பாக வெறும் வயிற்றில் சுமார் 48 நாட்கள் சாப்பிட்டு வர நல்லதொரு பலனைத் தரும்.

இதே மூலிகைப் பட்டைகளை வகைக்கு 200 கிராம் எடுத்து சுமார் மூன்று லீற்றர் தண்ணீரில் நன்றாக வேகவிடவும். ஒன்றரை லீற்றராக அவை குறுகியதும் வடிகட்டி வைத்துக் கொள்ளவும். சாதாரண தண்ணீரில் குளித்த பிறகு இந்த மூலிகைத் தண்ணீரை உச்சந்தலை முதல கால் வரை விட்டுக் கொள்ள தோல் பகுதியில் ஏற்படக்கூடிய புண்களை விரைவில் ஆற்றும்.

உட்புற பிசுபிசுப்பை இரத்தம் மற்றும் நிணநீர் க்ரந்திகளிலிருந்து அகற்றக்கூடிய் ஆரக்வதாதி கஷாயம், படோல கடுரோஹிண்யாதி கஷாயம், படோலமூலாதி கஷாயம், திக்தகம் மற்றும் மஹாதிக்தகம் கஷாயம் ஆகியவற்றை மருத்துவரின் ஆலோசனைப்படி நன்றாகக் கேட்டறிந்து ஒன்று அல்லது இரண்டை மட்டும் தேர்வு செய்து சாப்பிட்டு வர புண்கள் விரைவில் ஆறக்கூடும்.

கசிவு அல்லாத வறட்டுப் புண்களாக மட்டுமே ஏற்படுமாயின் மூலிகைத் தைலங்களாகிய நால்பாமராதி, தினேசவல்யாதி, ஏலாதி, தூர்வாதி போன்றவற்றில் ஒன்றை மட்டும் வெளிப்புறம் பயன்படுத்தலாம்.

இப்படியாக உள்ளும் புறமும் மருந்துகளைச் சாப்பிடும் தறுவாயில் மேற்குறிப்பிட்ட உணவு மற்றும் செயற்பாடுகளைத் தவிர்ப்பதின் வாயிலாக நோய்எதிர்ப்பு சக்தியை வளர்த்து ஏற்பட்டுள்ள உபாதைகளிலிருந்தும் நிவாரணம் பெறலாம்.

# முன்னாள் போராளிகளுக்கு தொழில் வாய்ப்பு பொருத்தமான பொறிமுறை வேண்டும்

## டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை



புலிகள் இயக்கம் உள்ளிட்ட ஏனைய தமிழ் இயக்கங்களின் முன்னாள் உறுப்பினர்கள் நலன் கருதி தொழில்வாய்ப்புத் திட்டமொன்று உருவாக்கப்பட வேணடும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அரசிடம கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் தான் கடந்த அரசுகளிடமும் கோரிக்கைகளை முன்வைத்திருந்ததாகவும், எமது மக்கள் நலன்கருதிய திட்டங்களை முன்னெடுப்பதற்கு தடையாக இருந்துவரும் சுயலாப தமிழ்த் தலைமைகளின் செயற்பாடுகள் காரணமாகவே இத்திட்டமும் செயல்வடிவம் பெறாமல் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் இயக்கங்களில் ஆரம்பந்தொட்டே தங்களை இணைத்துக் கொண்டிருந்த பல உறுப்பினர்கள், உரிய கல்வித்தகைமைகள் உட்பட ஏனைய தகைமைகளைக் கொண்டிராத நிலையில் காணப்படுகின்றனர். அதே நேரம், பல்வேறு தொழில் ரீதியிலான திறமைகளை கொண்டவர்களும், இவர்களில் உள்ளனர் எனவே, உரியவர்களை இனங்கண்டு இவர்களுக்கு ஏற்ற வகையிலான தொழில் வாய்பபுக்களையும் அலலது சுயதொழில் வாய்ப் புக்களையும் உரிய தொழிற் பயிற்சிகளையும் உருவாக்கிக் கொடுக்க வேண்டிய அவசியம் உள்ளதாகவும் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

எவ்வித வருமான வழிகளும் இல்லாத நிலையில் மேற்படி உறுப்பினர்களும், அவர்களது குடும்பங்களும் பல்வேறு துன்ப துயரங்களை அனுபவித்து வருவதையும், கடந்த காலங்களில் தன்னால் இயன்றளவில் இவர்களில் பலருக்கு உதவிகள் மேற கொள்ளப்பட்டு வந்துள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ள ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் திட்டமிடப்பட்ட பொறிமுறையொன்றின் ஊடாக இவர்கள் தொழில் முயற்சிகளுக்குள் உள்வாங்கப்படுவது அவசியமாகும் என்றும் தெரிவித்துளளார்.

# செடிகள் வளர்ந்து காணப்படும் ஐயன்கன்குளம் பொதுச்சந்தை



முல்லைத்தீவு துணுக்காய் ஐயன்கன்குளம் சந்தை திறந்து வைக்கப்பட்டுள்ளபோதிலும் செடிகள் வளர்ந்து இயங்காதநிலையில் காணப்படுகின்றது.

2012 ஆம் ஆண்டு பெருமளவு நிதி செலவிடப்பட்டு உருவாக்கப்பட்ட சந்தை தற்போது இயங்காததன் காரணமாக கால்நடைகளின் உறைவிடமாகவும் மாறிவருகின்றது.

210 குடும்பங்கள் வாழ்கின்ற ஐயன்கன்குளம் கிராமத்தில் சிறிய வர்த்தக நிலையங்களே போதுமான நிலையில் பெரும் எடுப்பில் உருவாக்கப்பட்ட இக் கட்டடம் தற்போது பயன்பாடில்லாது காணப்படுகின்றது.

இக்கிராமத்தில் சந்தைகளை நடாத்தக்கூடிய மக்கள் இல்லாத நிலையில் பெருமளவு செலவில் உருவாக்கப்பட்ட சந்தைக் கட்டடம் தற்போது வீணான நிலையில் காணப்படுகின்றது. (160)

# மீண்டும் அரசியலுக்கு வரும் எண்ணம் எதுவும் இல்லை

## முன்னாள் ஜனாதிபதி உறுதிமொழி

மீண்டும் அரசியலுக்கு வரும் எந்த எண்ணமும் தனக்கில்லை என முன்னாள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக அறிவிக்க வேண்டும் என வலியுறுத்தி நுகேகொடையில் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

அந்த கூட்டத்தில் தான் கலந்து கொள்ளப் போவதில்லை என மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார். தனக்கு நெருக்கமான சிலரிடம் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

செயற்பாட்டு ரீதியான அரசியலுக்கு மீண்டும் வரும் எண்ணம் தனக்கில்லை எனவும் தனது புதல்வரான நாமல் ராஜபக்ஷவின் எதிர்கால அரசியல் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகளில் ஈடுபடப் போவதாகவும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

# மதுபோதையில் சேட்டை 10 பேருக்கு அபராதம்

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மது போதையில் வீதியில் நின்று பொதுமக்களுடன் அநாகரீகமாக நடந்துகொண்ட 10 பேருக்கு தலா 3000 ரூபாய் அபராதம் விதித்து மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதவான் சின்னத்துரை சதீஸ்கரன் தீர்ப்பளித்தார்.

மானிப்பாய் பொலிஸாரால், கடந்த வாரம் வெவ்வேறு தினங்களில் கைதுசெய்யப்பட்ட நபர்கள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டு அந்நபர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, குற்றவாளிகள் தங்கள் குற்றங்களை ஒப்புக் கொண்டதற்கமைவாக இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டுளளது.

# ஆசிரிய கலாசாலைக்கு இன்று விடுமுறை

சிவராத்திரி தினத்துக்காக கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு இன்று விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் தெரிவித்தார்.

சிவராத்திரியை முன்னிட்டு வடமாகாணப் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையில், கலாசாலைக்கும் விடுமுறை விடப்பட்டுள்ளது. இதற்கான பதில் நாளாக எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை கலாசாலை செயற்படும்.

கற்பித்தல் பயிற்சிக்காக பாடஅலகுகளை பெறவேண்டிய ஆசிரிய மாணவர்கள் நாளை காலை பாடசாலைகளுக்குச் சென்று பாட அலகுகளை பெற்று கலாசாலைக்கு வருகை தரலாம் என அவர் மேலும் கூறினார்.

# விசாரணை அறிக்கையை கிடப்பில் போடுவதா?

## சுமந்திரனின் கூற்றுக்கு சுரேஷ் கண்டனம்

ஐ.நா.விசாரணையாளர்களின் விசாரணைக்காலத்தை நீடித்து அவர்களை நாட்டுக்குள் வந்து விசாரணை செய்ய அனுமதித்தால் ஐ.நா.விசாரணை அறிக்கையை வெளியிடும் காலத்தை நீடிக்கலாம் எனவும் ஐ.நா. மனிதவுரிமைக் கவுனசிலின் மேற்பார்வையின் கீழ் உள்ளக விசாரணை ஒன்று நடைபெறுமாயின் அவ்விசாரணையை நாம் வரவேற்போம் எனவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்த கருத்துக்கு கூட்டமைப்பு மறுப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ பேச்சாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளதாவது,

ஆனால் இவ்வாறான முடிவுகள் எடுப்பதற்கான எந்தக் கலந்துரையாடலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கட்சித் தலைவர்களுடனோ, தமிழ்த்தேசியக் கூடடமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனோ நடாத்தப்படவில்லை. சுமந்திரன் வெளியிட்ட கருத்தானது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கருத்தல்ல என்பதுடன் இது அவரின் சொந்த தனிப்பட்ட கருத்து என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம்.

சுதந்திரதின விழாவில் கலந்துகொள்வது என்பதிலும் அவர்கள் தனிப்பட்ட முடிவையே எடுத்தார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தேர்தல் பிற்போடப்படுமாயின், மார்ச்சுக்கு வெளிவராத விசாரணை அறிக்கையானது, செப்ரெம்பருக்கும் வெளிவராமல், பின்னர் 2016 மார்ச்சுக்கும் வெளிவராமல் போகலாம். தேர்தலோடு சர்வதேச அறிக்கையை தொடர்புபடுத்துவது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல.

எனவே விசாரணை அறிக்கையை வெளியிடாமல் காலத்தை நீடிப்பதும் ஒத்திப் போடுவதும் நிரந்தரமாகவே சர்வதேச விசாரணை அறிக்கைக்கு மூடுவிழா செய்வதற்குச் சமனானது.

உள்ளூர் விசாரணை என்பது காலத்தை இழுத்தடிக்கும் செயலேயன்றி வேறெதுவுமில்லை. இதற்கு முன்னர் உள்ளூர் விசாரணைக்கு ஏற்பட்ட கதியை மக்கள் அறிவார்கள். ஆகவே உள்ளூர் விசாரணை என்பதும் தமிழ் மக்களை ஏமாற்றி சர்வதேச விசாரணை அறிக்கையை ஒழிக்கின்ற செயற்பாடாகும். இவ்வாறான அறிக்கைகளை சுமந்திரன் ஏற்றுக் கொள்வதென்பது அவரைப் நாடாளுமன்றத்திற்கு அனுப்பிய தமிழ் மக்களுக்குச் செய்கின்ற துரோகமாகும். இத்தகைய செயற்பாட்டினை கூட்டமைப்பிலுள்ள தமிழரசுக்கட்சி உட்பட ஏனைய அங்கத்துவக் கட்சிகளும் ஏற்றுக்கொள்ளாது என்றும் தெரிவித்துள்ளார்.

# லெபனான் சென்றது இராணுவக் குழு

ஐக்கிய நாடுகளின் அமைதிகாக்கும் படையில் இணைவதற்காக இலங்கை இராணுவத்தின் குழுவொன்று நேற்று லெபனானுக்கு சென்றுள்ளது.

இந்தக் குழுவில் இராணுவ அதிகாரி ஒருவர் உள்ளிட்ட 55 பேர் அடங்குவதாக பதில் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜயநாத் ஜயவீர தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 24 ஆம் திகதி நான்கு இராணுவ அதிகாரிகள் உள்ளிட்ட 75 பேர் கொண்ட மற்றுமொரு குழுவும் லெபனானுக்கு செல்லவுள்ளதாக பிரிகேடியர் குறிப்பிட்டுள்ளார். ஐ.நா. அமைதிகாக்கும படையில் இணையவுள்ள குறித்த அனைத்து இராணுவ உறுப்பினர்களும் விஜயபா படையணியைச் சேர்ந்தவர்கள் என பதில் இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்துளளார்.

# தேர்தலில் ஐ.தே.க.வுக்கு எதிராக ஜனாதிபதி பிரசாரம் செய்யமாட்டார்

## அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல நம்பிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான பிரசாரங்களில் ஈடுபடமாட்டார் என்று நம்பிக்கை கொண்டிருப்பதாக அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

மைத்திரிபால சிறிசேன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்தவர் என்ற போதிலும் அவரின் வெற்றியை ஐக்கிய தேசியக்கட்சியே உறுதிப்படுத்தியது.

எதிர்வரும் பொதுத்தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான பிரசாரங்களை மேற்கொண்டு நடைமுறை அரசாங்கத்தை மைத்திரிபால சிறிசேன தோற்கடிப்பார் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

எனினும் அது நடக்காது என்று தாம் நம்புவதாக அவர் தெரிவித்துள்ளார்.

# பல்கலைக்கழக கட்டமைப்பு பாதிக்கப்படும் அபாயம்

## விரிவுரையாளர் சங்க சம்மேளனம் எச்சரிக்கை

(கொழும்பு)

உயர்கல்வி அதிகாரிகளின் இழுபறி நிலையால், பல்கலைக்கழக கட்டமைப்பு மேலும் பாதிக்கப்படும் அபாயம் காணப்படுவதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனம் குறிப்பிடுகின்றன.

இதனால் அனைவரும் எதிர்பார்க்கும் மாற்றம் பின்தள்ளப்பட்டுள்ளதாக சம்மேளனத்தின் தலைவர் பேராசிரியர் பிரபாத் ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் காணப்பட்டதைப் போன்று, தகுதியற்றவர்களுக்கும், தெரிந்தவர்களுக்கும் நியமனங்கள் வழங்கப்படுகின்றன.

இதனால் அனைவரும் எதிர்பார்க்கும் மாற்றம் பின்தள்ளப்பட்டுள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தற்போது நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அதன் உபவேந்தரின் பதவிக் காலம் கடந்த 12 ஆம் திகதி நிறைவடைந்த போதிலும், அவர் தொடர்ந்தும் பதவியில் நீடிக்கிறார்.

வேறு சில பல்கலைக்கழகங்களில் பீடாதிபதியின் பதவிக் காலம் நிறைவடைந்த பின்னர், அந்த வெற்றிடத்திற்கு நியமிக்கப்படும் பதில் பீடாதிபதி சுமார் 06 மாதங்கள் பதவியில் நீடிக்கின்றார்.

இதனால் பல்கலைக்கழக கட்டமைப்புக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

28. அப்பா கடை ஒன்றுக்குச் சென்று ரூ100ஐக் கொடுத்து 3பேனாக்களும் 4பென்சில்களும் வாங்கினார். பேனா ஒன்றின் விலை 15ரூபாவும் பென்சில் ஒன்றின் விலை 5 ரூபாவும் ஆகும். அப்பாவிற்கு மீதியாக கிடைக்க வேண்டிய பணம் யாது?
1) 70ரூபா　2) 60ரூபா　3) 35ரூபா　4) 40ரூபா

29. கமலா ஓர் ஆசிரியை. அவள் வீட்டிற்குத் தேவையான பொருட்களை வார இறுதியில் சாவகச்சேரி சந்தைக்குச் சென்று வாங்குவாள். அதற்குக் காரணமாக அமைவது பின்வருவனவற்றுள் எது என்பதைத் தெரிக
1) ஒரே இடத்தில் எல்லாப்பொருட்களையும் வாங்க முடியும்
2) தனக்கு விடுமுறை கிடைப்பதால்
3) வீட்டுக்கு அருகில் இருப்பதால்
4) சந்தையில் பொருட்கள் மலிவு என்பதால்

30. கடந்த சில மாதங்களாக யாழ்ப்பாணத்தில் டெங்குக்காய்ச்சல் பரவி வந்தது. ஆனால் தென்மராட்சி வலயப்பாடசாலைகளில் ஒரு மாணவர் கூட டெங்கு நோயினால் பாதிக்கப்படவில்லை. இதற்கு காரணமாக அமைவது?
1) பாடசாலைகளுக்கு அருகில் வைத்தியசாலை அமைத்திருப்பதால்
2) பாடசாலைச் சமூகம் சுற்றாடலை சுத்தமாக வைத்திருப்பதால்
3) அவர்கள் எல்லோரும் கற்றவர்கள் என்பதனால்
4) அங்கு டெங்குநுளம்புகள் இல்லை

31. தரம் 4 மாணவர்களுக்கு அவர்களது ஆசிரியர் பின்வரும் வாக்கியங்களை கரும்பலகையில் எழுதிவிட்டு சரியாக ஒழுங்குபடுத்துமாறு கூறினார். அவர் எழுதிய வாக்கியங்கள் வருமாறு
1) மறுநாட்காலை வயலுக்குச் சென்று பயிர்கள் உண்டாகி இருக்கின்றதா என்று பார்த்தான்.
2) விதை நெல் முளைத்திருக்கின்றதா என்று பார்த்தான்.
3) கமக்காரன் வயலில் நெல் விளைவிப்பதற்காக வயலை ஒழுங்குபடுத்தினான்.
4) சில நாட்களின் பின் நெற்பயிர்களைக் கண்டு கமக்காரன் சந்தோஷம் அடைந்தான்.
5) வயல் முழுவதும் முளைத்த நெல்லை நட்டான்.

(14) இவ் வசனங்களை கஜானி, ஆரஷன், தனுஷிகா, என்ற 3மாணவர்கள் ஒழுங்குபடுத்திய விதம் வருமாறு அவர்களுள்சரியாக ஒழுங்குபடுத்தியோர்
1. கஜானி - 1, 5, 3, 2, 4
2. ஆரஷன் - 3, 2, 5, 1, 4
3. தனுஷிகா - 2, 3, 5, 1, 4

32. தங்கலட்சுமி ரீச்சர் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும், அவரது சித்தப்பா வீட்டிற்குச் செல்வார். ரீச்சர் நேற்றுமுன்தினம் சித்தப்பா வீட்டிற்குச் சென்றிருந்தால் நாளை மறுதினம் என்ன கிழமை?
1) வியாழன்　2) புதன்　3) சனி　4) செவ்வாய்

33. சாருமதி மீசாலையில் தனது வீட்டுத்தோட்டத்தில் ஒரு கத்தரிச்செடியும், அடுத்து ஒரு மிளகாய்ச் செடியும், அதற்கடுத்து ஒரு வெண்டிச்செடியும் மாறி மாறி நட்டாள். அந்த வரிசையில் 25ஆவது செடி யாது?
1) மிளகாய்
2) கத்தரி
3) வெண்டி
4) சொல்லமுடியாது

### நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(01). 1. 2　2. 3　3. 1　4. 1　5. 1　(02). 6. 2　7. 3　8. 3　(03). 9. 1　10. 1
(04). 11. 2　12. 3　13. 1　(05). 14. 3　15. 1　16. 2　17. 2　18. 1　(06). 19. 1　20. 1
21. 1　22. 1　23. 3　24. 3cm　25. 48cm²　26. 28cm　(07). 27. 2　28. 3　29. 1　30. 1　31. 3
32. 1　33. 2　34. 1　36. 3　37. 2　38. 3　39. 4　40. 1　(08). 41. நாய், பூனை, எலி, பசு
42. எட்டிப்எட்டி, பாய்ந்து பாய்ந்து　43. வெள்ளை　44. சுற்றுச்சூழல்　45. 1. பாசம்　2. பார்த்தால்　3. குடித்து
4. இல்லம்　46. பாய்ந்து, பாய்ந்து பிடிக்கிறதே　47. பாய்ந்து, பருகி　48. சீறும் / கத்தும்　49. பசுக்கள்
50. துக்கம், கவலை　2. குறைந்து

**பயிற்சி வினாக்களின் விடைகள் நாளைமறுதினம் வெளியாகும்**



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - I
1 மணி 15 நிமிடம்



# கல்வி முரசு

1 தொடக்கம் 35 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையை எழுதுக

(01) பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வசனமாக்குக
01. மனமே / பொன் / போதும் / என்ற / மருந்து / செய்யும்
..........................................................................
02. மக்களுக்கு / பகிர்ந்தளிக்கப்பட்டன / வலைகள் / கிராம / நுளம்பு
..........................................................................

(02) பின்வரும் மரபுத்தொடர்களுக்கான பொருளை எழுதுக
01. கண்ணாயிருத்தல் : ..........................................
02. ஆறப்போடுதல் : ..........................................

(03) பின்வரும் தொடர்மொழிகளின் கருத்தை வெளிப்படுத்தும் தனிச்சொல்லை எழுதுக
01. தன்னலத்தை மட்டும் கருதி வாழ்பவன் : ..........................................
02. மனைவியை இழந்தவன் :..........................................


(04) பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச்சொல்லை எழுதுக
01. கரும்பலகை : ..........................................
02. அதிபர் : ..........................................

(05) பின்வரும் ஆங்கிலச்சொற்களின் தமிழ்க்கருத்தை எழுதுக
01. Doctor :..........................　02. Playground : ..........................
03. Eraser : ..........................　04. cupboard : ..........................

(06) பின்வரும் சிங்களச்சொற்களின் தமிழ்க்கருத்தை எழுதுக
01. அம்ப : ..........................　02. (டி)பொன்ன : ..........................

(07) பொருத்தமான சிங்களச்சொல்லைத் தமிழில் எழுதுக
01. பாடசாலை ..........................　02. கிளி ..........................

(08) பின்வரும் குறியீடுகள் குறிக்கும் கருத்தை எழுதுக





01..............　02..............　03..............　04..............

(09) மிகச்சரியான விடையின் கீழ்க் கோடிடுக
01. உடலும் உளமும் ஆரோக்கியம் பெற செய்யக்கூடிய செயற்பாடு
1) தியானம்　2) உடற்பயிற்சி　3) யோகாசனம்
02. தான் வாழும் சூழலின் நிறத்திற்கேற்ப உடலின் நிறத்தை மாற்றும் பிராணி
1) பச்சோந்தி　2) ஓணான்　3) பச்சிலைப்பூச்சி

03. மிகவும் கூர்மையான கண்களையுடைய பறவை எது?
1) காகம் 2) பருந்து 3) கிளி

04. குந்துகாலி என அழைக்கப்படும் பறவை எது?
1) மைனா 2) ஆந்தை 3) புழுணிக்குருவி

05. படம் உணர்த்தும் உடு யாது?
1) சிறுகரடி 2) கும்பம்
3) கலப்பை



06. பூச்சியுண்ணித் தாவரத்தொகுதி
1) கெண்டித்தாவரம், குருவிச்சை, கிளிச்சாடிச்செடி
2) கிளிச்சாடிச்செடி, துரோசீரா, கெண்டித்தாவரம்
3) வெசாக்மரம், பனங்கற்றாளை, கெண்டித்தாவரம்

07. உலகிலே குறைந்த மக்கள் தொகை கொண்ட நாடு
1) சீனா 2) வத்திக்கான் 3) கியூபா

08. தேசியகீதத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் யார்?
1) மு.நல்லதம்பிப்புலவர் 2) ஆனந்தசமரக்கோன் 3) C.W.W.கன்னங்கரா

09. சந்திரன் பூரணமாக மறையும் நாள் எது?
1) பூரணை 2) அமாவாசை 3) அட்டம்

10. பனிக்கட்டியை நீரில் இட்டால்
1) மிதக்கும் 2) தாழும் 3) ஆவியாகும்


11. ஏழு படங்கள் ரூபா 15.00 எனின், 14 படங்களின் விலை யாது?
..................................................

12. 627 பழங்களை மூன்று பேருக்கு சமமாகப் பங்கிட்டால் ஒருவர் பெறும் பழங்களின் எண்ணிக்கை யாது?
..................................................

13. ஓர் எண்ணை நாலால் பெருக்கி, 8ஐக் கூட்டி 4ஆல் வகுக்க வரும் விடை 8 எனின் அவ் எண் யாது?
..................................................

14. சங்கிலி ஒன்றின் நீளம் 7cm 8mm இன்னொரு சங்கிலியின் நீளம் 8cm 6mm இரண்டினதும் மொத்த நீளம் யாது?
..................................................

15. இவ் உருவின் சுற்றளவு யாது?





16. 6லீற்றர் கொள்ளக்கூடிய பாத்திரத்தில் உள்ள பாலின் அளவு 2லீற்றர் 750மில்லிலீற்றர். பாத்திரத்தை நிரப்புவதற்கு இன்னும் எவ்வளவு பால் வேண்டும்?
..................................................

17. வீதியொன்றில் இரு மின் கம்பங்களுக்கிடையே 3 தொலைத்தொடர்புக் கம்பங்கள் நாட்டப்பட்டிருந்தன. அவ்வீதியில் 12 மின்கம்பங்கள் இருந்தன. எனின் அவற்றின் இடையே நடுவதற்குத் தேவையான தொலைத் தொடர்புக் கம்பங்கள் எத்தனை?
..................................................

18. $\frac{1}{6} + \frac{2}{3}$ இதனைக் கூட்டுக ..................................................



19.



இதன் சிறிய சதுரம் ஒன்றின் பரப்பளவு $4cm^2$ எனின் பெரிய சதுரத்தின் சுற்றளவைக் காண்க?
..................................................


20. 3kg சீனியின் விலை ரூபா 160.00 எனின் 100g சீனியின் விலை என்ன? ..................................................

(10) 21. எமது ஊரில் கடந்த மாதம் புயற்காற்றுடன் பெருமழை பெய்தது ......... என்னும் சம்பவத்தினைத் தொடர்ந்து 6 வாக்கியம் எழுதுக (ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்குக் குறையாமல் பொருத்தமான எழுவாய் பயனிலைகளுடன் இருத்தல் வேண்டும்)


01..................................................
02..................................................
03..................................................
04..................................................
05..................................................
06..................................................

(11) முதலாம், இரண்டாம் வினாக்களில் தரப்பட்டுள்ள உருவங்கள் ஒரே மாதிரியாகத் தெரிந்தாலும் எல்லா வினாக்களிலும் உள்ள ஓர் உருவத்தில் குறைபாடு உண்டு. அதைத் தெரிவு செய்து அதன் கீழ்க்கோடிடுக

22.





23.




(12) கீழே உருவில் தரப்பட்டுள்ள பிராணியை நன்கு விவரிக்கும் விடையைத் தெரிவு செய்து அதன்கீழ்க் கோடிடுக

24.



(01). இது வீட்டில் வசிக்கும் மிருகம்
(02). இது தண்ணீரில் நீந்தாது. பறந்து திரியும்
(03). இது ஒரு முலையூட்டி இரவில் பறந்து திரியும்


25.




(01). இது ஒரு மிருகமாகும் பால் தராது
(02). இது வீட்டில் வாழும் மிருகம். காவல்காக்கும்
(03). இதற்கு நான்கு கால்கள் உண்டு ஓர் மிருகம் அல்ல

(13) 26 - 27 வினாக்களில் தரப்பட்டுள்ள உருவக்கோலங்களை அவதானித்து அடுத்துவரும் உருவை A,B,C,D,E,F ஆகியவற்றிலிருந்து தெரிந்து கீழ்க்கோடிடுக.

26.




27.



# துணுக்காய் - அக்கராயன் வீதி நீண்டகாலமாக புனரமைப்பில்லை

## விசனம் தெரிவிக்கும் மக்கள்



முல்லைத்தீவு துணுக்காயிலிருந்து அக்கராயன்வரையான 22 கிலோமீற்றர் வீதியின் புனரமைப்பு வேலைகள் அரைகுறையாகவே காணப்படுவதுடன், துணுக்காய் நகரத்திலிருந்து அக்கராயன் நோக்கிய 05 கிலோமீற்றர் வரையான வீதியே புனரமைக்கப்பட்ட நிலையில் மிகுதி வீதி பெரும் குன்றும் குழியுமாகவே காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக உயிலங்குளம், ஆலங்குளம், தென்னியங்குளம், கோட்டைக் கட்டியகுளம, அம்பலப்பெருமாள்குளம் ஆகிய கிராம மக்கள் வீதி சீரின்மையால் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

துணுக்காய் பிரதேச செயலகத்தில் இறுதியாக நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் வீதி புனரமைக்கப்படாமை தொடர்பாக மக்களின் பிரதிநிதிகளினால் குரல் எழுப்பப்பட்டிருந்தது. வீதி புனரமைக்கப்படாமையினாலேயே துணுக்காயிலிருந்து கிளிநொச்சி அக்கராயன் வழியாக யாழ்ப்பாணம நடைபெற்ற பேருந்து சேவை கடந்த மூன்றரை ஆண்டுகளாக இடம்பெறுவதில்லை எனவும் இதனால் போக்குவரத்து தேவையை பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களின் வீதி அபிவிருததித் திணைக்களத்தின் பிரதம பொறியியலாளர் வல்லிபுரம் ஜெகானந்த மேற்படி ஒப்பந்தகாரர்களின் இழுபறிகளினால் வீதி புனரமைப்புகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

தற்போது குறித்த வீதியினை மக்களின் போக்குவரத்திற்கேற்றவாறு விரைவான புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (160)


வாழ்க வளமுடன்

தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : மோ.வர்ஷா

முகவரி : ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.

அகவை 2 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்





வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..........................................

முகவரி :- ..........................................

பிறந்த ஆண்டு :- ..........................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்


# நிலையில்லா உறவு நிஜமில்லா வாழ்வை உணர்த்தும் விபூதிப்புதன்

> "மனித உடல் உலகிற்கு வரும்போது களங்கமற்றதாகவும். வாழ்க்கை என்னும் ஓட்டத்தில், வாழ்வுப்பயணத்திலும், சிலவற்றை அனுபவத்திலும் இவ்வுலக வாழ்வு நிரந்தரம் இல்லை என்பதை அறியும் போது பாதி வாழ்வு முடிந்து விடுகின்றது."

கிறிஸ்தவத்தின் முக்கியமான தினங்களைக் குறித்துப் பேசும்போது கிறிஸ்து பிறப்பு, புனித வெள்ளி, உயிர்ப்பு, விண்ணேற்பு, குருத்தோலை தினம் என விழாக்கள் நம்முடைய நினைவுக்கு வருவதுடன் சந்தோசமாக அவற்றையே நாம் சொல்லியும் வருவோம்.

ஆனால் பெரும்பாலும் எம்முடைய நினைவுக்குள் வராத நாள் சாம்பல் புதன் அதாவது விபூதிப் புதன் கிறிஸ்தவர்களின் வாழ்க்கையில் தவக்காலத்தின் முக்கியத்துவம் வாய்ந்த நாளாகவே காணப்படுகின்றது.

தவக்காலம் என்பது நம்முடைய தவறுகளை உணர்ந்து திருந்தவும், நம்மை நாமே அறிந்து நம்மை இறைவனின் வழியில் கொண்டு வரவும் தரப்பட்டிருக்கும் காலம் ஆகும்.

அன்றைய தினத்தில் அருட் தந்தை மக்களுடைய நெற்றியில் "**மனிதனே நீ மண்ணாக இருக்கின்றாய், மண்ணுக்கே திரும்புவாய் மறவாதே**" என்று கூறி சாம்பலினால் சிலுவை அடையாளம் வரைகிறார்.

குருத்தோலை தினத்தில் பயன்படுத்தப்படும் ஓலையே அடுத்த ஆண்டு எரித்து சாம்பலாக்கப்பட்டு, விபூதிப் புதன் தினத்தில் நெற்றியில் பூசப்பயன்படுகிறது.

மனித உடல் உலகிற்கு வரும்போது களங்கமற்றதாகவும். வாழ்க்கை என்னும் ஓட்டத்தில், வாழ்வுப்பயணத்திலும், சிலவற்றை அனுபவத்திலும் இவ்வுலக வாழ்வு நிரந்தரம் இல்லை என்பதை அறியும் போது பாதி வாழ்வு முடிந்து விடுகின்றது. மீதி வாழ்வை உண்மையோடு வாழ மனிதன் ஆரம்பிக்கும் போது நெற்றியில பூசப்படும் சாம்பல் வாழ்வின் நிரந்தர மற்ற தன்மையை எடுத்துக் கூறுகின்றது.




அதுமட்டுமன்றி இவ்வுலகில் தரித்துவிட இது உண்மையான இருப்பிடம் அல்ல என்பதை மெய்ப்பிக்கும் காலம் வந்து விட்டது. மனிதன் மண்ணுக்கு சமனானவன் அவனது வாழ்வு நிலையற்றவை என்பதை இதயத்திலும், மனதிலும் நினைவில் கொண்டு வாழ்வில் காலடி எடுத்து வைக்க வேண்டும் என்பதையே இந்த விபூதிப்புதன் எடுத்துக்கூறுகின்றது.

இந்த தவக்காலத்தின் மூலம் எமது இயலாமைகளையும் பாவங்களையும் பிழைகளையும் கண்டறிந்து மனமாற்றமடைந்து மன்னிப்புக் கோருவதற்கு தவக்காலம் நம் அனைவரையும் அழைத்து நிற்கின்றது.

இந்தக் காலத்தில் ஆடம்பர அணி கலன்கள், உணவு, கேளிக்கை, பொழுதுபோக்கு இவற்றை வெறுத்து அதன் மூலம் மிச்சப்படுத்தப்படும் பணத்தை ஏழைகளுக்கு வழங்கு வதை பலரும் கடைப்பிடிப்பதன் மூலம் நம் பாவங்கள் மன்னிக்கப் படும் என வேதாகமம் கூறுகின்றது.

நோன்பு இருப்பது பிறருக்குத் தெரியாமல் இருப்பதே நல்லது என்கிறார் இயேசு. நோன்பு இருப்பதை பெருமைக்காகவும், புகழுக்காகவும், சடங்கிற்காகவும் செய்யாமல் சுய விருப்பத்தோடும் இறைவனில் சரணாகதி அடையும் மனநிலையுடனும் செய்யவேண்டுமென்பதே இறைவனின் விருப்பமும் போதனையும் ஆகும்.

எனவே இந்தத் தவக்காலத்தின் போது எம்மால் மற்றவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை களைந்தெறிந்து நிரந்தரமற்ற எம் வாழ்வை அர்த்தமுள்ளதாக வாழ முயற்சிக்க வேண்டும்.

## முரசின் இன்றைய பலன்

(18.02.2015 புதன்கிழமை)

ஜய வருஷம் மாசி மாதம் 06 ஆம் திகதி.
சதுர்த்தசி திதி. சித்தம் யோகம்.
திருவோணம் நட்சத்திரம் மு.ப. 09.22 வரை. பின் அவிட்டம்.
இராகு காலம 12.32 - 02.02 வரை. சுபநேரம 05.02 - 06.32 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**: சகஊழியர்களின் ஒத்துழைப்பினால் தேக்கநிலை அற்றுப் போதல்.

**ரிஷபம்**: மனச்சான்று உறுத்தியதினால் தவறு செய்யாது விடுதல்.

**மிதுனம்**: அலைச்சலின் பின்னர் அனுமதி கிட்டுதல்.

**கடகம்**: முகவரின் நம்பிக்கை இழப்பினால் கட்டிய பணத்தை மீளப் பெற எண்ணுதல்.

**சிம்மம்**: சீதனம் காரணமாக முற்றாகிய விவாகம் இழுபடல்.

**மீனம்**: புதிய வாகனம் கொள்வனவிற்கு பிதா உதவுதல்.

**கன்னி**: பரீட்சைச்சித்தியினால் பதவி ஏற்றம் கிடைத்தல்.

**கும்பம்**: எதிரியைக் கண்டவிடத்து மௌனிப்பு ஆபத்தை விலக்கல்.

**மகரம்**: நம்பகம் இல்லாமையினால் பூமிகொள்ள விரும்பாமை.


**தனுசு**: துணையின்றித் தனித்துச் சென்றவேளை பயப்பிராந்திய மேற்படல்.

**விருச்சிகம்**: விலங்கு குறுக்கறுத்தவேளை மயிலிழையில் விபத்தினின்றும் தப்பிவிடல்.

**துலாம்**: நோய்நிலை அறிய மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளல்.

# ஐ.எஸ்.ஐ.எஸ்.அமைப்பிற்கு எதிராக கூட்டணி நாடுகளின் ஆதரவு அதிகரிப்பு

## ஈராக் பிரதமர் தெரிவிப்பு




ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத இயக்கத்திற்கு எதிராக கூட்டணி நாடுகள் அளித்துவந்த் ஆதரவு சமீபகாலமாக அதிகரித்து வருவதாக ஈராக் பிரதமர் தெரிவித்துள்ளார்.

ஈராக் மற்றும் சிரியா நாடுகளிலிருந்து செயற்படும் ஐ.எஸ். ஐ.எஸ் தீவிரவாத இயக்கத்திற்கு எதிராக அமெரிக்காவின் தலைமையில் பக்ரைன் ஜோர்தான் கட்டார் சவுதி அரேபியா மற்றும் அரேபிய நாடுகள் கூட்டணியாக செயற்பட்டு வருகின்றன.

இதுதொடர்பாக செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டியளித்த ஈராக் பிரதமர் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பிற்கு எதிராக ஏற்கனவே போதுமான எண்ணிக்கையில் கூட்டணி நாட்டு இராணுவ வீரர்கள் தாக்குதல் நடாத்தி வருவதாகவும், ஆனால் அவர்களுக்கு மேலும் ஆயுதங்கள் தேவைப்படுவதாக தெரிவித்தார்.

கடந்த சில வாரங்களாக கூட்டணி நாடுகள் முனைப்பாக செயற்படுவதுடன், ஐ.எஸ். ஐ.எஸ். இயக்கத்திற்கு எதிராக அளிக்கும் ஆதரவு அதிகரித்துள்ளதோடு, ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகளுக்கு எதிராக வான்வழி தாக்குதல்களும் அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# ஜப்பானில் நிலநடுக்கம் சுனாமி எச்சரிக்கை



ஜப்பானில் நேற்றுக் காலை 8 மணி அளவில் கடும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் வடகிழக்கு பகுதியில் உள்ள இவாட் மாகாணத்தின் கடற்கரை பகுதியில் பூமி அதிர்ந்தது. அதைத் தொடர்ந்து அங்கு வீடுகள் மற்றும் கட்டடங்கள் குலுங்கின. எனவே பீதி அடைந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி தெருக்களில் ஓட்டம் பிடித்தனர்.

இங்கு 6.9 ரிக்டர் ஆக நிலநடுக்கம் பதிவானதாக அறிவிக்கப்பட்டது. இவாட் மாகாணத்தில் கடலுக்கு அடியில் 10 கி.மீற்றர் ஆழத்தில் அது உருவாகியுள்ளது. இதனால் கடலில் வழக் கத்துக்கு மாறாக அலைகள் உயரமாக எழும்பின. நிலநடுக்கம் ஏற்பட்ட 45 நிமிடங்களுக்கு பிறகு 10 செ.மீற்றர் அளவுக்கு அலைகள் உருவாகின.

அவை மேலும் 1 மீற்றர் 83 அடி உயரத்துக்கு எழும்பும் என எதிர்பார்க்கப்படுகிறது., எனவே ஜப்பான் வானிலை மையம் சுனாமி எச்சரிக்கை விடுத்தது. அதை தொடர்ந்து கடலோரத்தில் தங்கியிருக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

# இந்து மத்க்கோவிலில் வெறுப்பூட்டும் சித்திரம்

## அமெரிக்காவில் சம்பவம்

(வொஷிங்டன்)

வொஷிங்டனின் சியாட்டில் நகரின் ஸ்னோகோமிஷ் கவுண்டியில் உள்ள இந்து கோவிலின் சுற்றுச்சுவரில் மர்ம நபர்கள் 'ஸ்வஸ்திக்' முத்திரையை வரைந்து அதன் மேலே இனவெறியை வெளிப்படுத்தும் விஷமத்தனமான வாசகங்களை எழுதியிருந்தமை பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

சில வருடங்களுக்கு முன்னரும் கோவிலின் சுற்றுச்சுவரில் இது போன்ற முத்திரையை மர்ம நபர்கள் வரைந்திருந்தனர். ஆனால் அதில் எதுவும் எழுதப்படாததால் பொலிஸில் புகார் அளிக்கவில்லை. தற்போது முத்திரையின் மேல் மர்ம நபர்கள் சிலர் 'வெளியே போ' என்று எழுதியிருப்பது வருத்தமளிக்கிறதென்று கோவில் அறங்காவலர் குழுவின் தலைவர் நித்யா நிரஞ்ஜன் தெரிவித்தார்.

தீங்கிழைக்கும் துன்புறுத்தல் என்ற வகையில் இந்த வழக்கை ஸ்னோகோமிஷ் கவுண்டி ஷெரீபின் துறை விசாரித்து வருகிறது. நேற்றுமுன்தினம் கோவிலைப் பார்வையிட்ட அந்த கவுண்டியின் உயர் அதிகாரிகள், இந்த சம்பவத்தில் ஈடுபட்டவர்களை கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக தெரிவித்தனர்.

உலகச் செய்திகள்

# ஸ்ரீரங்கம் இடைத்தேர்தல் அ.தி.மு.க. அமோக வெற்றி



ஸ்ரீரங்கம் இடைத் தேர்தலில் அ.தி.மு.க. வேட்பாளர் எஸ். வளர்மதி 96 ஆயிரம் வாக்குகளை அதிகமாகப் பெற்று வெற்றி பெற்றுள்ளதுடன் இதில் 10 ஆவது சுற்றிலேயே ஜெயலலிதாவை முந்தியுள்ளார். இதில் தி.மு.கவைத் தவிர, மற்ற அனைத்துக் கட்சிகளும் கட்டுப்பணத்தை இழந்துள்ளன.

ஸ்ரீரங்கம் இடைத் தேர்தலில் அ.தி.மு.க. வேட்பாளர் எஸ். வளர்மதி 1,51,561 வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றுள்ளார்.


தனக்கு அடுத்ததாக வந்த தி.மு.க. வேட்பாளர் என். ஆனந்தை விட 96,516 வாக்குகள் அதிகம் பெற்றுள்ளார்.தி.மு.க. வேட்பாளர் என் ஆனந்த் 55,045 வாக்குகளையும் பாரதீய ஜனதாக் கட்சியின் வேட்பாளர் எம். சுப்ரமணியம் 5,015 வாக்குகளையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர் கே. அண்ணாதுரை 1552 வாக்குகளையும் பெற்றுள்ளார்.

இந்தத் தேர்தலில் அ.தி.மு.க., தி.மு.க., பா.ஜ.க., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உட்பட 29 வேட்பாளர்கள் களத்தில் இருந்தனர்.

இதில் தி.மு.க.வைத் தவிர, மற்ற அனைத்துக் கட்சிகளும் கட்டுப்பணம் இழந்துள்ளன.

அ.தி.மு.க. இந்த இடைத் தேர்தலில் வெற்றிபெற்றதையடுத்து, தமிழகம் முழுவதும் அ.தி.மு.க. தொண்டர்கள் பட்டாசுகளை வெடித்தும் கோஷங்களை எழுப்பியும் உற்சாகக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர்.

# டில்லியின் போக்குவரத்துக்கு 'மெட்ரினோ' திட்டம் அறிமுகம்



(புதுடில்லி)

டில்லியில், போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக, மெட்ரோ ரயிலுக்கு அடுத்தபடியாக, "மெட்ரினோ" திட்டத்தை செயற்படுத்த, மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

தலைநகர் டில்லியில், போக்குவரத்து நெரிசல் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. குர்கான் அருகேயுள்ள மானேசர் என்ற நகரத்தை நோக்கி, இப்போது அதிகமான நிறுவனங்கள் படையெடுத்து வருகின்றன.

டில்லியிலிருந்து, மானேசர், 32 கி.மீ., தொலைவில் உள்ளது. கடும் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டுள்ளதால், டில்லியிலிருந்து, மானேசரில் உள்ள அலுவலகங்களுக்கு செல்வதற்கு நீண்ட நேரமாகிறது. இந்த போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில், "மெட்ரினோ பாட்ஸ்" என்ற புதிய போக்குவரத்து வசதியை அறிமுகப்படுத்த, மத்திய சாலை போக்குவரத்து அமைச்சகம் முடிவு செய்துள்ளது.

சாரதி இல்லாமல், தானாகவே இயங்கும் சிறிய அளவிலான பெட்டி போன்ற வாகன போக்குவரத்துக்கு, "மெட்ரினோ பாட்ஸ்" என்று பெயர். ஒரு வாகனத்தில், ஐந்து பேர் பயணிக்கலாம். அடுத்தடுத்து, தொடர்ச்சியாக இந்த வாகனங்களை இயக்குவதன் மூலம், ஒரு மணி நேரத்தில், 7,500 பேர் பயணிக்க முடியும். நகர்ப் பகுதிகளில், மணிக்கு, 60 கி.மீ., வேகத்திலும், புறநகர்ப் பகுதிகளில், 120 கி.மீ. வேகத்திலும் பயணிக்க முடியும்.

# கைபேசிப் பயன்பாடு ஆண்களுக்கு சவுக்கடி

## ஐ.எஸ்.ஐ.எஸ். இன் வெறிச்செயல்

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் கைபேசி பயன்படுத்திய 5 ஆண்களுக்கு பொதுமக்கள் மத்தியில் சவுக்கடி தண்டனையினை நிறைவேற்றியுள்ளனர்.

ஈராக்கில் 2ஆவது மிகப் பெரிய நகரமான மொசூல் உள்ளிட்ட பகுதிகளை கடந்த யூன் மாதத்தில் ஆக்கிரமித்த ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் அங்கு தனிநாடு அமைத்துள்ளனர்.

மேலும் தாங்கள் இஸ்லாமிய நாட்டை தக்கவைத்துக் கொள்வதற்காக அங்கு பலவிதமான கட்டுப்பாடுகள் மற்றும் சட்ட திட்டங்களை பொதுமக்களுக்கு விதித்துள்ளனர். அவ்வாறான கட்டுப்பாடுகளில், கைபேசி பயன்படுத்தக் கூடாது என்பது முக்கியமான ஒன்றாகும். இந்த கட்டுப்பாடையும் மீறி யாரேனும் கைபேசியை பயன்படுத்தினால் அவர்களுக்கு 30 சவுக்கடிகள் தண்டனையாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த அறிவிப்பையும் மீறி கைபேசி பயன்படுத்திய 5 ஆண்களுக்கு பொதுமக்கள் மத்தியில் சவுக்கடி தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவற்றைத் தவிர மேலும் 3 பெண்களின் கைகள் வெட்டித் துண்டிக்கப்பட்டுள்ளன. ஆனால் இவர்கள் செய்த குற்றம் குறித்து தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை.



பிரேசில் சாவோ பாலோவில் நடக்கும் பாரம்பரிய சம்பா நடன பள்ளிகள் சார்பில் நடைபெறும் அணிவகுப்பில் வந்த பிரமாண்ட உருவங்கள் அடங்கிய வண்டியின் காட்சியின்போது...

# அடிப்படையற்ற கட்டுப்பாடுகளுடன் நற்பணிகளில் ஈடுபட முடியாது

## இராஜாங்க அமைச்சர் விஜேசிங்க தெரிவிப்பு



நாட்டுக்காக நற்பணிகளில் ஈடுபட ஆசை உண்டு. அதற்காக அடிப்படையற்ற கட்டுப்பாடுகளுடன் அத்தகைய பணிகளில் ஈடுபட முடியாது என உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க தெரிவித்தார்.

கண்டியில் நேற்று ஊடகவியலாளர்களை சந்தித்துக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவியாக நியமிக்கப்பட்டிருந்த பேராசிரியர் க்ஷனிகா ஹிரும்புரேகம பதவி நீக்கம் தொடர்பாக ஏற்பட்டுள்ள சர்ச்சை தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

நான் வெளிநாட்டில் இருந்த போது அவருக்கான பதவி நீக்க உத்தரவு வழங்கப்பட்டிருந்தது. இவ் விடயமாக எனது ஆலோசனைகள் பெறப்பட வில்லை. இதற்கான அடிப்படை விடயம் என்ன என நான் சம்பந்தப்பட்டவர்களிடம் வினவிய போது அரசியல் காரணங்கள் முன்வைக்கப்பட்டன.

அப்படியாயின் பல்கலைக்கழக அதிகாரிகளுக்கு அரசியல் உரிமைகள் நீக்கப்பட வேண்டும். அரசியல் உரிமைகள் இல்லாத நிலையில் அரசியலில் ஈடுபட்டால் அது தவறுதான். அப்படியான ஒரு நிலைமை இல்லாத போது அவரை பதவி நீக்க தகுந்த காரணம் ஏதும் இருக்க வேண்டும்.

நாட்டுக்காக நிறையச் செய்ய வேண்டியுள்ளது. அதுவும் பாரிய சிரமத்திற்கு மத்தியிலேயே மேற்கொள்ள வேண்டியுள்ளது. நாட்டில் ஒரு நல்லாட்சி ஏற்பட வேண்டுமென்றே மக்கள் வாக்களித்தனர். எனவே நல்லாட்சி ஏற்பட வேண்டுமாயின் சிரமங்களைத் தாண்டித்தான் செல்ல வேண்டும்.

மேற்படி பிரச்சினை தொடர்பாக நான் மூன்று மாற்று வழிகளை முன்வைத்துள்ளேன். அது உயர் மட்டத்தில் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. அதில் ஏதாவது ஒன்று பின்பற்றப்பட்டால் என்னால் தொடர்ந்து இயங்க முடியும். அல்லாத பட்சத்தில் நான் தொடர்ந்து இருக்க முடியுமா என்பது பற்றி கூற முடியாதுள்ளது. அது இன்றோ நாளையோ நடக்கலாம்.

நாட்டுக்காக நற்பணிகளில் ஈடுபட ஆசை உண்டு. அதற்காக அடிப்படையற்ற கட்டுப் பாடுகளுடன் ஈடுபட முடியாது. நான் அல்லாத வேறு எவரைக் கொண்டாவது இப்பணியை செவ்வனே செய்ய முடியுமாயின் அது பற்றி நான் தடையாக இருக்க மாட்டேன். எனத் தெரிவித்தார்.

# அபிவிருத்தி லொத்தர் யாழ்.வாசிக்கு 10ஆயிரம் ரூபா

(திருநெல்வேலி)

அபிவிருத்தி லொத்தர் சீட்டிழுப்பில் யாழ்ப்பாண வாசியொருவருக்கு 10 ஆயிரம் ரூபா பணம் கிடைக்கப்பெற்றுள்ளது. 04,26,45 ஆகிய 3 இலக்கங்களும், விருச்சிக ராசியொன்றும் பொருந்தியதினால் இவர் இவ்வதிர்ஷ்ட பணத்துக்கு உரியவரானார்

கடந்த 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை இச் சீட்டிழுப்பு நடைபெற்றது. இவ்வதிர்ஷ்டச் சீட்டினைப் பரிசாகப் பெற்றவர் கல்வியங்காடு சந்திக்கருகாமையில் சீட்டுக்கள் விற்பனை செய்யும் யூ.விஜயகுமார் என்பவரிடம் சீட்டினைப் பெற்றிருந்தார்.

இவரிடம் சீட்டு வாங்கிய ஒருவர் முன்னர் 5 இலட்சம் ரூபாவைப் பரிசாகப் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (137)

# தேர்தல் குழுவில் மகிந்த, சந்திரிகா ஆட்சியமைக்க தயாராகிறது ஐ.ம.சு.மு.

## தேசிய அரசாங்கம் என்ற பேச்சுக்கே இடமில்லை- சுசில்




ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் போசகர்களான முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராபக்ஷ மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க ஆகியோர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் விசேட தேர்தல் ஆலோசனைக்குழுவில் நியமிக்கப் பட்டுள்ளதாக தெரிவித்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளரும், ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியின் செயலாளருமான சுசில் பிறேம ஜயந்த, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியமைக்க தயாராகி வருவதாகவும் கூறியுள்ளார்.

கொழும்பில் ஞாயிறன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன், முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ, சந்திரிகா குமாரதுங்க ஆகியோர் கட்சியின் விசேட தேர்தல் ஆலோசனைக்குழுவில் நியமிக்கப் பட்டுள்ளதாகவும் கூறிய அவர், இவர்களது வழிகாட்டலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையின்கீழ் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அடுத்த தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியமைக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான தற்போதைய சிறுபான்மை அரசாங்கத்தில் பல்வேறு அரசியல்வாதிகளும் இருக்கலாம் என்று கூறிய அவர், எனினும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு தெரிவிப்பதற்காக கட்சி மாறிய அனைவருக்கும் மன்னிப்பு வழங்கப்பட்டு மீண்டும் அவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைத்துக்கொள்ளப்பட்டிருப்பதாகவும் ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போது தெரிவித்தார்.

எனவே, அடுத்த தேர்தலில் இவர்கள் அனைவரும் சுதந்திரக் கட்சியின் கீழேயே தேர்தலில் போட்டியிடுவார்கள் என்றும் கூறிய அவர், இந்த நிலையில் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது குறித்து தமது கட்சி சிந்திக்கவில்லை என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

இதேவேளை, தேர்தலில் போட்டியிடுவதற்கு ஏதுவாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 60 நாள் வேலைத் திட்டம் ஒன்றை அமுல்படுத்தியிருப்பதாக அதன் செயலாளர் என்ற வகையில் சுசில் பிறேம ஜயந்த ஞாயிறன்று வெளியான கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையொன்றுக்கு தகவல் வெளியிட்டிருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த ஜனாதிபதி தேர்தலில் பெற்ற 58 இலட்சம் வாக்குகளையும் தக்கவைத்துக்கொள்ளும் வகையில் அவரையும் தேர்தல் பிரசாரத்தில் இணைத்துக்கொள்ள வேண்டும் என்று கட்சியின் மூத்த உறுப்பினர்கள் பலரும் கோரிக்கை விடுத்திருப்பதாகவும் தெரிவித்திருந்த அவர், மகிந்த ராஜபக்ஷவுடன் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா மற்றும் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என மூவரும் தேர்தல் பிரசார மேடைகளில் ஒன்றாகத் தோன்றி முன்னணியின் வெற்றிக்காக பிரசாரம் செய்யவேண்டும் என்று அவர்கள் விரும்புவதாகவும் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

# சிக்கலான நிலைமைக்குள் புதிய அமைச்சு நியமனங்கள்

புதிய அரசாங்கத்தின் அமைச்சர்கள் நியமனம், செயலாளர்கள் நியமனம் மற்றும் நிறுவன தலைவர்கள் நியமன நடவடிக்கைகளில் சிக்கலான நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

2015 ஜனவரி 18 ஆம் திகதி வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய அமைச்சுக்களுக்கான ஒதுக்கப்பட்ட துறைகளினால் இந்த நிலைமை மேலும் மோசமாகியுள்ளது.

வனஜீவ்ராசிகள் திணைக்களம் விளையாட்டுத்துறை அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளமை இதில் முக்கிய விடயமாகும். உள்நாட்டு அலுவல்கள் அமைச்சருக்கு மீன்பிடித்துறை வழங்கப்பட்டுள்ளது.

இதனால், பிரதியமைச்சர்களுக்கு துறைகளை ஒதுக்குவதிலும் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. இந்த நிலைமையானது நாட்டின் முழு அரச நிர்வாகத்துறையையும் சிக்கலுக்கு உள்ளாக்க காரணமாகியுள்ளது என அரச ஊழியர்களும் அதிகாரிகளும் சுட்டிக்காட்டியுள்ளன.

### தேசிய...

குறித்து பரிசீலிக்கத்தயார் எனினும் அதற்கு முன்னதாக இனப்பிரச்சினைக்கான தீர்வு மனித உரிமைநிலை தொடர்பாக நாங்கள் அரசுடன் உடன்படிக்கை ஒன்றுக்கு செல்லவேண்டியுள்ளது.

இதன்பின்னர் தேசிய அரசில் இணைந்து கொள்ள முடியுமென அவர் தெரிவித்ததாக சின்குவா செய்திச்சேவை தெரிவித்துள்ளது.

### இளைஞன்...

இதில் பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்க அரிசி ஆலையில் பணிபுரியும் வில்வளை மாதகலைச்சேர்ந்த தங்கராசா பகீரதன் (வயது-30) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

பிரஸ்தாப இளைஞர் பணிக்காக அரிசியாலை நோக்கி சைக்கிளில் வந்தவேளை பண்டத்தரிப்பு சந்திக்கருகில் இளவாலையிலிருந்து யாழ்.நோக்கி பயணித்த தனியார் பேருந்து மோதியதில் உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்துச் சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ)

### கூட்டமைப்பே....

பந்தனும், சுமந்திரனும். இவர்கள் இருவரும் முட்டாள்கள் இல்லை. சம்பந்தன் ஐயா மூத்த அரசியல்வாதி, சுமந்திரன் நேற்று வந்தவர் அரசியலை தற்போதுதான் படிக்கிறார்.

தமிழ் மக்களின்றி ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்த முடியாது என்ற நிலை காணப்பட்ட போதும் நிபந்தனை எதுவும் விதிக்காது ஜனாதிபதி மைத்திரிக்கு ஆதரவளித்து விட்டு இன்று பொறுப்புக் கூறல் என்ற இந்த விடயம் கைவிடப்படுகின்ற நிலைக்கு முழுப் பொறுப்பும் தமிழ் மக்களின் பெரும் தலைவர்கள் எனக் கூறிக் கொள்ளும் இவர்களையே சாரும்.

ஐ.நா. சபையில் பார்வையாளர் பகுதியில் இருந்து விட்டு தீர்மானத்தில் பல நீக்கங்கள் மேற்கொண்டபோது, எமக்கு தீர்மானம் ஒன்று நிறைவேறினால் போதும், அதிலுள்ள விடயங்கள் பற்றி கவலை இல்லை என தெரிவித்தவர்கள், மாகாணசபையில் இனப்படுகொலை தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றிவிட்டு அடுத்த நாள் வந்து இணக்க அரசியலுக்கு போக வேண்டும் என்று நாம் கூறவில்லை நேரத்துக்கு ஏற்ப கதைப்பவர்கள் யார் என்பதை புரியவேண்டும். மக்களுக்கு உண்மையைச் சொல்லவேண்டும்.

அத்தோடு தற்போதுள்ள ஜனாதிபதி கூட தேர்தல் காலத்தில் சிங்கள மக்களின் வாக்குகளைப்பெற போரின் இறுதிக்காலத்தில் தானே 2 வாரங்கள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சராக இருந்தவரெனவும் தானும் இராணுவத்தளபதியும் தான் போரை முடிவுக்கு கொண்டு வந்ததாகவும் புலிகளையும், மக்களையும் அழித்ததில் தனக்குத்தான் பெரிய பங்கு உண்டு எனவும் கூறித்தான் சிங்கள மக்களின் வாக்குகளை பெற்றவர்

ராஜபக்ஷவின் அதேகொள்கையிலிருந்து கொண்டு பேசியவரும், அவருக்கு பின்னால் நிற்கும் சந்திரிக்காகூட தாம்தான் அழித்ததாக கூறும் நிலையில், இந்த அரசு நியமிக்கும் உள்ளூர் விசாரணையையும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள முடியாது.இதை ஏற்றுக் கொள்ளும் தமிழ் தலைவர்களின் செயற்பாடு தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் துரோகமாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(இ,25)

### காத்திரமான...

வெளியாக இருந்த மனித உரிமை மீறல் விசாரணை அறிக்கை 6 மாதத்தின் பின்னர் செப்ரெம்பரில் வெளியாவது மேலும் காத்திரமான .அறிக்கையாகும். என ஆணையாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாது ஒருமுறை மாத்திரமே இவ்வாறு மாற்றம் செய்யக்கூடியதாகவும் இருக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

அதன்படி முன்னர் ஒளித்துமறைத்து ஒரு சிலரே முறைப்பாடுகளை பதிவு செய்தனர். சொற்ப அளவிலான அந்த முறைப்பாடுகளின் அறிக்கை தற்போது வெளியாவதிலும் பார்க்க தற்போதும் எந்த வித பயமும் இன்றி முறைப்பாடுகளை அனுப்பமுடியும். அவ்வாறு வெளிவராத இன்றும் பல மனித உரிமை மீறல்கள் இதனுடன் இணைக்கப்படும் பட்சத்தில் அது மேலும் காத்திரமாக வெளியிடப்படுவதுடன் சர்வதேசத்தின் விசாரணைக்கும் அழுத்தத்திற்கும் அது வழிசமைக்கும் என்பதே எனது கருத்து.

சர்வதேச விசாரணையை கண்டு கொள்ளாதவர்கள் கூட இதனை செப்ரெம்பரில் வெளியிடுங்கள் என தெரிவிப்பது முக்கியமான விடயம் இன்றிலிருந்து செப்ரெம்பர்வரை இந்த அறிக்கை மேலும் மெருகு அடைய இந்த அரசு ஒத்துழைக்குமா? என்பது இதன்மூலம் தெளிவாகும் . இந்த அறிக்கை மார்ச்சில் வருவது அல்லது 3 மாதமோ, 6 மாதமோ தாமதமாக வருவது முக்கியமல்ல. எமது மக்களின் அங்கலாய்ப்புகளுக்கு விடுதலையை கொடுக்கின்ற ஒரு அறிக்கையாக இருக்க வேண்டும். அந்த அறிக்கை வந்தபிறகும் கூட அது நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

புதிய சூழ்நிலையில், இடைஞ்சல் ஏற்படுத்தாத நிலையில் சர்வதேச விசாரணைகளை ஏற்றுக் கொள்கின்றோம். என்று சொல்லியிருக்கும் நிலையில் முறைப்பாடுகளை பதிவு செய்தலில் எந்த வித பயமும் இல்லை இதை உணர்ந்து அனைவரும் சாட்சியங்களை பதிவு செய்யுங்கள் என அழைப்பு விடுத்தார். நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன். (இ,25)

# வவுனியாவில் வாள் வெட்டு; கற்குளத்தில் நால்வர் கைது

(வவுனியா)

வவுனியாவில் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் இடம் பெற்ற வாள் வெட்டுச் சம்பவத் துடன் தொடர்புடைய சந்தேகத் தில் நால்வர் வவுனியா பொலி ஸாரால் கைது செய்யப்பட்டுள் ளனர்.

வவுனியா தெற்கிலுப்பைக் குளம் கிராமத்தைச் சேர்ந்த 3 இளைஞர்கள் மீது ஆச்சிபுர த்தைச் சேர்ந்த சிலர் வாளால் வெட்டிக் காயப்படுத்திய நிலை யில் தொடர்ந்தும் அம் மூவரும் வவுனியா பொது வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் இச் சம்பவத் துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வசந்த விக்கிரமசிங்கவின் அறிவுறுத்த லுக்கு அமைய பதில் தலைமை பொலிஸ் அதிகாரி பொலிஸ் பரிசோதகர் அனுரவின் மேற் பார்வையில் பொலிஸ் சார்ஜ ன்ட் விஜயரத்தின, ஜெயப்பிர காஸ், அத்துல, திசாநாயக, திலீப் உள்ளடங்கிய பொலிஸ் குழு கற்குளம் பிரதேசத்தில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்திருந்தது.

இதனையடுத்து அவர்களை வவுனியா நீதிமன்றில் ஆஜர் படுத்தியதை அடுத்து எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை விளக்க மறியலில் வைக்க நீதவான் உத் தரவிட்டுள்ளார். (70)

# மீனவர் பிரச்சினைக்கு தீர்வு; வடக்கு மீனவர்கள் வரவேற்பு

இலங்கை, இந்திய மீனவர் கள் தொடர்பான பிரச்சினைக் குத் தீர்வு காண்பதற்காக இந் திய - இலங்கை அரச தலைவர் களிடையே நடைபெற்ற பேச்சு வார்த்தையில் எட்டப்பட்டுள்ள முடிவை வடபகுதி மீனவர்கள் வரவேற்றுள்ளனர்.

இதுபற்றி கருத்து வெளியி ட்ட மன்னார் மாவட்ட மீனவர் சம்மேளனத் தலைவர் அல்பட் ஜஸ்டின் சொய்சா, இரு தரப்பு மீனவர் பிரதிநிதிகள் தொடர்ந்து பேச்சுக்கள் நடத்துவதை இரு நாட்டு அரசாங்கங்களும் ஊக்கு விக்கும் என்பதை ஆரோக்கிய மான ஒரு விடயமாகவே தாங் கள் பார்ப்பதாகக் குறிப்பிட்டார்.

ஏற்கனவே நடத்தப்பட்ட பேச் சுவார்த்தைகளில், இந்திய மீன வர்கள் எல்லை தாண்டி வருவ தைத் தாங்கள் அனுமதிக்கப் போவதில்லை என்பதை வலியு றுத்தியிருந்ததாகவும், அந்த நிலைப்பாட்டின் அடிப்படையி லேயே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண தாங்கள் விரும்புவ தாகவும் தெரிவித்தார்.

இதற்கிடையில், 1984 - 1985 மற்றும் 1989 - 1990 ஆகிய வருடங்களில் இரண்டு கட்ட மாக வடப்குதியில் இருந்து மக்கள் யுத்தமோதல்கள் கார ணமாக பாதுகாப்பு தேடி தமி ழகத்தில் தஞ்சம் புகுந்தபோது, அவர்கள் வடபகுதி மீனவர் களுடைய படகுகளிலேயே இராமேஸ்வரம், தனுஸ்கோடி, தங்கச்சிமடம் போன்ற கடலோ ரப் பகுதிகளுக்குச் சென்றதாக வும், அப்போது அங்கிருந்த சுங்கத் திணைக்கள அதிகாரி களினால் பொறுப்பேற்கப்பட்ட படகுகள் இன்னும் திருப்பி கையளிக்கப்படவில்லை என்றும், இவற்றுக்குப் பதிலாக கடற்றொழில் உபகரணங்கள் அல்லது வேறு படகுகள் வழங் கப்பட வேண்டும் என்று தாங் கள் தமிழக அரசிடம் கோருவ தாகவும் ஜஸ்டின் சொய்சா கூறினார்.

இந்தப் படகுகளை இடம்பெ யர்ந்த மீனவர்கள் நாடு திரும் பும்போது திருப்பித் தருவதாக அப்போது தமிழக சுங்கத் திணைக்கள அதிகாரிகள் தெரி வித்திருந்த போதிலும், தாங்கள் சொந்த ஊருக்குத் திரும்பி வரு கையில் மாவட்ட ஆட்சியாளர், தங்களைத் தமது சொந்தப் படகுகளில் அனுப்பி வைப்பது பாதுகாப்பற்றது எனத் தெரிவி த்து, பின்னர் அந்தப் படகுகள் வழங்கப்படும் எனத் தெரிவித் திருந்த போதிலும், அவ்வாறு தமது படகுகள் திருப்பி வழங் கப்படாத காரணத்தினாலேயே இந்தக் கோரிக்கையை முன் வைத்திருப்பதாக அவர் குறிப் பிட்டார்.

# கூட்டமைப்பில் இணையுமாறு கஜேந்திரகுமாருக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பில் தயவுசெய்து வந்து சேருங் கள் என கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு அழைப்பு விடுத்தார் நாடாளுமன்ற உறுப் பினர் சுமந்திரன்.

நேற்று யாழில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இந்த அழைப்பை விடுத்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பில் இருந்து சம்பந்தன் விலக் கப்பட்டால் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூட்டமைப்பில் சேரத் தயார் எனத் தெரிவித் துள்ளார்.

இதை நான் வரவேற்கின் றேன். தயவு செய்து வந்து சேருங்கள். அவரை, இவரை விலக்க வேண்டும் என்ற முன் நிபந்தனைகளை விட்டு விட்டு வந்து சேருங்கள் விமர்சனம் தேவையில்லை.

2010 ஆண்டு சம்பந்தனைத் தோற்கடிக்க வேண்டும் என்று தேர்தலில் போட்டியிட்டவர் தோற்றுப் போனார். ஜனாதிப தித் தேர்தலைப் பகிஷ்கரிக் குமாறு தெரிவித்தார். ஆனால் மக்கள் என்றுமில்லாதவாறு வாக்களித்தனர்.

மக்களின் ஜனநாயகத் தீர்ப் புக்கு மதிப்பளிப்பதாக இருந் தால் இந்தத் தலைமை விலக வேண்டும் என்பதை விடுத்து தமிழ் மக்கள் உங்களை அங்கீ கரிக்காத நிலையில் அவர்கள் அங்கீகரித்துள்ள எங்களிடம் வந்து சேருங்கள் இரு கரத்தா லும் வரவேற்று ஏற்றுக் கொள் வோம். தமிழ் மக்களின் நலன் கருதி கூட்டமைப்பில் சேர்ந்து கொண்டால் போதும். கொள்கை வேறுபாடு என்று சொன்னவர் இப்போது தலைவரை நீக்கி னால் வருவேன் என்று அறிக் கைகள் விட்டுள்ளார். ஆகையி னால் கொள்கையில் மாறியுள் ளார் போலும். ஆனாலும் தலை வரை மாற்ற முடியாது. எங்க ளுடன் வந்து சேர்ந்து இனியும் எங்களது ஐக்கியத்துக்கு பங் கம் ஏற்படுத்தாது செயற்பட வேண்டுமென அறைகூவல் விடுப்பதாகத் தெரிவித்துள்ளார். (இ, 25)

# கொள்ளையரின் வாள்வெட்டில் வயோதிப தம்பதிகள் படுகாயம்

ஏ-9 வீதியில் யாழ்.செயலகத் திற்கு அருகிலுள்ள வீட்டில் தனி மையில் இருந்த வயோதிபத் தம்பதிகள் மீது கொள்ளையர் கள் மேற்கொண்ட வாள்வெட் டில் இருவரும் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத் திய சாலையில் அனுமதிக்கப்ப ட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் எஸ்.யோகேஸ்வரன் (வயது-82) அவரது மனைவியான யோ.பூர் ணிகா (வயது-72) ஆகிய இரு வருமே படுகாயமடைந்தவர்க ளாவர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு வீட்டிற்கு வெளியே சத்தம் கேட்பதை உணர்ந்த இவர்கள் கைபேசி வெளிச்சத்துடன் கத வைத் திறந்து பார்த்த வேளை இருவர் நிற்பதை அவதானித் தனர். இதன் போது அவர்கள் கூக்குரலிடவே இருவரையும் வெட்டிக் காயப்படுத்திவிட்டு அவர்கள் தப்பிச் சென்றனர்.

இது தொடர்பான விசார ணைகளை யாழ்ப்பாண பொலி ஸார் மேற்கொண்டு வருகின் றனர். (25)

# மங்கள சீனாவிற்கு

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற் கொண்டு சீனா செல்லவுள்ளார்.

இலங்கை-சீனா இடையே யான உறவை மேம்படுத்திக் கொள்வதே அமைச்சரின் விஜ யத்தின் நோக்கமென அறிவிக் கப்பட்டுள்ளது.

அதன்படி எதிர்வரும் 27 ஆம் திகதி சீனா செல்லும் மங்கள சமரவீர இரண்டு நாள் அங்கு தங்கியிருந்து முக்கிய அதி காரிகளை சந்தித்து பேச்சுவார் த்தை நடத்தவுள்ளார்.

சீன வெளிவிவகார அமைச்ச ரின் அழைப்பின் பேரில் மங்கள சமரவீர சீனா செல்லவுள்ளார்.

# சிவன் கோவிலுக்கு சென்றவரை காணவில்லையென முறைப்பாடு

## உடமைகள் வீதியில் கண்டெடுப்பு

(பருத்தித்துறை)

சிவன்கோவிலுக்கு செல்வதாகக் கூறிச்சென்றவரின் உடமை கள் வீதியோரமாக கிடந்த நிலையில் அவரைக்காணவில்லை யென வல்வெட்டித்துறை பொலிஸில் முறையிடப்பட்டுள் ளது.

கரணவாய், நவிண்டில் பகுதியைச் சேர்ந்த தையல் வேலை செய்பவரான தயானந்தன் ராசன்(வயது-39) என்பவரே காணா மற்போயுள்ளார். இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவ தாவது,

நேற்றுமாலை 4.00 மணியளவில் வல்வெட்டித்துறை சிவன் கோவிலுக்குச் செல்வதாகத் தனது துவிச்சக்கர வண்டியில் சென்றுள்ளார். எனினும் மாலை 6.00 மணியளவில் இவர் சென்ற துவிச்சக்கர வண்டி பொலிகண்டி கந்தவன கடவைக்கு அருகி லுள்ள பாழடைந்த வீட்டின் அருகே கிடந்துள்ளது. அங்கு அவ ரின் அடையாள அட்டை, பேஸ், கையடக்கத் தொலைபேசி என்பனவும் கிடந்துள்ளன.

இது தொடர்பாக அப்பகுதியில் விளையாட்டில் ஈடுபட்ட வர்கள் வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு அறிவித்ததை அடு த்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகைதந்து விசாரணை களை மேற்கொண்டுள்ளனர். இவரது உறவினர்களும் கண்டெ டுக்கப்பட்ட உடமைகள் அவருடையதுதானென உறுதிப்படுத் தியுள்ளனர். (116, 18)

# தமிழருக்கு சிறை

பிரித்தானியாவில் யுவதி ஒரு வரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின்பேரில் இலங்கையருக்கு ஐந்தரை வருட சிறைத்தண்டனையும் அதன்பின்னர் அவரை இலங் கைக்கு நாடு கடத்தும் உத்தர வும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

35வயதான தமிழரான இவர் ஸ்டேசன் ரோட், போட்ஸ்லேட் என்ற இடத்தில் வசித்து வருகி றார்.

சில காலத்துக்கு முன்னர், இரவு கேளிக்கையகம் ஒன்றில் சந்தித்த யுவதியையே இலங் கையரான தமிழர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தி யுள்ளார்.

# சுதந்திரக் கட்சியை அழைத்து புதிய அரசை அமைக்கலாம்

## நிமால் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி விரும்பினால் சுத ந்திரக் கட்சியை அழைத்து புதிய அரசாங்கமொன்றை அமைத்து 100 நாள் வேலைத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல முடியும் என எதிர்க் கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரி வித்தார்.

தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கை யிலேயே அவர் இதனைக் கூறி னார்.

அமைச்சர் ஜோன் அமரது ங்கவுக்கு எதிராக நம்பிக்கை யில்லாப் பிரேரணையை நாம் கொண்டு வந்து அதனை நிறை வேற்றினால் பின்னர், அவர் தனது பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும். இது தான் ஒழுங்கு.

தற்போதைய நாட்டுச் சட்டத் தின்படி பிரதமருக்கு நாடாளு மன்றத்தைக் கலைக்க அதிகாரம் இல்லை. அந்த அதிகாரம் ஜனா திபதிக்கே உள்ளது. ஜனாதிபதி விரும்பினால், தேர்தலுக்கு செல் லாமல் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிடம் அரசாங்கத்தை அமைக்குமாறு கூறலாம் எனவும் எதிர்க் கட்சித் தலைவர் மேலும் குறிப்பிட்டார்.

# முன்னாள் பணிப்பாளர் கைது

ஜனாதிபதி செயலகத்தின் முன்னாள் போக்குவரத்துப் பணிப் பாளர் கீர்த்தி சமரசிங்ஹ நேற்றுக் காலை கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன, ஊடகவியலா ளர் சந்திப்பின் போது தெரிவித் தார்.

கொழும்பு மஜிஸ்திரேட் நீதிம ன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப் பட்டபோது, இன்று வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஜனாதிபதி செயலகத்திற்கு சொந்தமான மூன்று வாகனங்கள் தொடர்பில் உரிய தகவல்களை சமர்ப்பிக்காமையினாலேயே அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு ள்ளது.

# கைதிகள் படுகொலை வெலிக்கடையில் ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

வெலிக்கடையில் 2012ஆம் ஆண்டு இடம்பெற்ற கைதிகள் படுகொலைக்கு எதிராக வெலிக்கடை சிறைச்சாலைக்கு முன்னால் நேற்றுக்காலை எதிர் ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

கைதிகள் படுகொலைக்கு எதிரான மக்கள் ஒன்றியம் குறி த்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்ததுடன், கைதிகளை கொலை செய்தோரை சட்டத் திற்குமுன் நிறுத்துமாறு கோரியே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக் கப்பட்டது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 பெப்ரவரி 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.